₹40

வெற்றியின்

தமிழில்

TNPSC GATEWAYY

டிஎன்பிஎஸ்சி தேர்வுக்கான மாத இதழ்

நவம்பர்-2019

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
ISO 9001 : 2015
SINCE:2011



- அயோத்தி தீர்ப்பு
- ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் பிரிப்பு
- காற்றுமாசு : ஆக்ஸிஜன் பார்
- அம்மா ஆம்புலன்ஸ்
- தேசிய ஒற்றுமை விருது
- பருவகால அவசரநிலை
- ஜல் ஜீவன் மிஷன்

VETRII IAS STUDY CIRCLE

TNPSC

நடப்பு நிகழ்வுகள்

நவம்பர் - 2019

ISO 9001 : 2015

An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011

Head Office

Old No.52, New No.1, 9th Street, F Block, 1st Avenue Main Road,

(Near Istha siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600102.

Phone: 044-2626 5326 | 98844 72636 | 98844 21666 | 98844 32666

Branches

SALEM

No.189/1, Meyanoor Road, Near ARRS Multiplex, (Near Salem New bus Stand), Opp. Venkateshwara Complex, Salem - 636004.

0427-2330307 | 95001 22022

KOVAI

No.347, D.S.Complex (3rd floor), Nehru Street,Near Gandhipuram Central Bus Stand, Ramnagar, Kovai - 9

75021 65390

Educarreerr Location

Vivekanandha Educational Institutions for Women,

Elayampalayam, Tiruchengode - TK Namakkal District - 637 205.

04288 - 234670 | 91 94437 34670

Patrician College of Arts and Science,

3, Canal Bank Rd, Gandhi Nagar, Opposite to Kotturpuram Railway Station, Adyar, Chennai - 600020.

044 - 24401362 | 044 - 24426913

Sree Saraswathi Thyagaraja College

Palani Road, Thippampatti, Pollachi - 642 107

73737 66550 | 94432 66008 | 90951 66009

இயக்குநர் வாழ்த்து மடல்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.
பொருள் :
ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்தபடியே செயல்புரிவதில்
உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுபடுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டு அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு. சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ். பயிற்சி நிறுவனம்

Published by

VETRII IAS STUDY CIRCLE
F Block New No. 1, 9th Street, 1st Avenue main Road, Chinthamani, Anna Nagar (E), Chennai – 102.
Phone: 044 – 26265326 / 9600124042 / 9840097666
www.vetriias.com
E-Mail: vetriiias@gmail.com / vetriiias2011@gmail.com / vetriiias2018@gmail.com
Feedback: vetriiiasmaterials@gmail.com

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

பொருளடக்கம்

1 - 39 **வரலாறு**

▪முக்கிய தினங்கள் ▪உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ▪பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ▪சிறந்த நபர்கள் ▪விளையாட்டு ▪புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ▪விருதுகள் மற்றும் கௌரவங்கள் ▪கலாச்சாரம் ▪சமீபத்திய வரலாற்று நகழ்வு ▪இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ▪நியமனங்கள்

40- 46 **அரசியல் அறிவியல்**

▪இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ▪சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ▪பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ▪அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ▪மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

47- 50 **புவியியல்**

▪சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

51 - 54 **பொருளாதாரம்**

▪புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

55 - 54 **அறிவியல்**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

64 **தினசரி தேசிய நிகழ்வு**

88 **சர்வதேச நிகழ்வு**



92 **தமிழ்நாடு**

100 **வினா–விடை**

1. வரலாறு

1.1 முக்கிய தினங்கள்

அக்டோபர் 24	58வது இந்திய திபெத்திய எல்லைக் காவல்துறை எழுச்சி தினம்	
அக்டோபர் 24 முதல் 31 வரை	ஏழாவது உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் இலக்கிய வாரம்	மையக்கருத்து: Media and Information Literate Citizens: Informed, Engaged Empowered.
அக்டோபர் 28 முதல் நவம்பர் 2 வரை	ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வார தினம்	மையக்கருத்து 2019 : Integrity – a way of life
அக்டோபர் 20	சர்வதேச சமையல்காரர் தினம்	மையக்கருத்து: “Healthy Food Works”.
அக்டோபர் 29	சர்வதேச இணையதள தினம்	சர்வதேச இணையதள தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 29 அன்று கடைபிடிக்கப்படுகிறது. 1969ஆம் ஆண்டு அமெரிக்காவின், கலிபோர்னியா மாகாணத்தில் கணினி மூலம் முதல் மின்னணுச் செய்தி பெறப்பட்டது. மேலும் இந்தாண்டு இத்தினத்தின் 50ஆவது ஆண்டு நினைவு தினம் கடைபிடிக்கப்படுகிறது.
அக்டோபர் 29	சர்வதேசப் பக்கவாதம் தினம்	ஒவ்வொரு ஆண்டும் சர்வதேசப் பக்கவாதம் தினம் அக்டோபர் 29 அன்று அனுசரிக்கப்படுகிறது. உலக பக்கவாத அமைப்பு 2006ஆம் ஆண்டு சர்வதேச பக்கவாதம் தினம் முதல்முறையாக அனுசரித்தது. 2010ஆம் ஆண்டு பொது சுகாதார அவசரநிலை என்று அறிவிக்கப்பட்டது. உலகப் பக்கவாத அமைப்பு ”2019 ஆம் ஆண்டை ”Don’t Be The One” என்றும் பக்கவாதம் நோயில் இருந்து காக்கவும், நான்கில் ஒரு நபர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ளது.

அக்டோபர் 29	ஒடிசா பேரிடர் தயாரிப்பு தினம்	மையக்கருத்து 2019: *"Empowering Community for Disaster Resilience".*
அக்டோபர் 30	உலகச் சிக்கன தினம்	மையக்கருத்து 2019: *"Savings Give Life a Gift".*
அக்டோபர் 31	சத்தீஸ்கர் தின விழா	கடந்த 2000-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் தேதி மத்தியப் பிரதேசத்தில் இருந்து பிரித்து சத்தீஸ்கர் மாநிலம் உருவாக்கப்பட்டது.
அக்டோபர் 31	தேசிய ஒற்றுமை தினம்	கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் வல்லபாய் படேலின் பிறந்த தினமான அக்டோபர் 31-ஆம் தேதி ஆண்டுதோறும் தேசிய ஒற்றுமை தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
அக்டோபர் 31	சர்வதேச நகர தினம்	உலக நகர தினத்தின் பொது மையக்கருத்து: *Better City, Life.* ***2019 மையக்கருத்து:*** *changing the world: Innovaitons and better life for future generaions.*
அக்டோபர் 31	73வது காலாட்படை தினம்	
நவம்பர் 1	தமிழ்நாடு தினம்	மெட்ராஸ் மாகாணத்தை, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று பெயர் மாற்றப்பட்டதை நினைவுகூரும் வகையில் தமிழ்நாடு தினக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. மொழிவாரி மாநிலங்களாக மெட்ராஸ் மாகாணம் என்பது 'மெட்ராஸ் ஸ்டேட்', ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1 -இல் பிரிக்கப்பட்டது.
நவம்பர் 1	உலக சைவர்கள் *(Vegan)* தினம்	
நவம்பர் 2	ஊடக வியலாளர் களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச நாள்	
நவம்பர் 5	உலக சுனாமி விழிப்புணர்வு தினம்	இந்தத் தினத்தின் நோக்கம் பேரிடர்க் காலங்களில் பேரழிவுச் சேதங்கள் குறைப்பது ஆகும்
நவம்பர் 7	குழந்தைப் பாதுகாப்பு தினம்	
நவம்பர் 7	தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம்	
நவம்பர் 8	சர்வதேச கதிரியக்க தினம்	மையக்கருத்து : *"Sports imaging"*
நவம்பர் 9	தேசிய சட்டச் சேவை தினம்	
நவம்பர் 10	அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான உலக அறிவியல் தினம்	*"Open Science, leaving No one behind".*

நவம்பர் 11	தேசிய கல்வி தினம்	இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் அபுல் கலாம் ஆசாத் பிறந்தநாள், தேசியக் கல்வி தினமாக கொண்டாடப்படுகிறது. அபுல் கலாம் ஆசாத்தின் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில், கடந்த 2008ஆம் செப்டம்பர் 11ஆம் தேதி, மத்திய மனிதவளத்துறை அமைச்சகம் அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்தநாளைத் தேசியக் கல்வி நாளாக அறிவித்தது. இதனையடுத்து 2008 முதல் இன்று வரையில், ஒவ்வொரு ஆண்டும் அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளான நவம்பர் 11ஆம் தேதி, தேசியக் கல்வி தினமாக கொண்டாடப்படுகிறது.
நவம்பர் 12	உலக நிமோனியா தினம்	*"Health lungs for all"*
நவம்பர் 12	பொது ஒளிபரப்பு சேவை தினம்	
நவம்பர் 13	உலகக் கருணை தினம்	*Empathy, encouraging People across the globe to better understand "The pains of others" and touch their lives "Positively".*
நவம்பர் 14	உலகச் சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினம்	உலகச் சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினம் நவம்பர் 14 கடைப்பிடிக்கப்படுகிறது. மையக்கருத்து : *'The Family and Diabetes'.*
நவம்பர் 16	தேசியப் பத்திரிகை தினம்	
நவம்பர் 16	சர்வதேச சகிப்புத் தன்மை தினம்	
நவம்பர் 17	சாலைப் போக்குவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நினைவு தினம்	மையக்கருத்து : *"Life is not a Car Part"*
நவம்பர் 18	தேசிய இயற்கை மருத்துவ தினம்	
நவம்பர் 18 - 24	உலக ஆண்டிபயாடிக் விழிப்புணர்வு வாரம்	மையக்கருத்து *2019: Be Antibiotic Smart, we can help in mitigating the spread of AMR.*
நவம்பர் 19	உலகக் கழிப்பறை தினம்	மையக்கருத்து : *Leaving No One Behind.*

நவம்பர் 19-25	உலக மரபு வாரம்	உலக மரபு வாரம், ஒவ்வொரு ஆண்டும், நவம்பர் 16 முதல் 25 வரை கொண்டாடப்படுகிறது. ஐ.நா., சபையின் கலை, பண்பாட்டு அமைப்பான, "யுனெஸ்கோ" இந்த வாரத்தை அறிவித்தது. இந்தியாவில் 37 யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய இடங்கள் இந்தியாவில் உள்ளன. 29 கலாச்சார இடங்கள் (Cultural), 7 இயற்கை இடங்கள் (Natural) மற்றும் 1 கலப்பு தளம் (Mixed Site) உள்ளடக்கியது.
நவம்பர் 19	சர்வதேச ஆண்கள் தினம்	மையக்கருத்து : "Making a Difference for Men and Boys".
நவம்பர் 19	பெண்கள் தொழில்முனைவோர்கள் தினம்	
நவம்பர் 19	தேசிய ஒருங்கிணைப்பு தினம்	மையக் கருத்து : Secularism, Anti-Communalism and Non-Violence
நவம்பர் 20	சர்வதேச குழந்தைகள் தினம்	
நவம்பர் 20	உலக நுரையீரல் நோய் தடுப்பு தினம்	மையக் கருத்து 2019: "All Together to End COPD"
நவம்பர் 21	சர்வதேச திருநங்கைகள் நினைவு தினம்	
நவம்பர் 21	உலக மீனவர் தினம்	
நவம்பர் 21	உலகத் தொலைபேசி தினம்	
நவம்பர் 21	உலகத் தத்துவ தினம் – நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமை	
நவம்பர் 21	யு.ஜி.சி பள்ளிகளுக்கு அரசியல் அமைப்பு தினத்தை கொண்டாட வலியுறுத்தி உள்ளது	பல்கலைக்கழக மாநில ஆணையம் உயர்கல்வி நிறுவனங்களுக்கு நவம்பர் 26 அன்று அரசியல் அமைப்பு தினத்தை கொண்டாட வலியுறுத்தி உள்ளது. இதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களுக்கு அரசியலமைப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது. கடந்த 1950 ஜனவரி 26 அன்று இந்திய அரசியலமைப்பினை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது
நவம்பர் 22	71வது தேசிய மாணவர் படை தினம்	

1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

"Shakti – 2019 பயிற்சி"

- இந்தியா மற்றும் பிரெஞ்ச் நாடுகளுக்கு இடையேயான பயங்கரவாதத்திற்கு எதிரான போர்ப் பயிற்சி 'Shakti 2019" ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மகாஜன் பில்ட் பயரிங் பகுதியில் அக்டோபர் 31 முதல் தொடங்கி நவம்பர் 13 வரை நடைபெற்றது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் அரை பாலைவன நிலப்பரப்பில் நடைபெற்ற பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியா மற்றும் பிரெஞ்ச் படைகள் கவனம் செலுத்தியன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்பயிற்சி 2011ஆம் ஆண்டு தொடங்கியது.

" ஆபரேஷன் மா" திட்டம்

- காஷ்மீரில் தீவிரவாதத்தை ஒழிக்க மத்திய அரசும் ராணுவமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. உள்ளூர்த் தீவிரவாதிகளை உளவியல் ரீதியாக குடும்பப் பாசத்தின் மூலம் தீவிரவாதத்தைக் கைவிடச் செய்ய ராணுவத்தினர் முயன்று வருகின்றனர். இந்தி மொழியில் 'மா' என்றால் அம்மா என்று அர்த்தம். அதனால் அம்மாவைக் குறிக்கும் வகையில் 'ஆபரேஷன் மா' என்ற இத்திட்டத்துக்குப் பெயர் சூட்டியுள்ளனர்.
- இந்த ஆண்டு இதுவரை 50க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் தீவிரவாதத்தைக் கைவிட்டுக் குடும்பத்தாருடன் இணைந்துள்ளனர். இத்தகவலை ராணுவ லெப்டினன்ட் ஜெனரல் கன்வல்ஜீத் சிங் தில்லான் ஸ்ரீநகரில் தெரிவித்தார்.

இந்தியா-சவூதி முதல் கடற்படை கூட்டுப் பயிற்சி

- இந்தியா-சவூதி அரேபியா இடையே முதல் கடற்படை கூட்டுப் பயிற்சி அடுத்த ஆண்டு (2020) மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ருத்ராஷிலா - வெள்ளை - நீர் ராய்ப்டிங் பயணம்

- ஜோத்பூர் ராணுவ நிலையத்தில் "ருத்ராஷிலா" என்று அழைக்கப்படும் வெள்ளை நீர் ராஃப்டிங் பயணம் லெப்டினெட் ஜெனரல் வி.எஸ்.ஸ்ரீனிவாஸால் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- பயணத்தின் நோக்கம் வீரர்கள் மன உறுதியுடன் சமாளிக்கத் தயார்படுத்துவதாகும். "ஸ்வச் பாரத்" பிரச்சாரம் மற்றும் நதி சூழல் அமைப்பைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் சமூகப் பிரச்சனைகள் குறித்தும் இந்தக் குழு விழிப்புணர்வைப் பரப்புகிறது.

முதல் பிம்ஸ்டெக் துறைமுக மாநாடு விசாகப்பட்டினம்

- முதல் பிம்ஸ்டெக் துறைமுக மாநாடு விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டை மத்திய கடற்படைத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது.
- *BIMSTEC – Bay of Bengal initiative for multispectral Technical and Economic Corporation* என்பது சர்வதேச அமைப்பு மற்றும் தென்கிழக்கு ஆசியா, தென்ஆசியா நாடுகள் இதில் இடம்பெற்றுள்ளன.
- இந்தியாவின் வளர்ச்சி இந்த பகுதியில் முக்கியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நலன்களுக்கான ஒரு பாதையாக இந்த மாநாடு இருக்கும்.
- முதலீடுகளுக்கான வாய்ப்புகள் மற்றும் உற்பத்திக்கான சிறந்த செயல்பாடுகள் துறைமுகத்தின் பாதுகாப்புகள் பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. இதில் துறைமுகத் தொழில்துறை மேம்பாடு மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக்கு இந்த மாநாடு வழிவகுத்தது.

டி.ஆர்.டி.ஓ. வெடிமருந்து வளாகம் திறப்பு

- புனேவில் உயர் ஆற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகத்தில், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பால், வெடிமருந்து வளாகம் தொடங்கி வைக்கப்பட்டது.
- டி.ஆர்.டி.ஓ திட்டங்களுக்குத் தேவையான வெடி மருந்து தயாரிக்க வடிவமைத்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவை இந்த ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படும்.

எச்.இ.எம்.ஆர்.எல்

- இதன் மூலம் ராக்கெட், பைரோடெக்னிக் சாதனங்கள், துப்பாக்கி, உயர் வெடிப்பொருள் தயாரிக்கப்படுகின்றன.
- மேலும் பிரித்வி, அக்னி நாக், ஆகாஷ், பினாக் மற்றும் இதர ஆயுதங்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.
- இந்தத் தொழில்நுட்பத்தை புனேவின் அர்டன்ஸ் தொழிற்சாலைக்கு மாற்றியுள்ளது.

ReSAREX-2019

- இந்தியக் கடலோர காவல்படை கோவா கடற்கரையில் "பிராந்திய அளவிலான தேடல் மற்றும் மீட்புப் பட்டறை மற்றும் உடற்பயிற்சி 2019" *ReSAREX-19 (Regional level search and Rescue workshop and Exercise-2019)*ஐ நடத்தியது.
- இந்தியக் கடலோரக் காவல்படையின் செயல் திறன் மற்றும் ஆயுதத்தைச் சோதிக்க இரண்டு நாள் நிகழ்வு கடலோரக் காவல்படை மாவட்டத் தலைமையகம்-11 (கோவா) ஏற்பாடு செய்தது.

INDRA 2019 பயிற்சி

- முதல் கூட்டு முப்படைப் பயிற்சிஇந்தியா மற்றும் ரஷ்யா நாடுகளுக்கு இடையே "*INDRA 2019*" டிசம்பர் 10 ஆம் தேதி முதல் 19 வரை நடைபெற உள்ளது.
- இந்திய இராணுவம், விமானப்படை, கப்பற்படை ஆகியவை இணைந்து இப்பயிற்சியில் பங்கேற்க உள்ளன. இப்பயிற்சிக்கான மாநாடு நவம்பர் 1 முதல் 10 வரை இரண்டு கட்டமாக நடைபெற்றது.

SCOJTEX-2019 கூட்டுப்பயிற்சி 2019

- நகர்ப்புறப் பூகம்பத் தேடல் மற்றும் மீட்புக்கான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டுப் பயிற்சி *'SCOJtExd-2019'* என்ற பெயரில் நவம்பர் 04 முதல் 7 வரை புது தில்லி டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நடைபெற்றது.
- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று இந்த நிகழ்வைத் தொடங்கி வைத்தார்.
- இந்த கூட்டுப் பயிற்சியைத் தேசியப் பேரிடர் மீட்புப் படை நடத்தியது. அனுபவம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் இதன் நோக்கமாகும்.

ஐ.சி.ஜி.எஸ் அனிபெசன்ட்

- கார்டன் ஆராய்ச்சி கப்பல் கட்டும் மற்றும் பொறியாளர் நிறுவனம் தயாரித்த அதிவேகம் கொண்ட ரோந்துக் கப்பல் ஐ.சி.ஜி.எஸ். அனிபெசன்ட் என்ற கப்பல் கொல்கத்தாவில் உள்ள இந்தியக் கடலோரக் காவல்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஐந்து கப்பல்கள் கட்டப்பட வேண்டும் என்ற நிலையில் இது இரண்டாவது கப்பல் ஆகும்.

ஐ.சி.ஜி.எஸ் அனிபெசன்ட்

- நடுத்தர வரம்பு கொண்டது, 50மீ நீளம், 7.5மீ அகலம், 308டன் இடப்பெயர்ச்சி கொண்டது.
- இதன் அதிகபட்ச வேகம் 34Knots ஒட்டுமொத்த 1500 கடல் மைல்கள் தொலைவு கொண்டது.

இந்தியா - உஸ்பெகிஸ்தான் முதல் கூட்டு இராணுவப் பயிற்சி

- இந்தியா-உஸ்பெகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான முதல் கூட்டு இராணுவப் பயிற்சி *Dushik 2019* என்ற பெயரில் உஸ்பெகிஸ்தான் நாட்டின் தாஷ்கண்ட் பகுதியின் சிரிச்சிக் பயிற்சி பகுதியில் நடைபெற்றது. இப்பயிற்சி நவம்பர் 13 வரை நடைபெற்றது. இப்பயிற்சியின் போது இந்திய இராணுவ குழுவால் உபெகிஸ்தான் இராணுவக் குழுவுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மைத்ரீ திவாஸ் கொண்டாட்டம்

- அருணாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்ற மைத்ரீ திவாஸ் கொண்டாட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார்.
- மைத்ரீ திவாஸ் (சிவில்-ராணுவம் நட்பு) கொண்டாட்டம் கியால்வா சாங்யாங் க்யாட்சோ (Gyalwa Tsangyang Gyatso) என்ற இடத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.
- இந்த மைத்ரீ திவாஸ் 11வது சிவில் ராணுவக் கொண்டாட்டமாகும்.
- சியாங் மாவட்டத்தில் அருணாச்சல பிரதேச சிசேரி நதி பாலம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை 52ஐ ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.

2025க்குள் ரூ.35,000 கோடி மதிப்பில் ராணுவத் தளவாட ஏற்றுமதிக்கு இலக்கு

- வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் 5 பில்லியன் டாலர் (ரூ. 35 ஆயிரம் கோடி) அளவில் ராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்ய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தென்கிழக்கு ஆசிய நாடுகள் (ஆசியான்) மற்றும் அதன் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்தியா உள்ளிட்ட 8 நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக ராஜ்நாத் சிங் தாய்லாந்து சென்றார். தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் 'இந்தியாவின் எழுச்சி' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவித்தார்

இந்திய ராணுவம் நடத்தும் மிகப்பெரிய போர்ப் பயிற்சி

- இந்திய ராணுவத்தின் சுதர்சன் சக்கரா படைப்பிரிவு ராஜஸ்தான் மாநிலம் பார்மரில் உள்ள பாலைவனப் பகுதியில் மிகப்பெரிய போர் ஒத்திகையை நடத்தியது. இதில் நாற்பதாயிரம் படைவீரர்கள் பங்கேற்றனர். இதில் பீரங்கிகள், ஏவுகணை செலுத்தும் வாகனங்கள், ராணுவ ஹெலிகாப்டர்கள் ஆகியவை பயன்படுத்தப்படுத்தப்பட்டன.

இந்திய மற்றும் கத்தார் நாடுகளுக்கு இடையேயான கடற்படைப் பயிற்சி

- இந்திய மற்றும் கத்தார் நாடுகளுக்கு இடையேயான கடற்படைப் பயிற்சி Za'ir-Al-Bahr (Roar of the Sea) என்ற பெயரில் நடைபெற்றது. இரு நாடுகளுக்கு இடையேயான கடற்படையைப் பலப்படுத்த பயிற்சி பெறுவது இதன் நோக்கமாகும்.

Tiger TRIUMP

- இந்திய மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கு இடையேயான முதல் முத்தரப்புப் பயிற்சியான 'Tiger TRIUMP" என்ற பெயரில் நடைபெற்றது. இப்பயிற்சி விசாகப்பட்டினம் மற்றும் காக்கிநாடா நகரங்களுக்கு இடையே நடைபெற்றது. களப்பயிற்சி மற்றும் பேரழிவுப் காலங்களில் மனிதர்களுக்கு உதவுதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தேசிய விசாரணை நிறுவனம் நடத்தும் நான்கு நாடுகளில் முதல் பயங்கரவாதத் தடுப்புப் பயிற்சி

- இந்திய தேசிய விசாரணை நிறுவனம் நான்கு நாடுகளுக்கு இடையேயான முதல் பயங்கரவாதத்திற்கு எதிரான "Counter Terrorism Table Top Exercise" என்ற பெயரில் நடத்திக் கொண்டு இருக்கிறது. இதில் ஜப்பான், இந்தியா. அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகள் பங்கேற்கின்றன.
- வளர்ந்து வரும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக இந்நாடுகளுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

பாதுகாப்புக் கண்டுபிடிப்பு மாநாடு

- பாதுகாப்புத்துறை அமைச்சகம் டெல்லியில் "Def-connect" க்கு ஏற்பாடு செய்தது. இதன் நோக்கம் பாதுகாப்பில் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கான சாதனைகள் பற்றிக் காட்சிப்படுத்தப்படுவது ஆகும்.

இரவுச் சோதனையில் அக்னி 2 ஏவுகணை வெற்றி

- *'அக்னி 2' ஏவுகணை முதல் முறையாக இரவில் ஏவப்பட்டு நவம்பர் 17இல் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாகப் பாதுகாப்புத் துறை தெரிவித்தது.*
- *அணு ஆயுதத்தைத் தாங்கி, கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து 2,000 கி.மீ. தொலைவில் இருக்கக் கூடிய இலக்கையும் துல்லியமாகத் தாக்கும் வல்லமை படைத்த இந்த ஏவுகணைப் பாதுகாப்புப் படையில் ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்டது.*
- *ஒடிஸா மாநிலம், பாலசூரின் கடலோரப் பகுதியில் உள்ள டாக்டர் அப்துல் கலாம் தீவில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை, வங்கக் கடலில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை துல்லியமாகத் தாக்கி அழித்தது.*
- *அக்னி ஏவுகணை செலுத்தப்பட்டது முதல் அதன் இயக்கம் முழுமையாக ராடார் மூலம் கண்காணிக்கப்பட்டது. 20 மீட்டர் நீளம், 17 டன் எடை கொண்ட இந்த ஏவுகணை, 1,000 கிலோ எடையுள்ள வெடிபொருளை தாங்கிச் செல்லும் திறன் படைத்ததாகும்.*

ஒடிஸாவில் சிங்கப்பூர் ஏவுகணைகளைப் பரிசோதிக்க அனுமதி

- *சிங்கப்பூரின் ஏவுகணைகளை ஒடிஸா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை தளத்தில் பரிசோதித்துப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியா-சிங்கப்பூர் இடையே கையெழுத்தானது.*
- *சந்திப்பூர் பரிசோதனை தளத்தில் பிற நாடுகளுக்கு இந்தியா அனுமதி அளிப்பது இதுவே முதல்முறையாகும். பரப்பளவில் சிறிய நாடாக இருப்பதால், 'ஸ்பைடர்' ரக ஏவுகணைகளை சிங்கப்பூரில் பரிசோதித்துப் பார்ப்பது இயலாத ஒன்றாக உள்ளது.*

டி.ஆர்.டி.ஓ. அஸ்ட்ராவின் வரம்பை அதிகரித்துள்ளது

- *பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் சத்தீஸ்ரெட்டி ஆஸ்ட்ரா (ASTRA) ஏவுகணையின் வரம்பை அதிகரிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளதார். ஆஸ்ட்ரா (சமஸ்கிருதத்தில் ஆயுதம் என்று பொருள்). இந்த ஏவுகணை காற்றில் இருந்து காற்றில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் தன்மை கொண்டது. தற்போது 110 கி.மீ உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஆஸ்ட்ரா ஏவுகணைகள் இந்தியாவின் சுகோய் சு-30 எம்.கே.ஐ விமானங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.*

ரூ.7000 கோடிக்குக் கடற்படைப் பீரங்கிகள் இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல்

- *சுமார் ரூ. 7,000 கோடி மதிப்பிலான கடற்படைப் பீரங்கிகள் மற்றும் போர்த்தளவாடங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.*
- *1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ. 7000 கோடி) மதிப்பிலான எம்ஓடி-4 ரகத்தைச் சேர்ந்த 13 கடற்படைப் பீரங்கிகள் மற்றும் அதுசார்ந்த தளவாடங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அதிபர் டிரம்ப் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *இந்த ஒப்புதலின் மூலம் அமெரிக்காவிடமிருந்து எம்ஓடி-4 ரக கடற்படைப் பீரங்கிகளை வாங்கும் வெகுசில நாடுகளில் இந்தியாவும் இணைந்துள்ளது.*
- *இதுவரை ஆஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு இந்த ரக பீரங்கிகளை அமெரிக்கா விற்பனை செய்துள்ளது. இந்தியா தவிர பிரிட்டன், கனடா உள்ளிட்ட சில நாடுகளுக்கும் அவற்றை விற்பனை செய்ய அமெரிக்கா தீர்மானித்துள்ளது.*

உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு 2019

- பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் வெளியிட்ட வருடாந்திர அறிக்கையான உலகளாவிய பயங்கரவாதக் குறியீட்டின் *(Global Terrorism index: Measuring the Impact of Terrorism)* ஏழாவது பதிப்பு வெளியிடப்பட்டது.
- இப்பட்டியலில் இந்தியா கடந்த ஆண்டு அறிக்கையின் படி ஏழாவது இடத்தில் உள்ளது. *2018*ல் பயங்கரவாதத் தாக்குதல்களால் *7379* பேர் கொல்லப்பட்ட பட்டியலில் ஆப்கானிஸ்தான் முதல் இடத்தில் உள்ளது.
- இதர நாடுகள் ஈராக் *(2*வது*)*, நைஜீரியா *(3*வது*)* சிரியா *(4*வது*)* பாகிஸ்தான் *(5*வது*)* மற்றும் சோமாலியா *(6*வது*)*.

எல் அண்ட டி வால்வ்ஸ் நிறுவனத்துக்குத் தர உத்தரவாதச் சிறப்பு அந்தஸ்து

- தொழிற்சாலைகளுக்கான தர நிர்ணய தென்மண்டல மாநாடு சென்னையில் நடைபெற்றது. இதில், எல் அண்ட் டி நிறுவனத்தின் துணை நிறுவனமான எல் அண்ட் டி வால்வ்ஸ் நிறுவனத்துக்குப் பாதுகாப்பு அமைச்சகத்தின் தர அங்கீகார அந்தஸ்து வழங்கிக் கவுரவிக்கப்பட்டது.

பிருத்வி - 2 ஏவுகணை சோதனை வெற்றி

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'பிருத்வி-*2*' ஏவுகணை நவம்பர் *13*ல் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- இந்த ஏவுகணை *500* கிலோ முதல் *1,000* கிலோ எடையுள்ள அணு ஆயுதத்தை தாங்கிச் சென்று நிலத்தில் *350* கி.மீ. தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டதாகும்.
- ஒடிஸா மாநிலம், சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை தளத்தில் *(Complex-3)* இரண்டு 'பிருத்வி-*2*' ஏவுகணைகள் வெற்றிகரமாக ராணுவத்தால் பரிசோதிக்கப்பட்டன.

பூஞ்ச் இணைப்பு தினம்

- *1947-48* ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே நடைபெற்ற போரின் காரணமாகப் பூஞ்ச் மாவட்டம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இந்த மாவட்டம் இணைக்கப்பட்டதன் வெற்றினை நினைவுகூறும் *(நவம்பர் 23)* விதமாக ஆண்டுதோறும் இந்திய ராணுவத்தால் பூஞ்ச் இணைப்பு தினம் கொண்டாடப்படுகிறது

EXTRA NEWS

2000 ஆண்டுகள் பழமையான வணிக மையம்

- ஆந்திர மாநிலத்தின் ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் சுமார் *2000* ஆண்டுகள் பழமையான கடல் வணிக மையம் இருந்ததை இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனம் கண்டறிந்து உள்ளனர்.

ஸ்வர்ணமுகி நதி

- இந்த நதி தென்னிந்தியாவில் அமைந்துள்ளது. திருப்பதி நகரில் ஆற்றின் குறுக்கே கல்யாணி அணை கட்டப்பட்டுள்ளது. திருப்பதி மற்றும் களாஹஸ்தி ஆலயங்கள் ஆற்றின் கரையில் அமைந்துள்ளன.

வடகிழக்கு இலக்கு திருவிழா

- கலை, கலாச்சாரம், உணவு, கைவினை, கைத்தறி கண்காட்சி நான்கு நாட்கள் வாரணாசியில் முதல் முறையாக "வடகிழக்கு இலக்குத்" திருவிழா என்ற பெயரில் நடைபெறுகிறது. மத்திய அமைச்சர் ஜிஜேந்திர சிங் இத்திருவிழாவைத் தொடங்கி வைத்தார். இத்திருவிழா இந்தாண்டு மூன்றாவது முறையாக நடைபெறுகிறது. இதற்கு முன்பு சண்டிகர் மற்றும் டெல்லியில் நடைபெற்றது.

1.3 உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

காலநிலை மாற்றம் தொடர்பான 29வது BASIC அமைச்சரவைக் கூட்டம்

- *2019 அக்டோபர் 25 முதல் 26 வரை சீனாவின் பெய்ஜிங்கில் காலநிலை மாற்றம் குறித்த BASIC (பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா, சீனா) நாடுகளின் 29வது அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் ஸ்ரீ பிரகாஷ் ஜவடேகர் பங்கேற்றார்.*
- *காலநிலை மாற்றம் தொடர்பான 29வது BASIC அமைச்சரவைக் கூட்டம் சீனாவில் நடைபெற்றது.*

பேசிக் நாடுகள்

- *பேசிக் அல்லது பேசிக் நாடுகள் (BASIC Countries) எனப்படுவது வளர்ந்து வரும் நாடுகளான பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகும். 28 நவம்பர், 2009 ஆம் ஆண்டு கோப்பன் ஹேகனில் நடைபெற்ற பருவநிலை உச்சி மாநாட்டில் இந்த நான்கு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட்டன.*
- *மேலும், ஜி-77 நாடுகள் கூட்டமைப்பில் உள்ள ஏழை நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி அளிப்பது குறித்த சாத்தியக்கூறுகளை பேசிக் நாடுகள் அப்போது ஆலோசிக்கின்றன.*

இந்தியாவில் காதித் துணிகள் ஏற்றுமதி செய்ய தனி எச்.எஸ். குறியீடு

- *மத்திய வணிக மற்றும் தொழில் துறை அமைச்சகம் இந்தியாவில் காதித் துணிகள் ஏற்றுமதி செய்ய தனி எச்.எஸ் குறியீடு வழங்கியுள்ளது. இதற்காக உலகச் சுங்க அமைப்புடன் கையொப்பமிட்டுள்ளது. எச். எஸ் என்பது ஹார்மோனைஸ் சிஸ்டத்தைக் (Harmonized System) குறிக்கிறது. இது உலகச் சுங்க அமைப்பால் உருவாக்கப்பட்டது. இந்தக் குறியீடு பொருட்கள் சர்வதேச எல்லையைக் கடக்கும் போது அல்லது நுழையும் போது சுங்க அதிகாரிகளால் பயன்படுத்தப்படும்.*

ஹார்மோனைஸ் சிஸ்டம்

- *இது ஒரு பல்நோக்கு சர்வதேசப் பெயரிடும் முறையாகும். இது அனுப்பப்படும் பொருட்களின் வகையை விவரிக்கிறது. இந்த குறியீடு கியோட்டோ மாநாடு 1974 முதல் பின்பற்றப்படுகிறது. இது 200க்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.*

உலகச் சுங்க அமைப்பு

- *தொடக்கம் 1952*
- *தலைமையகம்: பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்*

இந்தியாவின் துணி

- *காதி என்பது கைகளால் சுழற்றப்பட்ட மற்றும் நெய்யப்பட்ட துணிகளுக்குப் பயன்படுத்தப்படும் சொல் ஆகும். இது இந்தியாவின் கையொப்பத் துணியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுதந்திர இயக்கத்திலிருந்து முக்கியத்துவத்தைப் பெற்றது.*

ஆசிய பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் (COP25) 25வது கூட்டம் ரத்து

- *சிலி நாட்டில் நடைபெற இருந்த ஆசிய பசிபிக் பொருளாதாரக் கூட்டமைவின் (APEC) 25வது கூட்டம் (COP25) ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிலியில் நடைபெறும் தொடர் மக்கள் போராட்டங்கள் காரணமாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது போன்று ரத்து செய்யப்படுவது இரண்டாவது முறையாகும்.*

COP25

- *உறுப்பு நாடுகள் கூட்டமைவின் உச்ச அமைப்புக் கூட்டம் UNFCCCஆல் உருவாக்கப் பட்டதாகும். இந்த அமைப்பின் முதல் கூட்டம் ஜெர்மனியில் 1995ல் நடைபெற்றது.*

இந்தியாவின் தலைமையில் உலக வளர்ச்சிக்கான மையமாகிறது தெற்காசியா : ஐஎம்எஃப்

- இந்தியாவின் தலைமையில் உலக வளர்ச்சிக்கான மையமாகத் தெற்காசிய உருவெடுக்கிறது என்று சர்வதேசச் செலவாணி நிதியம் (ஐஎம்எஃப்) தெரிவித்துள்ளது.
- புவியியல் ரீதியாக ஐஎம்எஃப் வரையறுத்துள்ளதன் படி, தெற்காசியா என்பது இந்தியா, வங்கதேசம், நேபாளம், இலங்கை, பூடான், மாலத்தீவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அதில், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் சேர்க்கப்படவில்லை.
- தெற்காசியாவில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அதிக அளவில் இருக்கும் பணித்திறன்கள் தகுந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 2040-ஆம் ஆண்டில் உலக வளர்ச்சியில் 3-இல் ஒரு பங்கு அளவுக்கு தெற்காசியாவால் பங்களிப்புச் செய்ய இயலும்.
- மக்கள் தொகை அடிப்படையில், வரும் 2030-ஆம் ஆண்டில் தெற்காசியவைச் சேர்ந்த 15 கோடிக்கும் அதிகமான மக்கள் தொழிலாளர் சந்தையில் இணைவார்கள்.
- வளர்ச்சிப் பாதையின் அடிப்படையில் பார்க்கும் போது, உலக வளர்ச்சிக்கான மையமாக இந்தியாவின் தலைமையில் தெற்காசியா உருவெடுத்து வருகிறது என்று ஆசியா, பசிபிக் துறையின் துணை இயக்குநர் ஆனிமேரி கல்ட வோல்ஃப் கூறினார்.

ஹைதராபாத் நகருக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்

- பிரியாணி, ஹலீம் ஆகிய உணவு வகைகள் தயாரிப்பில் சிறப்பிடம் பிடித்ததற்காக, ஹைதராபாத் நகருக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- உலக நகரங்கள் தினம், கடந்த அக்டோபர் 31-ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டது.
- அன்றைய தினம், படைப்புத் திறனில் சிறந்து விளங்கும் கிரியேட்டிவ் சிட்டி பட்டியலில், மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களின் பெயர்களைச் சேர்த்துள்ளதாக யுனெஸ்கோ அறிவித்தது.
- திரைப்படங்கள் தயாரிப்புக்காக மும்பை நகரையும், பிரியாணி, ஹலீம் ஆகிய உணவு வகைகளின் தயாரிப்புக்காக ஹைதராபாத் நகரையும் யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது.
- மேலும், ஹைதராபாத் நகரின் தனித்துவமான பிரியாணி செய்முறைக்கு சர்வதேச உணவகங்களில் மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே, கிரியேட்டிவ் சிட்டி பட்டியலில் ஹைதராபாத் நகரம் இடம்பிடித்துள்ளது.
- உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் முதல் 10 நகரங்களின் வரிசையில் ஹைதராபாத் இடம்பெற்றுள்ளது.
- 2019-ஆம் ஆண்டில் ஹைதராபாதின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு ரூ.3.56 லட்சம் கோடியாக இருந்தது. இது, வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் ரூ.14 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிக்ஸ் மாநாடு

- பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய 5 நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பின் வருடாந்திர மாநாடு பிரேசிலில் வரும் 13, 14-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது. இப்போது கூட்டமைப்பின் தலைவராக பிரேசில் உள்ளதால் அந்த நாட்டில் மாநாடு நடத்தப்படுகிறது. பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி வரும் 13, 14-ஆம் தேதிகளில் பிரேசிலுக்குப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். "பிரிக்ஸ் நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இந்த மாநாட்டில் தலைவர்கள் விவாதிக்க இருக்கின்றனர். பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளில், உலக மக்கள் தொகையில் பாதியளவு மக்கள் வசிக்கின்றனர். எனவே, பிரிக்ஸ் மாநாடு சர்வதேச அளவில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மையக்கருத்து : *Economic Growth for an Innovative Future.*

உடல் செயல்பாடு குறித்த உலகச் சுகாதார அமைப்பு ஆய்வு

- *11* மற்றும் *17* வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உடல் செயல்பாடுகள் *(Physical Activity)* குறித்து உலகச் சுகாதார அமைப்பு ஆய்வு வெளியிட்டு உள்ளது. இந்த ஆய்வு உலகளவில் *146* நாடுகளின் *298* பள்ளிகளில் மேற்கொண்ட ஆய்வு அடிப்படையில் வெளியிட்டுள்ளது. உடற்கல்வி, பொழுதுபோக்கு விளையாட்டு, நடைபயிற்சி, திட்டமிட்ட பயிற்சிகள் மற்றும் சைக்கிள்பயணம்ஆகியவற்றைஅடிப்படையாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- இதில் உடல் செயல்பாடுகளில் மிகக் குறைந்த அளவில் இந்தியாவின் செயல்பாடு இந்தியா *8*வது இடத்தில் உள்ளது. *74%* இளம் பருவத்தினர் போதுமான உடல் செயல்பாடுகளை மேற்கொள்வதில்லை எனத் தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் *2001*ல் ஒட்டுமொத்தப் போதிய உடல் செயல்பாடு *71.6%* ஆக இருந்தது. *2016*ல் *73.9%* ஆக அதிகரித்துள்ளது. உள்நாட்டு வேலைகள் போன்ற சமூகக் காரணிகளால் உடல் செயல்பாடுகள் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

35வது ஆசியான் மாநாடு, பாங்காக்

- அக்டோபர் *31*ம் தேதி பாங்காக்கில் *35*வது ஆசியான் மாநாடு துவங்கியது.
- தென்கிழக்கு ஆசியா நாடுகள் கூட்டமைவின் *10* நாடுகள் இடையேயான கூட்டமைவு ஆசியான் எனப்படும்.
- அரசியல், பொருளாதார. சமூக முன்னேற்றத் திற்காக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. மையக்கருத்து: *Advancing Partnership for sustainability.*

ஆசியான் (ASEAN)

- ஆசியான் மாநாடு ஆண்டுக்கு இரண்டுமுறை நடத்தப்படுகிறது.
- *1967*ம் ஆண்டு ஆகஸ்டு *8*ம் தேதி துவங்கப்பட்டது. முதலில் மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளே உறுப்பினர்களாய் இருந்தன.
- பின்னர் வியட்நாம், புருனே, கம்போடியா, மியான்மர், லாவோஸ் போன்ற நாடுகளும் இணைந்தன.

இந்தியா ஆசியன் தொழில்நுட்ப மாநாடு 2019

- இந்தியா ஆசியன் தொழில்நுட்ப மாநாடு பிலிப்பைன்ஸ் நாட்டின் தாவோ நகரத்தில் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இது புதுமையான தொழில்நுட்பக் கண்காட்சி மற்றும் பேக் டு பேக் கூட்டங்களில் கவனம் செலுத்துதல்.
- இந்த மாநாடு இரண்டாவது முறையாக நடைபெறுகிறது. இதன் முதல் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. ஆசியன் நாடுகளின் உறுப்பினர்களான மியான்மர், பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், சிங்கப்பூர், புருனே, கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகள் பங்கேற்றன.
- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு (எப்.ஐ.சி.சி.ஐ) மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (டி.எஸ்.டி) இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாதனதுசிறந்ததொழில்நுட்பக்கண்டுபிடிப்புகளை இந்த மாநாட்டில் காட்சிப்படுத்த உள்ளன.

ஆயுர்வேத மாநாடு - கேரளா

- கேரள ஆளுநர் அரிப் முகம்மது கான் *3*வது சர்வதேச ஆயுர்வேத மாநாட்டைக் கொச்சியில் துவங்கி வைத்தார். சார்க் நாடுகளைச் சேர்ந்த தொழில்துறை வல்லுநர்களும் ஆப்பிரிக்க நாட்டை சார்ந்த தொழில் நிறுவன உறுப்பினர்களும் இதில் பங்கேற்றனர்.
- இரண்டு நாள் மாநாடு இந்தியத் தொழில் கூட்டமைவு *(CII)* ஆல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- மையக்கருத்து: *Mainstraming Ayurveda through start-ups innovation and Branding.*

உலகின் அதிக மாசு அடைந்த நகரங்கள் பட்டியலில் கான்பூர்



- உத்தரபிரதேசத்தில் உள்ள கான்பூர் நகரில், உலகின் அதிக மாசு அடைந்த நகரங்களின் கின்னஸ் உலகச் சாதனைக்கான பட்டியலுக்கான பதிப்பு நடைபெற்றது.
- கின்னஸ் உலகச் சாதனைகள் 2020 என்ற புத்தகம் ஆயிரக்கணக்கான புதிய சாதனைத் தலைப்புகளைப் பட்டியலிடுகிறது. இது ஆண்டுதோறும் பெங்குயின் பேரண்டம் ஹவுஸால் வெளியிடப்படுகிறது. இந்த ஆண்டு இந்தியர்களின் சுமார் 80 சாதனைகள் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

கான்பூர் உலகின் அதிக மாசு அடைந்த நகரம்

- உலகச் சுகாதார அமைப்பு, உலகின் அதிக மாசு அடைந்த நகரங்களில் கான்பூர் உள்ளது என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. 2016ஆம் ஆண்டின் படி சராசரி PM2.5 நிலை 173 மைக்ரோம் கிராம் / மீ3 மாசு அடைந்து உள்ளதாகத் தெரிவித்து உள்ளது.

***PM2.5* என்பது**

- *Paticular Matter* என்பது காற்றின் தரத்தை அளவிடுவது ஆகும். இதன் விட்டம் 2.5 மைக்ரோ மீட்டரை விடச் சிறியது (கிட்டத்தட்ட 3% பிம் தூசி மற்றும் சாம்பல் போன்ற மிகச்சிறிய துகள்கள் மற்றும் அதன் நீண்டகால வெளிப்பாடு புற்றுநோய், நுரையீரல், மற்றும் இதய நோய்களை ஏற்படுத்தும்.

சுவிட்சர்லாந்தில் 50வது உலகப் பொருளாதார மன்ற மாநாடு

- சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பொருளியல் பேராசிரியர் கிளவுஸ் சுவாப் என்பவர் 1971-ம் ஆண்டு "உலகப் பொருளாதார மன்றம்" என்ற அமைப்பை நிறுவினார்.
- இந்த அமைப்பு ஜெனீவா நகரை மையமாகக் கொண்டு ஒரு பொதுநலச் சேவை அமைப்பாக இயங்கி வருகிறது. இந்த அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் சுவிட்சர்லாந்தில் உள்ள தாவோஸ் நகரில் பொருளாதார மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.
- உலகப் பொருளாதாரம், சுற்றுப்புறச் சூழல், கல்வி, சுகாதாரம் தொடர்பாக புதிய முடிவுகள் எடுக்கப்படும்.
- இதனால் உலகப் பொருளாதார மன்றத்தின் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தாவோஸ் நகரில் வருகிற ஜனவரி 21-24, 2020 வரை 4 நாட்கள் நடைபெற உள்ளது.
- மையக்கருத்து : *'Stakeholders for a Cohesive and Sustainable World'.*

உலக பொருளாதார மன்றம்:

- உருவாக்கம் : 1971
- தலைமையகம் : சுவிட்சர்லாந்து

பிரிக்ஸ் மாநாடு 2019

- பிரிக்ஸ் நாடுகளின் 11-வது மாநாடு, பிரேசில் தலைநகர் பிரேசில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.
- இந்த ஆண்டின் பிரிக்ஸ் நாடுகள் மாநாடு, "எதிர்காலத்துக்கான பொருளாதார வளர்ச்சி" என்ற கருப்பொருளில் நடைபெற்றது.
- மாநாட்டின் முடிவில், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பது தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பிரிக்ஸ் நாடுகளின் தொழில்துறை தலைவர்கள் கூட்டத்தின், பிரிக்ஸ் அமைப்பில் இடம் பெற்றுள்ள பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென்ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் தொழில்துறை தலைவர்கள் கலந்து கொண்டனர்.

1.4 சிறந்த நபர்கள்

நேபாளம் மலையேற்ற வீரர் உலக சாதனை

- நேபாளத்தைச் சேர்ந்த நிர்மல் பூர்ஜா என்பவர், உலகின் மிக உயரமான 14 மலைச் சிகரங்களை ஏழே மாதங்களில் ஏறிப் புதிய உலகச் சாதனை படைத்துள்ளார்.
- இதற்கு முன்னர் ஜெர்ஸி குகுக்ஸ்கா என்பவர் சுமார் 8 ஆண்டுகளில் செய்திருந்த இந்தச் சாதனையை, வெறும் ஏழே மாதங்களில் நிர்மல் பூஜா முறியடித்துள்ளார்.
- 8,000 மீட்டருக்கும் அதிக உயரமுடைய அந்த 14 சிகரங்களில் எவரெஸ்ட், கஞ்சன் ஜங்கா, பாகிஸ்தானிலுள்ள கே2 ஆகிய சிகரங்களும் அடங்கும்.

பத்மஸ்ரீ விருது பெற்ற யோகா பாட்டி கோவை நானம்மாள் காலமானார்

- சுமார் 90 ஆண்டுகளாக யோகா பயிற்சியில் ஈடுபட்டதுடன் பலருக்கும் யோகாசனம் பயிற்சிகளை கற்றுக்கொடுத்து வந்த கோவையைச் சேர்ந்த நானம்மாள் தனது 99-ம் வயதில் காலமானார். இதனிடையே இவரின் திறமையும் சேவையையும் பாராட்டி மத்திய அரசு கடந்த 2018-ம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது.
- அதற்கு முன்னதாக கடந்த 2016-ம் ஆண்டில் மகளிரின் வலிமை என்னும் பொருள்படும் "நாரிசக்தி" விருது மற்றும் 2017-ம் ஆண்டில் "யோகா ரத்னா" விருது ஆகியவற்றை பெற்றுள்ள நானம்மாள் "யோகா பாட்டி" என்ற பெயரில் கடந்த ஆண்டு ஊடகங்களில் சிறப்பான இடத்தை பிடித்திருந்தார்

உலகின் சிறந்த சிஇஒ பட்டியலில் 3 இந்தியர்கள்

- உலகின் தலை சிறந்த தலைமைச் செயல் அதிகாரிகள் (சிஇஒ) பட்டியலில் 3 இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- ஹார்வர்டு பிசினஸ் ரெவ்யூ 100 சிறந்த நிர்வாகிகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் முதல் 10 இடங்களில் உள்ளவர்களில் இந்தியர்கள் மூவர் இடம் பெற்றுள்ளனர்.
- உலகின் சிறந்த நிர்வாகிகள் 2019-க்கான பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.
- இதில் அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனமான நிவிட்யா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜென்சன் ஹூயாங் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- இந்தப் பட்டியலில் அடோப் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சாந்தனு நாராயண் 6-வது இடத்தில் உள்ளார்.
- 7-வது இடத்தில் மாஸ்டர் கார்டு நிறுவனத்தின் சிஇஒ அஜய் பாங்காவும், 9-வது இடத்தில் மைக்ரோசாஃப்ட் சிஇஒ சத்யா நாதெள்ளாவும் உள்ளனர்.
- மேலும் அமரிக்க இதழான பார்ச்சூன் உலகளாவிய20தலைசிறந்ததொழில்நிறுவனத் தலைவர்களைப் பட்டியலிட்டுள்ளது. அதில் இந்தியரும், மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான சத்ய நாதெள்ளா முதல் இடத்தைப் பிடித்துள்ளார். இருபது பேர் அடங்கிய அந்தப் பட்டியலில், சத்யநாதெள்ளா தவிர இரண்டு இந்திய வம்சாவளியினர் இடம் பெற்றுள்ளனர். மாஸ்டர் கார்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அஜய் பங்கா 8-வது இடத்தையும், அரிஸ்டா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெய்ஸ்ரீ உல்லால் 18-வது இடத்தையும் பிடித்து உள்ளனர்.

"Ek Bharat Shreshtha Bharat"

- கேந்திரியா வித்யாலயா சங்கதன் அமைப்பு சுதந்திரப் பேராட்ட வீரர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாளை நினைவு கூறும் விதமாக நான்கு நாள் *Ek Bharat Shreshtha Bharat* என்ற நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தது. இது அக்டோபர் 31ம் தேதி தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் தேசிய ஒருங்கிணைப்பு, இந்தியக் கலைகள் மற்றும் கலாச்சாரத்தைப் பாராட்டுதல் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவருதல் ஆகும்.

அடுத்த ஆண்டு குடியரசு தினவிழா சிறப்பு விருந்தினர் பிரேசில் அதிபர்

- அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சொனாரோ *(Jair Bolsonaro)* பங்கேற்கவுள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை ஏற்று சிறப்புச் விருந்தினராகப் பங்கேற்க போல்சொனாரோ சம்மதம் தெரிவித்தார்.

பரம்ஹன்ஸா யோகானந்தாவின் நாணயம் வெளியீடு

- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பரம்ஹன்ஸா யோகானந்தாவின் 125வது பிறந்த நாளை முன்னிட்டு நாணயம் வெளியிட்டார். மேற்குப் பகுதியில் யுகாவின் தந்தை என அறியப்படுகிறார். யோகோடா சத்சங்கா சொசைட்டி ஆஃப் இந்தியா மற்றும் சுய-உணர்தல் பெல்லோஷிப் என்ற இரண்டு அமைப்புகளின் நிறுவனர் ஆவார். உலகம் முழுவதும் சமயம் சார்ந்த பிரச்சாரங்களை இந்த அமைப்புகள் செய்கின்றன.

இந்தியாவின் மிக இளம் வயது நீதிபதி : மயங்க் பிரதாப் சிங்

- ஜெய்ப்பூரைச் சேர்ந்த இளைஞர் மயங்க் பிரதாப் சிங் ராஜஸ்தான் நீதித்துறைப் பணித் தேர்வில் 21 வயதில் வென்று வரலாறு படைத்தார்.
- இதன் மூலம் நாட்டின் மிக இளம் வயது நீதிபதி என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

முன்னாள் தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் மரணம்

- முன்னாள் தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் சென்னையில் காலமானார்.
- கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் பிறந்த இவர். தமிழக பிரிவு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆவார். 1990 முதல் 1996-ம் ஆண்டு வரை தலைமைத் தேர்தல் கமிஷனராக இருந்தபோது, பல்வேறு தேர்தல் சீர்திருத்தங்களை மேற்கொண்டதோடு தனது உறுதியான நடவடிக்கை மூலம் தேர்தல் கமிஷனின் அதிகாரங்களை நிலைநாட்டினார்.

கணிதமேதை வசிஷ்ட நாராயண்சிங் மறைவு

- பிரபலக் கணித மேதை வசிஷ்ட நாராயண் சிங் (74) நீண்ட காலமாக உடல்நலக் குறைவுடன் இருந்து வந்த நிலையில், பிகாரில் காலமானார்

குருநானக்கின் ஆய்வகம்

- சீக்கிய மதத்தின் போதனைகள் ஆராய்ச்சிக்கு உதவும் வகையில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர், பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் புதிய குருநானக் இருக்கையைத் திறந்து வைத்துள்ளார்.
- குருநானக்கின் 550வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அறிவித்தார்.

அமெரிக்காவின் மெட்ரோபொலிட்டன் அருங்காட்சியத்தின் கௌரவ அறங்காவலராக நீடா அம்பானி நியமனம்

- நீடா அம்பானி, அமெரிக்காவில் உள்ள பிரபல அருங்காட்சியகத்தின் கௌரவ அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நீடா அம்பானி இந்தியக் கலை மற்றும் கலாச்சாரத்தை உலக அளவில் கொண்டு சேர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.
- உலகின் மிகப் பெரிய அருங்காட்சியகமாகத் திகழும் மெட்ரோபொலிட்டன் மியூசியம் ஆஃப் ஆர்ட், 149 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும். உலகளவில் அதிகப் பார்வையாளர்களைக் கொண்ட அருங்காட்சியகமும் இதுதான்.
- 5,000 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த கலையம்சங்கள் இந்த அருங்காட்சியகத்தில் இடம் பெற்றிருப்பதால் கோடிக்கணக்கான பார்வையாளர்கள் இங்கு வந்து செல்கின்றனர்.
- இந்நிலையில் அவரைச் சிறப்பிக்கும் வகையில் அருங்காட்சியகத்திற்கான அறக்கட்டளையின் கௌரவ அறங்காவலராக நீடா அம்பானி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவிலிருந்து நீட்டா அம்பானிதான் முதன்முறையாக இந்த அருங்காட்சியகத்தில் கௌரவிக்கப்படுகிறார்.

2,887 நாள் ஆட்சி ஜப்பான் பிரதமர் அபே சாதனை

- ஜப்பானில் மிக நீண்ட காலம் பிரதமர் பொறுப்பை வகித்தவர் என்ற சாதனையை ஷின்ஸோ அபே படைத்தார். ஜப்பான் பிரதமராக ஷின்ஸோ அபே பொறுப்பேற்று, நவம்பர் 20-ந் தேதியுடன் 2,887 நாள்கள் நிறைவடைகின்றன. இதன் மூலம், அந்த நாட்டில் மிக நீண்ட காலத்துக்குப் பிரதமராக இருந்தவர் என்ற பெருமையை அபே பெற்றார். ஷின்ஸோ அபேயின் தற்போதைய பதவிக் காலம் 2021-ஆம் ஆண்டு நிறைவடைகிறது.

முதன் முறையாக கனடா அமைச்சரவையில் இந்துப் பெண்மணி

- கனடாவில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஜஸ்டின் ட்ருடோ இரண்டாவது முறையாக பதவி ஏற்றுள்ளார். அவரது அமைச்சரவையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பலர் அமைச்சர்களாகப் பதவி ஏற்றுள்ளனர். அதில் குறிப்பாக இந்துப் பெண் மணி ஒருவர் அனிதா ஆனந்த் முதல் முறையாக அமைச்சராக்கப்பட்டுள்ளார். முதல் முறையாக கனடா நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவரை அமைச்சராக நியமித்து ஜஸ்டின் ட்ருடோ உத்தரவிட்டுள்ளார்.

தொழில் முதன்மை விருது

சென்னையில் அமால்க மேஷன்ஸ் சார்பில் "தொழில் முதன்மை" விருது விப்ரோ தலைவர் அஸிம் பிரேம்ஜிக்கு வழங்கப் பட்டது.

1.5 முக்கிய இடங்கள்

சுரங்கப்பாடி, உலக நினைவுச் சின்னம் கண்காணிப்பு பட்டியலில் இணைக்கப்படுகிறது

- உலகெங்கிலும் உள்ள பண்டைய நினைவுச் சின்னங்களை மீட்டெடுப்பதைக் கண்காணிக்கும் உலக நினைவுச்சின்ன நிதியத்தால் "டெக்கான் பீடபூமியின் பண்டைய நீர் அமைப்பு" இந்த அமைப்பின் கீழ் சுரங்கபாடி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இது கர்நாடகாவின் விஜயபுராவில் ஆதில் ஷாஹி காலத்தில் கட்டப்பட்ட நிலத்தடிச் சுரங்கங்கள் மூலம் வழங்கும் பண்டைய கரேஸ் அமைப்பின் ஒரு பகுதியாகும்.

உலக நினைவுச்சின்னம் நிதி

- 1965இல் நிறுவப்பட்டது, நியூயார்க்கைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது.
- உலக நினைவுச்சின்னக் கண்காணிப்புப் பட்டியல் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒருமுறை உலக நினைவுச்சின்னங்கள் கண்காணிப்பு பட்டியலை வெளியிடுகிறது.
- உலக நினைவுச்சின்னங்கள் நிதி என்பது ஒரு தனியார், சர்வதேச, இலாப நோக்கமற்ற அமைப்பாகும். இது உலகெங்கிலும் உள்ள வரலாற்றுக் கட்டிடக்கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத் தளங்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டது.

டாமன்-டையூ தாத்ரா-நாகர் ஹவேலி யூனியன் பிரதேசங்களை இணைக்க திட்டம்

- டாமன் மற்றும் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி ஆகிய இரு யூனியன் பிரதேசங்களையும் இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய அமைச்சர் அர்ஜுன் மேக்வால் தெரிவித்தார்.
- ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவை நீக்கியும், அந்த மாநிலத்தை இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தும் கடந்த ஆகஸ்ட் 5-ஆம் தேதி மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது.
- இவ்விரு யூனியன் பிரதேசங்களும் கடந்த மாதம் அக்டோபர் 31-ஆம் தேதி முதல் செயல்பட தொடங்கின. இதனால், நாட்டிலுள்ள யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை 9-ஆக அதிகரித்தது.
- டாமன் மற்றும் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி ஆகியவை இணைக்கப்படும்போது, யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை 8-ஆக குறையும்.

அமராவதியின் புதிய அரசியல் வரைபடம்

- சர்வே ஆஃப் இந்தியா ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் தலைநகரான அமராவதியின் புதிய அரசியல் வரைபடத்தை வெளியிட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தெலங்கானா பிரிக்கப்பட்டது. அதன் பின் தற்போது தான் புதிய அரசியல் வரைபடம் வெளியிடப்பட்டது. நவம்பர் 2 அன்று சர்வே ஆஃப் இந்தியா (Survey of India) வெளியிட்டது.

Review us on Google
4.8 ★★★★★
Vetrii IAS Academy

1.6 விளையாட்டு

பும்ரா மற்றும் ஸ்மிரிதி மந்தனாவிற்கு இந்த ஆண்டின் கிரிக்கெட்டர் விருது

- இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் புத்ரா மற்றும் பெண்களில் ஸ்மிரிதி மந்தனாவிற்கு விஸ்டன் இந்தியா இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்கள் விருது வழங்கப் பட்டுள்ளது. மொத்தமாக 5 பேருக்கு வழங்கப்பட்டதில் இருவர் இந்தியர், மற்ற 3 பேரும் பாகிஸ்தானை சேர்ந்த பாகர் சாமன், இலங்கையை சேரந்த திமுத் கருணாரத்னா மற்றும் ஆப்கானிஸ்தானின் ரஷித்கான் ஆகிய 5 பேருக்கும் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஸ்மிரிதி மந்தனா இந்த விருதை மித்தாலிராஜ் மற்றும் தீப்தி வர்மாவிற்கு பிறகு மூன்றாவது பெண் இந்த விருதை பெறுகிறார்.

உலக முப்படைகள் விளையாட்டு

- சீனாவின் வூஹான் நகரில் நடைபெற்ற உலக முப்படைகள் விளையாட்டுப் போட்டியில் குத்துச்சண்டையில் வெள்ளிப் பதக்கம் வென்றார் இந்தியாவின் தீபக்.
- ஏழாவது இராணுவ உலக விளையாட்டுக்கள் சீனாவில் முதன்முறையாக நடத்தப்படுகின்றன. மேலும் அது சீனாவில் நடைபெறும் மிகப்பெரிய இராணுவ விளையாட்டு நிகழ்வாகும்.

"டைம் 100 அடுத்து" பட்டியல்

- அமெரிக்க வார செய்தி இதழ் வெளியிடும் "டைம் 100 அடுத்து பட்டியலில் இந்தியாவின் ஸ்விண்டர் டூட்டி சந்தின் பெயர் முதல் முறையாக இடம் பெற்று உள்ளது.
- தொழில், பொழுதுபோக்கு, விளையாட்டு, அரசியல், சுகாதாரம் மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களின் பட்டியலை டைம்ஸ் இதழ் வெளியிடுகிறது.

ஆசிய துப்பாக்கி சுடுதல் தங்கம் வென்றார் மானுபாக்கர்

- சீனாவின் புஷெளவில் நடைபெற்று வரும் ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிர் 10மீ. ஏர் பிஸ்டல் பிரிவில் 244.3 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார் இளம் வீராங்கனை மானுபாக்கர்.
- ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்துடன் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளார். இந்திய வீரர் தீபக் குமார்.

10மீ ஏர் பிஸ்டல் பிரிவில் வெற்றி வென்றார் சௌரப் சௌதரி

- கத்தார் நாட்டின் டோக்கா நகரில் நடைபெற்ற 14வது ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் 10மிட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வெள்ளி வென்றார் சௌரப் சௌதரி.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 2020ஆம் ஆண்டிற்கான தடகளத் தூதுவர் குழுவில் மேரிகோம்

- 2020ஆம் ஆண்டு டோக்கியோ வில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஏற்படுத்தியுள்ள தூதுவர்கள் குழுவில் 6 முறை உலகச் சாம்பியன் பட்டம் வென்ற மேரிகோம் பெயரும் இடம்பெற்றுள்ளது.

பிஃபா 17வயது மகளிர் உலகக் கோப்பைச் சின்னம் வெளியீடு

- மும்பை இந்தியா கேட் பகுதியில் இரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிடப்பட்ட இந்தியாவில் 2020-இல் நடக்கவுள்ள பிஃபா 17 வயதுக்குட்பட்டோர் மகளிர் உலகக் கோப்பைப் போட்டிக்கான அதிகாரப்பூர்வச் சின்னம் வெளியிடப்பட்டது.

ஹங்கேரியில் நடைபெற்ற மல்யுத்தம்

- 23 வயதுக்குட்பட்டோர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார் இந்தியாவின் பூஜா கெலாட்.
- 23 வயதுக்குள் பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி இறுதிச்சுற்றில் இந்திய வீரர் ரவீந்தர் 61 கிலோ எடைப் பிரிவில் வெள்ளி வென்றார்.

பேஸல் ஏடிபி : பெடரர் சாம்பியன்

- போலஸ் ஏடிபி ஓபன் போட்டியில் 10-ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற பெடரர். ஒட்டுமொத்தமாகத் தனது 103 ஆவது பட்டத்தையும் கைப்பற்றினார்.

100வது டி20 போட்டியில் விளையாடும் முதல் இந்திய வீரர் ஹிட்மேன்

- இந்திய அணியின் முன்னணி பேட்ஸ்மேன்களில் ஒருவர் ரோகித் சர்மா. ரோகித் சர்மாவுக்கு 100-வது 20 ஓவர் ஆட்டமாகும். 100-வது போட்டியில் விளையாட இருக்கும் முதல் இந்திய வீரர் ஆவார். சர்வதேச அளவில் 2-வது வீரர் என்ற பெருமையை பெறுகிறார். பாகிஸ்தான் வீரர் சோயிப் மாலிக் ஒருவர் மட்டுமே 100 இருபது ஓவர் ஆட்டத்தில் விளையாடி இருக்கிறார்.

2023 ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டி நடத்த இந்தியாவுக்கு எப்ஐஎச் அமைதி

- 2023 ஆடவர் உலகக் கோப்பைப் போட்டியை நடத்த இந்தியாவுக்கு சர்வதேச ஹாக்கி சம்மேளனம் (எப்ஐஎச்) அனுமதி அளித்துள்ளது. தொடர்ந்து 2-ஆவது முறையாக மற்றும் ஒட்டுமொத்தமாக இந்தியா நடத்தவுள்ள நான்காவது உலகக் கோப்பைப் போட்டி இதுவாகும். 8 முறை ஒலிம்பிக் தங்கம், ஒருமுறை உலகக் கோப்பை சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளது. சர்வதேசத் தரவரிசையில் 5-ஆவது இடத்தில் உள்ளது இந்திய அணி. 2023 ஜனவரி 13 முதல் 29ஆம் தேதி வரை போட்டி நடைபெறும்.

2022-இல் மகளிர் உலகக் கோப்பை

- 2022 மகளிர் உலகக் கோப்பைப் போட்டியை நடத்த ஸ்பெயின் நெதர்லாந்து நாடுகளுக்கு அனுமதி தரப்பட்டது.

ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்றார் சுந்தர் சிங்

- உலகப் பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஈட்டி எறிதல் (F46) போட்டியில் ஆடவர்களுக்கான பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த சுந்தர் சிங் குர்ஜார் தங்கம் வென்றார். இப்போட்டி துபாயில் நடைபெறுகிறது. மேலும் அஜித்சிங் 59.46 மீ தூரம் எறிந்து வெண்கலம் வென்றார். வெண்கலம் வென்ற அஜித் சிங் மற்றும் ரிங்கு, சுந்தர் சிங் ஆகிய மூன்று பேர் டோக்கியோவில் நடைபெற உள்ள பாரா ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.

விஜய் யசாரே டிராபி கர்நாடக சாம்பியன்

- விஜய் ஹசாரே டிராபி இறுதிப் போட்டியில் தமிழக அணியை 60 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திச் சாம்பியன் பட்டம் வென்றது கர்நாடகா.

சச்சின் சாதனையை முறியடித்த இந்திய இளம் வீராங்கனை

- மேற்கு இந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் 84 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய மகளிர்அணி சிறப்பான வெற்றி பெற்றது.
- இந்த ஆட்டத்தில் இந்திய கிரிக்கெட் ஜாம்பாவான் சச்சின் சாதனையை 15 வயது இந்திய வீராங்கனை ஷபாலி வர்மா முறியடித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் 16 வயது, 213 நாட்கள் ஆனபோதுதான் டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது அரை சதத்தைப் பதிவு செய்தார். ஆனால், சச்சினைக் காட்டிலும் மிகக் குறைந்த வயதிலேயே சர்வதேச அளவில் அரை சதம் அடித்த முதல் இந்திய வீராங்கனை எனும் பெருமையை ஷபாலி வர்மா பெற்றார்.
- ஷபாலி வர்மா 15 வயது, 285 நாட்களில் இருக்கும் போது அரை சதம் அடித்து சச்சின் சாதனையை முறியடித்தார்.

சர்வதேசக் குத்துச்சண்டைச் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தடகள ஆணையர்

- இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனை சரிதா தேவி சர்வதேசக் குத்துச்சண்டை சங்கத்தின் முதல் தடகள ஆணையராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஐந்து கண்டங்களில் இருந்து ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு குத்துச்சண்டை வீரர்களில் இவரும் ஒருவர் ஆவார். இவர் ஆசிய நாடுகளின் பிரதிநிதி ஆவார்.
- இதற்கான தேர்தல் முறை ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் ஆடவர் மற்றும் மகளிர்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சரிதா தேவி ஆசியாவின் பிரதிநிதியாகச் செயல்படுவார்.

ஐ.ஏ.ஏ.எஃப் பெயர் உலகத் தடகளம் எனப் பெயர் மாற்றம்

- சர்வதேசத் தடகளக் கூட்டமைப்புச் சங்கத்தின் பெயரை மாற்றித் தற்போது அதிகாரப்பூர்வமாக உலகத் தடகளம் என அழைக்கப்படுகிறது. சர்வதேச விளையாட்டு ஆளுமை இணையதளம் மற்றும் யு.ஆர்.எல். ஆகிய இணையதளத்திலும் அதிகாரப்பூர்வமாக மாற்றியமைத்து உள்ளது. சர்வதேசத் தடகளக் கூட்டமைப்புச் சங்கம் 1912ல் சர்வதேச அமெச்சூர் தடகள கூட்டமைப்பாக நிறுவப்பட்டது.

டிசம்பர் 1ல் தொடங்குகிறது உலகக் கோப்பை கபடித் தொடர்

- 2019ஆம் ஆண்டிற்கான கபடி உலகக் கோப்பை பஞ்சாபில் நடைபெற உள்ளது. இந்தத் தொடருக்கான தேதியைப் பஞ்சாப் மாநில விளையாட்டு துறை அமைச்சர் அறிவித்துள்ளார். அதன்படி இந்த உலகக் கோப்பைத் தொடர் வரும் டிசம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் டிசம்பர் மாதம் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த ஆண்டு நடைபெறும் கபடி உலகக் கோப்பை போட்டிகள் சீக்கிய மத குரு குருநானக் தேவ்க்கு அர்பணிக்கப்படும் என்று பஞ்சாப் மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மானு, இளவேனில், திவ்யான்சிங் தங்கம் வென்றனர்

- சீனாவின் புட்டியன் நகரில் ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்று வருகிறது. இந்தியாவின் இளம் நட்சத்திரங்கள் மானு பாக்கர், இளவேனில் வாலறிவன், திவ்யான்ஸ் சிங் பவார் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.இதன் மூலம் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப் பெற்றுள்ளது.

1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

"The Unquiet River: A biography of the Brahmaputra"

- இப்புத்தகம் வரலாற்று அறிஞர் அருப்ஜியோதி சாய்கியா *(Arupjyoti Saikia)* என்பவர் எழுதியுள்ளார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பத்திரிகை இந்தப் புத்தகத்தை வெளியிட உள்ளது. அஸாம் சமவெளி மற்றும் வாழ்வாதாரம், ஆறுகளின் வடிவம் பற்றி, இப்புதத்கம் விவரிக்கிறது. அசாம் மாநிலத்தின் பிரம்மபுத்திரா நதி, படிவுகள், அசாம் மாநிலத்தின் வரலாறு பற்றி விவரிக்கிறது.

குருநானக் தேவ்-வின் வாழ்க்கை வரலாறு

- சீக்கிய மதத்தின் நிறுவனரான குருநானக் தேவ்-வின் வாழ்க்கை வரலாறு குறித்த புத்தகம் *"The first sikh: The life and legacy of Guru Nanak"* என்ற பெயரில் இவரின் *550*வது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் வெளியிடப்பட்டது.
- இவர் ஏப்ரல் *15, 1469* ஆம் ஆண்டு பாகிஸ்தான் நாட்டின் நன்கானா சாகிப் என்ற இடத்தில் பிறந்தார்.

Suncatcher நாவல்

- மேன்புக்கர் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்ட ஸ்ரீலங்காவைச் சேர்ந்த ரமேஷ் குணசேகர் எழுதிய நாவல் *"Suncatche"* என்ற புத்தகம் நவம்பர் மாதம் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் கடினமான நட்புகள் மற்றும் திடீரென விழிப்புணர்வு பற்றிய கதைகளை விவரிக்கிறது.

"Dharma: Hinduism and Religious in India"

- சதுர்வேதி பத்ரிநாத் எழுதிய *"Dharma: Hinduism and Religious in India* என்ற புத்தகம் எழுதியுள்ளார். இப்புத்தகத்தில் தர்மா கோட்பாடுகளை உள்ளடக்கியது. டி.எச்.ஜி வெளியீட்டு நிறுவனத்தின் தலைவர் என்.ராம் வெளியிட்டார்.

மிருதங்கத்தின் இசைச் சிறப்பு

- மிருதங்க வித்வான்கள் உமையாள்புரம் கு.சிவராமன், ராமசாமி ஆகியோரின் 'மிருதங்கத்தின் இசைச் சிறப்பு' என்ற நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் அந்த நூலைக் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்ய நாயுடு வெளியிட்டார்.

நவீன ஆங்கிலக் கவிதைகள் திரட்டு சாகித்ய அகாடமி வெளியீடு

- நவம்பர் *4, 2019* அன்று நவீன ஆங்கிலக் கவிதைகள் திரட்டு என்ற நூலை இளம் இந்தியர்கள் பயன்பெறும் நோக்கில் சாகித்திய அகாடமி வெளியிட்டுள்ளது.
- சாகித்திய அகாடமி இந்திய மொழிகளில் இலக்கிய மேம்பாட்டிற்காகப் பணியாற்றும் ஓர் அமைப்பாகும்.
- *200* ஆண்டுகளுக்கான கவிதைகளின் சிறந்த தொகுப்புகள் ஒன்றிணைத்து வழங்கப்பட்டு உள்ளது.

சாகித்திய அகாடமி

- துவக்கம் : *12* மார்ச் *1954*
- தலைமையகம் : புது தில்லி
- தலைவர் : சந்திரசேகரகம்பாரா

குருநானக் தேவ்வின் புத்தகம் வெளியீடு

- மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் போக்ரியால் நிஷ்ஹாங்க் மற்றும் உணவுச் செயலாக்க அமைச்சர் ஹர்ஷிம்ரத் கௌர் பாடால் டெல்லியில் குருநானக் தேவ்-வின் மூன்று புத்தகங்களை வெளியிட்டனர்.
- குருநானக் தேவ்-வின் *550*வது பிறந்த நாளை முன்னிட்டு இப்புத்தகம் வெளியிடப்பட்டது.
- தேசிய புத்தக டிரஸ்ட் *"Guru Nanak Bani, Nanak Bani, Sakhian Gurn Nanak Dev"* ஆகிய மூன்று புத்தகங்களை வெளியிட்டது.

"Accidental Magic"

- *"Accidental Magic"* என்ற நாவல் கர்நாடகாவில் நடைபெற்ற பெங்களூர் இலக்கிய திருவிழாவில் வெளியிடப்பட்டது. கேசவாகுஹா தனது முதல் நாவலை எழுதியுள்ளார்.

"Court of India: Past to Present"

- இந்தியாவின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் அசாமின், குஹாத்தியில் *"இந்திய நீதிமன்றங்கள் கடந்த காலம் முதல் தற்போது வரை"* என்ற புத்தகத்தின் அசாமி பதிப்பை வெளியிட்டார். புத்தகத்தை வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டுள்ளது. புத்தகத்தின் பல்வேறு அத்தியாயங்கள் நீதிமன்றத்தின் வரலாறு நிகழ்வுகளை விவரிக்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிந்தைய அஸ்ஸாம் (1947-2019)

- மூத்த பத்திரிகையாளர் மிருணாள் தலுக்தார் எழுதிய 'ஆங்கிலேயர் ஆட்சிக்கு பிந்தைய அஸ்ஸாம் *(1947-2019)* என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா, தில்லியில் நடைபெற்றது.

"From shanties to school"

- *"From Shanties to School"* என்ற தலைப்பில் கல்வியாளர் மணிமாலா ராய் எழுதிய புத்தகம் மூத்த பத்திரிக்கையாளரும், முன்னாள் எம்.பியுமான எச்.சே.துவா மற்றும் டெல்லி பல்லைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தினேஷ் சிங் ஆகியோர் வெளியிட்டனர். *1991* பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பின் நாட்டின் கல்வியறிவின் தரத்தையும், குறிப்பாக டெல்லியில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் கல்வியறிவு பற்றியும் இந்நூல் விவரிக்கிறது.

சிறார் நலனுக்கு உகந்த உணவுகள் புத்தகத்தை வெளியிட்டது யுனிசெப்

- சிறார்களின் நலனுக்கு உகந்த உணவு வகைகளைக் குறிப்பிட்டு ஐ.நா. சிறுவர் நிதியம் *(யுனிசெப்)* சார்பில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களில் யுனிசெப் சார்பில் கடந்த *2016* முதல் *2018*-ம் ஆண்டு வரை ஊட்டச்சத்து குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், *5* வயதுக்குட்பட்ட குழந்தைகளில் *35* சதவீதம் பேர் வளர்ச்சி குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.
- இதேபோல், *17* சதவீதக் குழந்தைகள் பலவீனமானவர்களாகவும், *33* சதவீத குழந்தைகள் எடைக் குறைவாகவும் இருந்ததும் கண்டறியப்பட்டது. இதன் தொடர்ச்சியாகச் சிறுவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொருட்களைப் பட்டியலிட்டு யுனிசெப் சார்பில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது.
- *28* பக்கங்களைக் கொண்ட அந்தப் புத்தகத்தில், உருளைக்கிழங்கு வைக்கப்பட்ட பரோட்டா, காய்கறி உப்புமா, முளைகட்டிய பயறுகளைக் கொண்ட சப்பாத்தி, ஜவ்வரிசி கட்லட் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் இடம்பெற்றுள்ளன. இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உணவுப்பொருட்களைத் தயாரிக்க ரூ.*20*-க்கும் குறைவாகவே செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

"Kashmir"



- *"Kashmir"* என்ற புத்தகம் வரலாற்றாளர் சித்ரலேகா ஜீட்ஷி என்பவரால் எழுதப்பட்டது. அரசியல், மதம், இலக்கியப் பாரம்பரிய மற்றும் சமூகம் பற்றி விவரிக்கிறது. இந்தப் புத்தகம் ஆக்ஸ்போர்டு இந்தியாவின் குறுகிய தொடரின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

டிஜிதான் மிஷன் தொழில்நுட்ப விருது - 2018-19

(Digidhan Mission Fi-Tech Award 2018-19)

- டெல்லியில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற தொடக்க தொழில்முனைவோர் மாநாட்டில் *(Startup Summit 2019)* "வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் மூலம் டிஜிட்டல் பணப்பரிமாற்றங்களில் புதுமை" *(Innovation in Digital Payment through Emerging Technology)* என்ற பிரிவிற்காக "பாரத் பே-க்கு" *(Bharat Pe)* டிஜிதான் மிஷன் தொழில்நுட்ப விருது வழங்கப்பட்டது.
- இந்தியாவின் மிகப்பெரிய வணிகர் ஃபின்-தொழில்நுட்ப நிறுவனம் "பாரத்பே" ஆகும். நிறுவனம் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட வணிகர்களைக் கொண்ட வலையமைப்பை உருவாக்கியள்ளது. கியூஆர் குறியீடு, கடன் மற்றும் வைப்புத்தொகை மூலம் இலவச யுபிஐ பணப்பரிவர்த்தனை வசதிகளை வழங்குகிறது.

காந்தி மண்டலோ விருது 2019

- புதுடெல்லியை தலைமையிடமாகக் கொண்ட காந்தி மண்டேலா அறக்கட்டளை, **இந்தியாவின் முதல் சர்வதேச விருது "காந்தி மண்டேலா விருது"** என உருவாக்கியுள்ளது.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை நினைவு கூறும் விதமாக இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.
- மகாத்மா காந்தி மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோரின் கொள்கைகளை இன்றைய உலகில் பின்பற்றும் புகழ்பெற்ற நபர்கள்/ அமைப்புகள் ஆகியவற்றிற்கு இந்த விருது வழங்கப்படும் என்று காந்தி மண்டேலா அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி வஉசி துறைமுகத்துக்குத் தேசிய விருது

- இந்திய அடக்கவிலை நிர்ணயக் கணக்கியல் நிறுவனம் சார்பில், 2018-ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து மற்றும் லாஜிஸ்டிக்ஸ் பிரிவின் கீழ் செலவு நிர்வாக தேசிய விருது வழங்கும் விழா தில்லியில் அண்மையில் நடைபெற்றது.
- செலவு நிர்வாகத்துக்காகத் தூத்துக்குடி வஉசி துறைமுகத்துக்குத் தேசிய விருது அண்மையில் வழங்கப்பட்டது.

சாகரோவ் பரிசு

- ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் பிரிவினைவாதத்திற்காக சீனாவில் சிறையில் அடைக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள உய்குர் இனத்தை சேர்ந்த இல்ஹாம் தோஹ்திக்கு" மனித உரிமைக்கான விருதை ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவர் டேவிட் சசோலி அறிவித்தார்.
  - இது ஐரோப்பிய ஒன்றிய (ஐரோப்பிய ஒன்றிய) நாடாளுமன்றத்தால் ஆண்டுதோறும் சுதந்திரமான பேச்சுக்காக வழங்கப்படுகிறது. இது சோவியத் இயற்பியலாளரும் அதிப்தியாளருமான ஆண்ட்ரி சாகரோவின் நினைவாக அமைக்கப்பட்டது.

இந்திரா காந்தி விருது

- தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் ஆர்வலர் சண்டி பிரசாத் பட்டுக்கு தேசிய ஒருமைப்பாட்டுக்கான இந்திரா காந்தி விருதை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா ககாந்தி வழங்கினர்.

தொழிலதிபர் வேணு சீனிவாசனுக்கு டெமிங் விருது

- டிவிஎஸ் மோட்டார் நிறுவனத் தலைவர் வேணு சீனிவாசனுக்கு ஜப்பானின் மிக உயரிய தொழில்துறை விருதான டெமிங் விருது வழங்கப்பட்டுள்ளது.
- டோக்கியோவில் நடைபெற்ற விழாவில் இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.
- இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர் டெமிங் விருதைப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.
- தரத்துடன் கூடிய மிகச் சிறப்பான சேவை புரிந்தமைக்காக இந்தவிருது அவருக்கு வழங்கப்படுகிறது. டிக்யூஎம் எனப்படும் 100 சதவீதத் தர நிர்வாக மேலாண்மைக்கு டெமிங் விருதுகள் வழங்கப்படுகின்றன.
- தொழில்துறையைப் பொறுத்தவரை, டிக்யூஎம் கடைப்பிடிக்கும் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றுக்கு வழங்கப்படும்.
- ஜப்பானின் அறிவியலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் கூட்டமைப்பு (ஜேயுஎஸ்இ) இந்த விருதை நிறுவி வழங்கி வருகிறது.
- ஜப்பான் அல்லாத பிற நாடுகளில் 100 சதவீதத் தர மேலாண்மையைக் கடைப்பிடிக்கும் நிறுவனங்கள் மற்றும் அத்தகைய தர மேலாண்மைச் சேவையில் ஈடுபட்டுள்ள தனிநபர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

'The Far Field' ஜே.பி.எஸ் பரிசு

- இந்திய-அமெரிக்க வம்சாவளியைச் சேரந்த மதுரி விஜய் அறிமுக நாவலான The Far Field என்ற புத்தகத்திற்கு ஜே.சி.பி. இலக்கியத்திற்கான பரிசு வழங்கப்பட்டது. இப்புத்தகம் சுவாரஸ்யமான மற்றும் அதிர்ச்சி தரும் உணர்ச்சி நாவல் ஆகும்.
- பிரச்சனைகள் நிறைந்த காஷ்மீரின் கதை, தேசம் குறித்த கருத்துகள் பற்றி விவரிக்கிறது.

28வது வியாஸ் சம்மன் விருது

- 2018ஆம் ஆண்டிற்கான 28வது வியாஸ் சம்மன் இந்தி எழுத்தாளர் லீலதர் ஜாகூரிக்கு புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது. திரு ஜாகூரி தனது ஜித்னே லாக் உத்னே பிரேம் கவிதைத் தொகுப்பிற்காக, விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 1991ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வியாஸ் சம்மன் விருது கே.கே.பிர்லா அறக்கட்டளையால் கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இந்தியில் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பிற்காக வழங்கப்படுகிறது.

தண்ணீர் சேமிப்புக்காக பெப்ஸிகோ இந்தியா அமெரிக்காவின் விருது வென்றது

- கார்ப்பரேட் சிறப்பிற்கான மதிப்புமிக்க விருதை அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் மைக் பாம்பியோ, பெப்சிகோ இந்தியாவுக்கு வழங்கினார்.
- 60,000 சமூக உறுப்பினர்களை மதிப்பதன் மூலம் பல்வேறு சமூகத் திட்டங்களை நடத்தி 5 பில்லியன் லிட்டர் தண்ணீரை நிரப்புவதன் மூலம் 17 பில்லயனுக்கும் அதிகமான லிட்டர் தண்ணீரை சேமிப்பதற்கான முயற்சிகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

"Miss Asia Global 2019"

- ஐந்தாவது மிஸ் ஆசியா உலகளாவிய 2019 பட்டம் கொச்சினில் நடைபெற்றது. இதில் செர்பியாவை சேர்ந்த சாரா டம்ன்ஜானோவிக் (Sara Damnjanovic) இப்பட்டம் வென்றார்.
- இந்நிகழ்ச்சி கோகுலம் கன்வென்சன் மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதர விருதுகள்

இதர விருதுகள்	விருது பெற்றவர்
Miss Asia 2019	Nguyen Thi yen Trang (வியட்னா)
Miss Beautiful Face	Samiksha Singh (இந்தியா)

2019ஆம் ஆண்டிற்கான தங்க டிராகன் விருது : நவாசுதீன் சித்திக்

- இங்கிலாந்தில் நடைபெற்ற கார்டிப் சர்வதேசத் திரைப்பட விருதுகள் திருவிழாவில் இந்திய சினிமா பிரிவில் தங்க டிராகன் விருது பாலிவுட் நடிகர் நவாசுதின் சித்திக்-க்கு வழங்கப்பட்டது.
- இந்த விழாவில் ஹாலிவுட் பழம்பெரும் நடிகர் டேம்ஜிடித் ஒரிவியாக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

2019ஆம் ஆண்டிற்கான ஆரம்பகால தொழில் ஆராய்ச்சியாளர் விருது

- இந்தியாவைச்சேர்ந்தநீராஜ் ஷர்மாவுக்கு 2019ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்பட்டது. இவ்விருது ஆஸ்திரேலியா அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது.
- அடுத்த தலைமுறை பேட்டரி அமைப்புகளான சோடியம் அயன் பேட்டரி போன்றவற்றைக் கண்டுபிடித்ததற்காக வழங்கப்படுகிறது. இந்தப் பேட்டரி மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பின் தாக்கம் குறையும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்திய மணல் சிற்பக் கலைஞருக்கு இத்தாலியன் உயரிய விருது

- மணல் சிற்பக்கலையில் சாதித்து வரும் சுதர்சன் பட்நாயக்கிற்கு இத்தாலியின் உயரிய 'கோல்டன் மணல் சிறபக்கலை விருது' அறிவிக்கப்பட்டு உள்ளது.
- ஒடிசாவைச் சேர்ந்த பிரபல சிற்பக்கலைஞர், சுதர்சன் பட்நாயக், மணல் சிற்பக்கலையில் சாதித்து வரும் சுதர்சன் பட்நாயக்கிற்கு இத்தாலியின் உயரிய 'கோல்டன் மணல் சிற்பக்கலை விருது' அறிவிக்கப்பட்டு உள்ளது. வருகிற 13 முதல் 18-ந் தேதி வரை நடைபெறும் சர்வதேச மணல் சிற்பத் திருவிழாவில் இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

பத்ம விருதுக்கு இணையான "சர்தார் படேல் தேசிய ஒருமைப்பாடு விருது" ஆண்டுதோறும் வழங்க மத்திய அரசு முடிவு

- முன்னாள் துணைப் பிரதமர் சர்தார் வல்லபாய் படேல் பெயரில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமைக்கான உயரிய குடியியல் விருது வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தேச ஒற்றுமை மற்றும் வலிமைக்காகப் பாடுபடும் நபர்களுக்கு இந்த விருது வழங்கப்படும். சர்தார் படேல் தேசிய ஒருமைப்பாடு விருது குறித்த அறிவிக்கை மத்திய உள்துறை அமைச்சகத்தால் கடந்த 20-ஆம் தேதி வெளியிடப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் சர்தார் படேலின் பிறந்த நாளான அக்டோபர் 31-ல் தேசிய ஒருமைப்பாடு தினம் கொண்டாடப்படும் வேளையில் இவ்விருது அறிவிக்கப்படும்.
- பிரதமர் தலைமையில் அமைக்கப்படும் விருதுக்கான தேர்வுக் குழுவில் கேபினட் செயலாளர், பிரதமருக்கான முதன்மை செயலாளர், ஜனாதிபதியின் செயலாளர், மத்திய உள்துறைச் செயலாளர் ஆகியோர் அடங்குவர். மேலும், இக்குழுவில் 3-4 முக்கிய பிரமுகர்களும் இடம்பெறுவர்

சேட்டனா விருது 2019

- புகழ்பெற்ற பாடகரான எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சேட்டனா வெள்ளி விழா தேசிய விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவ்விருதின் மதிப்பு ஒரு லட்சம் மற்றும் சான்றுகள் வழங்கப்படும்.
- ஆஸ்கார் விருது வென்ற ஒலிப்பொறியாளர் ரேசூல் பூகுட்டி தேசிய ஒலி சிறப்பு விருது வென்றுள்ளார். கலை-கலாச்சாரம் மற்றும் ஊடகத் துறைகளில் ஏழு இளம் திறமைகளை ஊக்குவிக்க யுவ சேட்டனா விருது வழங்கி கௌரவிக்கிறது.

விருது வென்றவர்கள் விவரம்

விருதுகள் பெயர்	பிரிவு
ஸ்ரீஜித் வெல்லட்டஞ்சூர்	கதம்
ரத்னாஸ்ரீ ஐயர்	தபேலா
ஷாஃபி க்விடின்	பதரநாட்டியம்
ரோபின் தாமஸ்	பியானோ
சரத் மோகன்	ஒலிக் கலவை
ஆர்.ஜே.நானே	ஊடகம்
செபி ஜோல் செலஸ் செரி	சினிமா

27வது எழுதச்சன் புரஸ்கரம் 2019

- புகழ்பெற்ற எழுத்தாளர் ஆனந்த் 27வது எழுதச்சன் புரஸ்கரம் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கலாச்சாரத்துறை அமைச்சர் ஏ.கே.பாலன் மிக உயர்ந்த இலக்கிய இவ்விருதை அறிவித்தார். கேரள அரசின் கேரள சாகித்ய அகாதமி விருது இந்த விருதை வழங்கியது. ஒட்டுமொத்த மலையாள இலக்கியத்திற்காக பி.சச்சினானந்தன் தேர்வு செய்யப்பட்டார்.

சி.எஸ்.ஆர். விருது

- இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் சிஎஸ்ஆர் திட்டம் சி.எஸ்.ஆர் பெரு நிறுவனங்கள் சமூகப் பொறுப்பு கடந்த 2014-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், நிறுவனங்கள் தங்கள் ஆண்டு லாபத்தில் இருந்து குறிப்பிட்ட தொகையை சமூக நலப் பணிகளுக்குச் செலவிட வேண்டும். இந்நிலையில், இந்தத் திட்டத்தின் கீழ் சிறப்பாகச் செயல்பட்ட நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், முதல் முறையாக தேசிய விருது அறிவிக்கப்பட்டது. இனி ஆண்டுதோறும் அக்டோபர் 2-ஆம் தேதி சிஎஸ்ஆர் விருதுகள் வழங்கப்படவுள்ளன.
- தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிஎஸ்ஆர் திட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்ட நிறுவனங்களுக்கு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் விருது வழங்கினார். பல்வேறு பிரிவுகளின் கீழ் 19 நிறுவனங்களுக்கு சிஎஸ்ஆர் பணியில் சிறப்பாகச் செயல்பட்டதற்கான விருதுகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீ குருநானக் தேவ் ஜி விருது

- பஞ்சாப் மாநிலம் அமைதி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைப் போதிப்பவர்களுக்கு ஸ்ரீ குருநானக் தேவ் ஜி விருது வழங்குவதற்காக, அம்மாநில அமைச்சரவை ஒருமித்த தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. குருநானக்கின் 500வது பிறந்தநாளை முன்னிட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த விருது 11 லட்சம் ரூபாய் வரை ரொக்கப் பரிசு வழங்கப்படும். இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் என்றும், மேலும் இது ஒரு நடுவர் மன்றத்தால் மாநில அரசால் அறிவிக்கப்படும்.

ஜனாதிபதி வண்ணம் விருது

- இந்தியா ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மற்றும் இந்திய விமானப்படைத் தளபதி ஜனாதிபதி வண்ணம் விருது *(President's color Award)* இந்தியக் காவல்படை அகாடெமிக்கு வழங்கினார்கள். கேரளாவில் நடைபெற்ற விழாவில் இவ்விருது வழங்கப்பட்டது. ஜனாதிபதி வண்ண விருது என்பது இராணுவத்திற்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாகும். கேரள, கொச்சின், எஜிமலா ஆகிய மூன்று வெவ்வேறு இடங்களில் கடந்த 50 ஆண்டுகளிலட இந்தியக் கடற்படை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதில் நிறுவனம் ஆற்றிய சிறந்த சேவையை அங்கீகரிப்பதற்காக இந்தியக் கடற்படை அகாடெமிக்கு வழங்கப்பட்டது.

ராஜாராம் மோகன்ராய் விருது

- இந்தியப்பத்திரிகைக்கவுன்சில் இந்தாண்டிற்கான ராஜாராம் மோகன்ராய் விருது பத்திரிகைத் துறையில் சிறந்து விளங்கியவர் களுக்கான தேசிய விருது, ராஜஸ்தான் பத்ரிகா குழுத் தலைவர் குலப் கோதாரி *(Gulab Kothari)* க்கு வழங்கப்பட்டது.
- இவ்விருது தேசியப் பத்திரிகை தினம் நவம்பர் *16, 2019* அன்று வழங்கப்பட்டது.
- விருது பெறுபவர்களைத் தேர்ந்தெடுக்க பி.சி.ஐ. யின் பிரபல உறுப்பினர்களான ஜெய் சங்கர் குப்தா, பால்விந்தர் சிங் மற்றும் அசோக் உபாத்யா ஆகியோர் கொண்ட நடுவர் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டது.

வனவிலங்கு உயிரியலாளர் கே.உல்லாஸ் கரந்த் ஜார்ஜ் ஷாலர் வாழ்நாள் விருது பெற்றார்



- வனவிலங்கு உயிரியலாளர் கே.உல்லாஸ் கராந்த் வனவிலங்குப் பாதுகாப்பு சங்கத்தின் ஜார்ஜ் ஷாலர் வனவிலங்குப் பாதுகாப்பு அறிவியலில் வாழ்நாள் விருது வழங்கப்பட்டது.வனவிலங்குப் பாதுகாப்புச் சங்க விருதை முதலில் பெற்றவர் இவர்.

நடிகர் ரஜினிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

- சர்வதேசத் திரைப்பட விழாவில், நடிகர் ரஜினிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது *(ஜகான் ஆப் கோல்டன் ஜுப்ளி விருது)* வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச திரைப்பட விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு *50*-ஆவது சர்வதேசத் திரைப்பட விழா கோவாவில் நவம்பர் *20*-ஆம் தேதி முதல் நவம்பர் *28*-ஆம் தேதி வரை நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டது.
- இந்தியாவும், ரஷியாவும் ஒருங்கிணைந்து இந்த விழாவை நடத்தியது. சர்வதேசத் திரைப்பட விழாவுக்கு இந்த ஆண்டு பொன் விழாஎன்பதால் இந்திய சினிமாவுக்கு முக்கியப் பங்களிப்பு செய்த திரைப்பட கலைஞர்களைக் கௌரவிக்க மத்திய அரசு கௌரவித்தது. பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சனுக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படும் என்று கடந்த மாதம் மத்திய அரசுஅறிவித்தது.
- இதையடுத்து கோவா சர்வதேசத் திரைப்பட விழாவைச் சிறப்பாகக் கொண்டாட மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை சார்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சர்வதேசப் பத்திரிகை சுதந்திர விருது 2019

- இந்தியப் பத்திரிக்கையாளர் நேஹா தீட்சித்-க்கு *2019*ஆம் ஆண்டிற்கான சர்வதேசப் பத்திரிக்கை சுதந்திர விருதுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவர் இந்தியாவின் மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்களைக் கண்டறியும் புலனாய்வுப் பத்திரிகையாளர் ஆவார்

தமிழகத்துக்கு உலக வேளாண் விருது

- இந்திய உணவு மற்றும் வேளாண் வர்த்தக அமைப்பு சார்பில் தமிழகத்துக்குச் சிறந்த வேளாண் மாநிலத்துக்காக 'உலக வேளாண் விருதை' வழங்கியது. இந்திய உணவு மற்றும் வேளாண்மைக்கான வர்த்தக அமைப்பின் மூலம் வேளாண்மைக்கான சீரிய பங்களிப்பை நல்கும் தனி நபர், நிறுவனங்களை ஊக்கப்படுத்தி அங்கீகாரம் அளிக்கும் வகையில், 'தேசிய வேளாண் விருது' கடந்த *2008*-ம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதுக் குழுவின் தலைவராக எம்.எஸ். சுவாமிநாதன் உள்ளார். தமிழக அரசால் வகுக்கப்பட்ட பல புதிய கொள்கைகள் மற்றும் பல்வேறு திட்டங்கள், குறிப்பாக கூட்டுப்பண்ணைய முறை, ஒருங்கிணைந்த கூட்டுப்பண்ணையம், உழவன் கைபேசி செயலி உள்ளிட்ட *11* சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், *2019*-ம்ஆண்டுக்கான 'உலக வேளாண் விருது'க்கு தமிழகம் தேர்வு செய்யப்பட்டு, டெல்லியில் கடந்த *5*-ம் தேதி நடந்த விழாவில் விருது வழங்கப்பட்டது.

அக்கினேனி நாகேஸ்வரா ராவ் தேசிய விருது

- திரைப்படக் கலைஞர் ஸ்ரீதேவி மற்றும் ரேகா அவர்களுக்கு 2018 மற்றும் 2019ஆம் ஆண்டிற்கான அக்கினேனி நாகேஸ்வரா ராவ் தேசிய விருது வழங்கப்பட்டது. இந்த விருது தெலங்கானா நடிகர் சிரஞ்சீவி வழங்கினார். சினிமாத் துறையில் சிறந்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

ஏ.பி.எல்.எஃப் உலகளாவிய ஆசியன் விருது

- ஆதித்யா பிர்லா குழுவின் தலைவர் குமார் மங்கலம் பிர்லா-க்கு ஏ.பி.எல்.எஃப் உலகளாவிய ஆசியன் விருது வழங்கப்பட்டது.
- வணிகத்தில் சிறப்பான தடம் மற்றும் சர்வதேசச் சிறந்த பங்களிப்பிற்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- ஆசிய வர்த்தகத் தலைமை மன்றம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டு தற்போது விருதுகள் வழங்குகிறது.
- இதற்கு முன்பு இவ்விருது பெற்றவர்கள் திருபாய் அம்பானி, லக்ஷ்மி மிட்டல், முகமது அலி அக்பர், ஷேக் அகமது பின் சயீத் மக்டோம்.

வாழ்நாள் சாதனையாளர் விருது

- டாடா இலக்கியம் வாழ்க! வாழ்நாள் சாதனையாளர் விருது 2019 எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், திரைப்பட விமர்சகர் சாந்தாகோக்கலே (Shanta Gokhale) என்பவருக்கு வழங்கப்பட்டது.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் தஹானு என்ற இடத்தில் 1939-ம் ஆண்டு பிறந்தார். சமிபத்தில் "One Foot on the Ground: a life told through the Body" வெளியிட்டார்.
- 2015ஆம் ஆண்டு சங்கீத்நாடக் அகாடமி விருது பெற்றார். எழுத்தாளர் கே.சச்சிதானந்தன் என்பவர் தான் டாடா இலக்கியம் வாழ்க, வாழ்நாள் சாதனையாளர் விருது என்று பெயரிட்டார்.

இந்திய இளைஞர்களுக்கு பிரிக்ஸ் விருது

- சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பலன்பெறும் வகையில் மலிவு விலையிலான பால் குளிர்படுத்தும் சாதனத்தை உருவாக்கியதற்காக இந்தியாவைச் சேர்ந்த ரவி பிரகாஷுக்கு "பிரிக்ஸ் இளம் கண்டுபிடிப்பாளர் விருது" வழங்கப்பட்டுள்ளது.
- பெங்களூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசியப் பால் பொருள்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மாணவரான ரவி பிரகாஷ், 37 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையில் உள்ள பாலை, அரை மணி நேரத்துக்குள் 7 டிகிரி செல்ஷியஸுக்குக் குளிர்விக்கும் சாதனத்தை உருவாக்கியுள்ளார்.
- இந்தச் சாதனம், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலுள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்குப் பெரும் பலனளிக்கும் என்று அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு மத்திய அரசு விருது

- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு பெருநகரப் போக்குவரத்து திட்டத்துக்கான சிறந்த விருதை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் வழங்கியுள்ளது.
- இந்தக் கருத்தரங்கில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்குப் பெருநகரப் போக்குவரத்துத் திட்டத்துக்கான சிறந்த விருது வழங்கப்பட்டது.

ஆசிய சொசைட்டியின் கேம் சேஞ்சர் விருது

- மனித உரிமை வக்கீல்களான துருக்பா ஆணையின் குங்ஃபூ கன்னியாஸ்திரிகள், பெண்களை மேம்படுத்துவதற்கும், இமயமலையில் பாலினக் குற்றங்களை அகற்றியதற்காகவும் நியூயார்க்கின் ஆசியா சொசைட்டி மதிப்புமிக்க கேம் சேஞ்சர் விருதைப் பெற்றனர்.
- அவர்களின் வீர செயல்பாட்டிற்காகவும், பெண்கள் அதிகாரம் பெறுவதற்காகவும் விருதைப் பெற்றனர்.

ஆசியா சொசைட்டி கேம் சேஞ்சர் விருதுகள் பற்றி

- *1956*இல் நிறுவப்பட்ட ஆசியா சொசைட்டி, இலாப நோக்கமற்ற கல்வி நிறுவனமாகும்.

தங்கமயில் விருது

- தேசிய அனல் மின் நிறுவனத்திற்கு *2019* ஆம் ஆண்டின் தங்க மயில் விருது நிலைத்தன்மை *(Sustainability)* என்ற பிரிவிற்காக வழங்கப்பட்டது. இவ்விருது லண்டனில் நடைபெற்ற *19*-வது சர்வதேச ஆளுமை மற்றும் நிலைத்தன்மை மாநாட்டில் வழங்கப்பட்டது.
- தேசிய அனல் மின் நிறுவனம் இந்தியாவின் மிகப்பெரிய மின்சார உற்பத்தி நிறுவனமாகும்.

தேசிய அனல் மின்உற்பத்தி நிறுவனம்

- *தொடக்கம் – 1975*
- *தலைமையிடம் – டெல்லி*
- *தலைவர் மற்றும் இயக்குநர் – குர்மித் சிங்*

பாலா கைலாசம் நினைவு விருது 2019

- ஆவணப்பட தயாரிப்பாளர் ஆர்.வி.ரமணி அவர்களுக்கு *oh that's Bhanu* என்ற திரைப்படத்தை உருவாக்கியதற்காக பாலா கைலாசம் நினைவு விருது பெற்றார். நினைவாற்றல் இழப்பால் அவதிப்பட்டு வரும் பானுமதியின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டது.

சிறந்த மனிதர் : விராட் கோலிக்கு பீட்டா அமைப்பு விருது

- இந்தியக் கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி *2019*-ம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று விலங்குகள் நல அமைப்பான பீட்டா தேர்வு செய்துள்ளது.
- சமீபத்தில் அமர் கேரட்டை யில் ஒரு யானையை *8* பேர் கொண்ட குழு துன்புறுத்தியதைப் பார்த்த விராட் கோலி, உடனடியாக பீட்டா அமைப்பைத் தொடர்பு கொண்டு பேசினார்.
- விலங்குகள் நலனின் மீது ஆர்வமாக இருக்கும் விராட் கோலிக்கு *2019*-ம் ஆண்டின் சிறந்த மனிதர் விருது பீட்டா சார்பில் வழங்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன் பீட்டா இந்தியா சார்பில் காங்கிரஸ் எம்.பி. சசி தரூர், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கே.எஸ். பனிக்கர் ராதாகிருஷ்ணன், ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

விலங்குகளை நன்முறையில் நடத்த விழைகின்ற நல அமைப்பு - பீட்டா

- *தொடக்கம் – 22, மார்ச் 1980*
- *தலைமையிடம் – அமெரிக்கா*
- *விலங்குகள் நல அமைப்பு*

பசுமைச் சுற்றுலா விருது

- அருணாச்சலப் பிரதேச மாநில அரசுக்குச் சுற்றுலாத் துறை சார்பாக "சிறந்த வளர்ந்து வரும் பசுமைச் சுற்றுலா இலக்கு" விருது *(Best Emerging Green Tourist Destination)* வழங்கப்பட்டுள்ளது. பயணங்கள் மற்றும் லெய்சூர் பத்திரிக்கை நடத்திய இணையத்தள கருத்துக் கணிப்பின் மூலம் வெற்றியாளர்கள் முடிவு செய்யப்பட்டனர். அருணாச்சலப் பிரதேசம் உலகின் கடைசி உண்மையிலேயே ஆராயப்படாத *(Truly unexplored)* இடங்களில் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டன்பரோவுக்கு இந்திரா காந்தி அமைதி விருது



- இயற்கை ஆர்வலர் டேவிட் அட்டன்பரோவுக்கு இந்த ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருது வழங்கப்படுகிறது. இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை சார்பில் இந்த விருது வழங்கப் படுகிறது. ரூ.25 லட்சம் ரொக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகிறது.
- *2019*-ம் ஆண்டுக்கான விருது இயற்கை ஆர்வலர் டேவிட் அட்டன்பரோவுக்கு வழங்கப்படுகிறது. முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான தேர்வுக்குழு இந்திரா அமைதி விருதுக்கு டேவிட் அட்டன்பரோ பெயரைத் தேர்வு செய்துள்ளார்.

டெல்லி மெட்ரோ: இரண்டு விருதுகள் வென்றது

- *12*-வது நகர்ப்புற மொபிலிட்டி இந்தியா மாநாடு மற்றும் கண்காட்சி டெல்லியில் நடைபெற்றது. இதில் டெல்லி மெட்ரோ ரயில் நிலையத்திற்குப் "பசுமை மெட்ரோ ரயில் திட்டம்" நிலையான மற்றும் சாத்தியமான நகரப் போக்குவரத்திற்கான ஒரு முயற்சி மற்றும் சிறந்த மோட்டார் அல்லாத போக்குவரத்து *(Best Non-Motarised Transport)* என்ற இரண்டு பிரிவுகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

பஜிரங் புனியா, மஹந்த் கெசாவ் ஷர்மா

- துபாயில் நடைபெற்ற இந்தோ அரபுத் தலைவர்கள் மாநாடு மற்றும் விருதுகள் *2019* நிகழ்ச்சியில் இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியாவுக்கு இந்திய ஆளுமை ஆண்டு விருது *(Indian Personality of the year Award)* வழங்கப்பட்டது. உலகப் பவர்லிப்டிங் சாம்பியன் மஹந்த் கௌரவ் ஷர்மா அவர்களுக்கு ஆண்டின் தொலைநோக்குத் தலைவர்கள் *(விளையாட்டு)* விருது வழங்கப்பட்டது.

ஆசியத் திரைப்படத் திருவிழா பார்சிலோனா

- *"போன்ஸ்லே" (Bhonsle)* என்ற திரைப்படம் ஆசிய திரைப்படத் திருவிழா பார்சிலோனா என்ற விருது பெற்றது. இந்த விருதில் "சிறந்த திரைக்கதை" மற்றும் "சிறந்த இயக்குநர்" என்ற பிரிவுகளில் விருது பெற்றது. இப்படத்தை தேவாஷிஷ் மகிஜா என்பவர் இயற்றியுள்ளார்.
- மனோஸ் பாஜ்பயே காவல்துறை கான்ஸ்டபிள் ஆக இருந்து அரசியல்வாதிகளால் புலம் பெயர்ந்தவர்களுக்கு உதவுகிறார் என்பதை இத்திரைப்படம் விளக்குகிறது.

செஸ் விளையாட்டில் புதிய கண்டுபிடிப்பு
மாற்றுத் திறனாளி சிறுவனுக்குத் தேசிய விருது

- செஸ்' விளையாட்டில், இருவருக்குப் பதில், *6, 12* மற்றும் *60* பேர், ஒரே நேரத்தில் விளையாடும் வகையில், புதிய, 'போர்டு' களைக் கண்டுபிடித்த மாற்றுத் திறனாளிச் சிறுவன், தேசிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ராஜஸ்தானில், தலைநகர் ஜெய்ப்பூரைச் சேர்ந்த ஹிருதயேஷ்வர் சிங் பட்டி. கடந்த, *2013*ல், *9* வயதாக இருந்த போது, ஒரே நேரத்தில், ஆறு பேர் விளையாடும் வகையில், வட்ட வடிவ செஸ் போர்டைக் கண்டுபிடித்து, அதற்குக் காப்புரிமையையும் பெற்றார். நாட்டிலேயே மிக இளம் வயதில் காப்புரிமை பெற்றவர்; உலகளவில் காப்புரிமை பெற்ற, இளம் மாற்றுத் திறனாளி என்ற பெருமைகளும், ஹிருதயேஷ்வருக்குக் கிடைத்தன. இந்நிலையில், சாதனை படைக்கும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் தேசிய விருதுக்கு, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துணை அமைச்சகம், ஹிருதயேஷ்வரைத் தேர்வு செய்துள்ளது.

சிறந்த செயல்பாட்டுக்காகத் தமிழக அரசுக்கு 3 விருதுகள்

- சிறந்த செயல்பாடுகளுக்காகத் தனியார் பத்திரிகை நிறுவனம் சார்பில் தமிழக அரசுக்கு மூன்று விருதுகள் வழங்கப்பட்டன. 'இந்தியா டுடே' பத்திரிகையின் சார்பில் 'மாநிலங்களில் சிறந்த மாநிலம்' விருதுகள் 2019 வழங்கும் விழா தில்லியில் நடைபெற்றது.
- 'இந்தியா டுடே' குழுமத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்தியாவில் பெரிய மாநிலங்களில் அனைத்துத் துறைகளின் செயல்பாட்டில் மிகச் சிறந்த மாநிலம், சட்டம் ஒழுங்கைச் சிறப்பாகப் பராமரிப்பதில் மிகச் சிறந்த மாநிலம், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் மிகச்சிறந்த முன்னேற்றம் அடைந்த மாநிலம் ஆகிய மூன்று விருதுகள் தமிழகத்திற்கு வழங்கப்பட்டன.
- இந்த விருதுகளை மத்திய சுற்றுச்சூழல், தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் வழங்க, தமிழக முதல்வரின் சார்பில் மீன்வளத் துறை மற்றும் பணியாளர் நலத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் பெற்றுக் கொண்டார்.
- முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொலைநோக்குப் பார்வையுடன் '2023 விஷன்' எனும் ஆவணத்தைத் தயாரித்தார். அதில் கிட்டத்தட்ட 217 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், இந்த விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- கடந்த ஆண்டும் இதேபோன்று இந்தியா டுடே பத்திரிகை வழங்கிய விருதுகளில் பெரிய மாநிலங்களில் அனைத்துத் துறைகளின் செயல்பாட்டில் மிகச்சிறந்த மாநிலம் என்ற விருது உள்பட முக்கிய விருதுகளைத் தமிழ்நாடு அரசு பெற்றது.

ஸ்வச் சர்வேக்சன் கிராமின் விருது 2019

- டெல்லியில் நடைபெற்ற உலகக் கழிப்பறை தின நிகழ்ச்சியில், மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம் ஸ்வச் சர்வேக்சன் கிராமின் கீழ் சிறப்பாகச் செயல்பட்ட மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கியது.

விருது விவரம்

தரவரிசை	விருது பெற்றவை
முதல் இடத்தில் உள்ள மாநிலம்	தமிழ்நாடு
முதல் இடத்தில் உள்ள மாவட்டம்	தெலங்கானா (பெட்டபள்ளி – Ped-dapalli)
அதிகபட்சம் குடிமக்கள் பங்களிப்பு கொண்ட மாநிலம்	உத்தரபிரதேசம்

ஸ்வச் சர்வேஷன் கிராமின்

- மத்தியக் குடிநீர் மற்றும் துப்புரவுத்துறை அமைச்சகம் ஸ்வச்சர்வேஷன்கிராமின் என்ற அறிக்கை வெளியிட்டுள்ளது.
- ஸ்வச் பாரத் கிராமீன் என்ற திட்டத்தின் முக்கிய அளவுகள் மற்றும் தகுதிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்களைத் மாவட்டங்கள் தரவரிசைப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

சர்வதேசச் குழந்தைகள் அமைதி பரிசு 2019

- 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேசக் குழந்தைகள் அமைதிப் பரிசு, பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவைத் தடுக்க வலியுறுத்தி ஐ.நாவில் குரலெழுப்பிய 16 வயது சிறுமியான ஸ்வீடனைச் சேர்ந்த கிரெட்டா தும்பெர்க்கும், கேமரூனைச் சேர்ந்த அமைதி ஆர்வலர் திவினா மல்லோகும் (Divina Maloum) ஆகிய இருவருக்கும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- இவ்விருதினை இந்தியக் குழந்தைகள் உரிமை ஆர்வலர் கைலாஷ் சத்யார்த்தி அவர்கள் வழங்கினார்.

1.9 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

சிவகங்கை பாகனேரியில் 1000க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம் பாகனேரியில் 200 ஆண்டுகள் பழைமையான நூல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- நூல் கண்டறியும்போது கடந்த 1806-ஆம் ஆண்டு வெளியான 'மாறனலங்கார விஷய சூசிகை' எனும் மிகப் பழைமையான அகராதி கிடைத்துள்ளது.
- தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து தமிழகத்தில் உள்ள ஏராளமான பல அரிய நூல்களைக் கண்டறிந்து பழமை மாறாமல் மின் எண்மம் செய்து நூலாக்கித் தமிழக அரசின் 'அரிய நூல் அனைவருக்கும்' எனும் திட்டத்தின் மூலம் வெளியிட்டு வருகிறது.
- இந்த நூல்கள் அனைத்தும் முறையாகப் பெறப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலமாக மின் எண்மம் செய்யப்பட்டு, மறுவெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

அரிய சொற்கள்- செய்திகள்:

- கடந்த 1883-ஆம் ஆண்டு வெளியான 'கோடீச்சுவரக் கோவை ஆராய்ச்சி' எனும் நூலில் சிவபெருமானின் உருவத் திருமேனி குறித்த 100-க்கும் மேற்பட்ட அரிய சொற்கள் மற்றும் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

என்னென்ன நூல்கள்

- நபிகள் நாயகத்தின் ஜீவிய சரித்திரம் (1931),
- சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் (1872),
- ஸ்ரீ கிருஷ்ண சுவாமி தூது (1887),
- கா.சு. பிள்ளை தமிழகமெங்கும் தேடித் திரட்டித் தொகுத்தளித்த தனிப்பாடல் திரட்டு (1905),
- திருவாரூர் தியாகராசர் லீலை (1905),
- முஸ்லிம் சங்க மறுகமலம் (1920),
- அற்புத ராமாயணம் (1911),
- பிரபஞ்ச உற்பத்தி (1913),
- முன்னாள் முதல்வர் அண்ணா எழுதிய நூல்களில் பல நூல்கள் முதற்பதிப்பாகக் கிடைத்துள்ளன. அந்த நூல்களில் அண்ணாவின் பெயர் தளபதி சி.என். அண்ணாதுரை என்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தா விக்டோரியா ஹாலில்-ஜாலியன் வாலாபாக் நினைவுக் கண்காட்சி

- ஆங்கிலேய ஆட்சியின் நினைவுச் சின்னமாக விளங்கும் விக்டோரியா ஹாலில் ஜாலியன் வாலாபாக் நினைவு அருங்காட்சியகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்த 1919ம் ஆண்டிற்கு அடுத்த இரண்டு ஆண்டுக்குள் 1921ல் விக்டோரியா மஹால் திறக்கப்பட்டது. *"Ways of Remembering Tallianwala Bagh and Rabindra Nath Tagore's Response to the Massacre"* என்ற தலைப்பில் இந்த கண்காட்சி நடத்தப்பட உள்ளது.

1.10 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

9வது பங்களாதேஷ்-இந்தியா நட்பு உரையாடல்

- பங்களாதேஷ்-இந்தியா நட்பு உரையாடலின் ஒன்பதாவது பதிப்பு நவம்பர் 1 பங்ளாதேஷின் காக்ஸ் பஜாரில் நடைபெற்றது. உரையாடல் வர்த்தகம் மற்றும் முதலீடு, இணைப்பு, தொழில்நுட்பம், எரிசக்தி, பிராந்தியப் பாதுகாப்பு, தீவிரவாதம் போன்ற பல்வேறு விஷயங்களை உள்ளடக்கும்.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய முஸ்லீம் கூட்டம் பிஷ்வா இஜ்தேமா

- ஹஜ்ஜிக்கு பிறகு முஸ்லிம் சமூகத்தின் இரண்டாவது பெரிய சபையான பிஷ்வா இஜ்தேமாவின் முதல் கூட்டம் வங்கதேச நாட்டின் தலைநகரான டாக்காவில் அடுத்த ஆண்டு ஜனவரி 10 முதல் 12 வரை நடத்துகிறது. இரண்டாவது கூட்டம் ஜனவரி 17 முதல் 19 வரை உள்ளது.
- 1967 ஆம் ஆண்டு டாக்காவில் உருவானதில் இருந்து ஆண்டுதோறும் 160 பரப்பளவு கொண்ட டோங்கி அருகில் உள்ள துராக் நதி கரையில் பிஷ்வா இஜ்தேமா கூட்டம் நடைபெறும்.

டாக்கா உலகளாவிய உரையாடல்

- டாக்கா உலகளாவிய உரையாடலின் முதல் பதிப்பை பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா திறந்து வைத்தார். மூன்று நாள் நீடித்த நிகழ்ச்சியை அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளை (ORF) மற்றும் பங்களாதேஷ் சர்வதேச மற்றும் மூலோபாய ஆய்வுகள் நிறுவனம் (BIISS) இணைந்து நடத்தியது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் சூழலில் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்க 50 நாடுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர்.

காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் மாநாட்டை இலங்கை நடத்துகிறது

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் மாநாடு ஸ்ரீ லங்கா நாட்டின் கொழும்பு தலைநகரில் நவம்பர் 4 முதல் 7 வரை நடைபெற்றது.
- இந்தியா சார்பில் மத்திய சட்ட நீதி அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் கலந்து கொண்டனர்.
- இந்த மாநாட்டின் நோக்கம் : "Equal Access to Justice and Rule of law காமன்வெல்த் நாடுகளைச் சேரந்த சட்ட அமைச்சர் மற்றும் அட்டர்லி ஜெனரல் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

குருநானக் நினைவாகப் பாகிஸ்தானில் நாணயம் வெளியீடு

- சீக்கிய மதத்தை நிறுவியவரும், சீக்கியர்களின் முதல் குருவுமான குருநானக் தேவின் 550-ஆவது பிறந்த தினத்தையொட்டி, அவரது நினைவாகப் பாகிஸ்தானில் நாணயம் வெளியிடப்பட்டது.
- பாகிஸ்தானின் ஸ்ரீ நான்கானா சாஹிப் பகுதியில் பிறந்தவர் குருநானக் தேவ். சீக்கிய மதத்தைப் பரப்பிய அவரது 550-ஆவது பிறந்த தினம் இந்த ஆண்டு கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, அவரது நினைவாக நாணயம் வெளியிட்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.

இலங்கை மீது மேட்ச் பிக்சிங் குற்றச்சாட்டு

- தெற்காசிய நாடுகளில் முதன்முறையாக இலங்கை நாடு மேட்ச் பிக்சிங்கில் ஈடுபட்டதாகப் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளது.
- இலங்கைப் பாராளுமன்றத்தின் விளையாட்டுத் துறை தவறுகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலம் குற்றங்கள் விசாரிக்கப்பட உள்ளன.
- இந்தச் சட்டம் இயற்றுவதற்கு இலங்கை விளையாட்டு அமைச்சகமும் சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சிலும் இணைந்து செயல்பட்டுள்ளன.

கலபாணி பிராந்திய சர்ச்சை



- *370வது* பிரிவைநீக்கியபின்னர்ஜம்மு-காஷ்மீரின் அரசியல் வரைபடத்தை இந்தியா மீண்டும் உருவாக்கியது. நேபாளத்தின் தர்ச்சுலா மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதுவதால், இந்திய மண்டலத்தின் கீழ் "கலபானி" சேர்க்கப்படுவதை நேபாள அரசு கடுமையாக எதிர்த்தது. புதிதாக வெளியிடப்பட்ட வரைபடத்தில் நேபாளத்துடனான தனது எல்லையில் எந்த மாற்றமும் செய்யவில்லை என்றும், அது தனது இறையாண்மையைத் துல்லியமாகச் சித்தரிக்கிறது என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

டாக்கா சர்வதேச நாட்டுப்புறத் திருவிழா

- ஐந்தாவது டாக்கா சர்வதேச நாட்டுப்புறத் திருவிழாவை அந்நாட்டின் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் டாக்டர் ஹகன் மகமுத், வங்காளத்தின் இராணுவ மைதானத்தில் தொடங்கி வைத்தார். ஆசியாவின் மிகப்பெரிய நாட்டுப்புற விழாவில் 6 நாடுகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்றனர். மூன்று நாள் திருவிழாவில் பங்களாதேஷ் இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த பிரபல மற்றும் புகழ்பெற்ற கலைஞர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஐ.யு.சி.என்.வின் ஏழாவது பிராந்தியப் பாதுகாப்பு மன்றம்

- இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் ஏழாவது பிராந்தியப் பாதுகாப்பு மன்றத்தை அண்டை நாடான பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் செயலாளர் இந்தியா சார்பாக பங்கேற்க உள்ளார். மன்றத்தில் பல்வேறு நாடுகள் கார்ப்பரேட் துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

3000 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த நகரம்

- பாகிஸ்தானில் 3,000 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த நகரமொன்றை அந்த நாட்டுத் தொல்லியல் துறையினர் கண்டறிந்துள்ளனர். மாவீரர் அலெக்ஸாண்டர் காலத்தியது என்று கருதப்படும் அந்த நகருக்கு 'பஸீரா' என்று பெயரிடப்பட்டுள்ளது. கைபர் பாக்துன்கவா மாகாணத்தின் பாரிகோட் தாலுகாவில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் இந்த நகரம் கண்டறியப்பட்டுள்ளது. ஏற்கெனவே, இந்தப் பகுதியில் 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய நாகரிகமும், தொல்பொருள்களும் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- புதிதாக அறியப்பட்டுள்ள பஸீரா நகரில், ஹிந்துக் கோயில்கள் இருந்திருக்கலாம் என்பதற்கான தடயங்களும், நாணயங்கள், ஸ்தூபங்கள், பானைகள் ஆகியவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.மு. 326-ஆம் ஆண்டில் தனது எதிரிப் படையைத் தோற்கடித்த அலெக்ஸாண்டர், இந்த நகரை நிர்மாணித்திருக்கலாம் என்று கூறும் நிபுணர்கள், அவர் வருவதற்கு முன்னரே இங்கு மனிதர்கள் வசித்து வந்திருப்பதற்கான தடயங்களும் கிடைத்துள்ளதாகக் கூறினர்.

இந்திய அரசின் உதவியுடன் நேபாளத்தில் புதிய பள்ளிக் கட்டடம் திறப்பு

- நேபாளத்தில் இந்திய அரசின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடத்தை அந்நாட்டுக்கான இந்தியத் தூதர் மஞ்சீவ்சிங் புரி திறந்து வைத்தார். புதியதாகக் கட்டப்பட்டுள்ள இப்பள்ளிக் கட்டடத்துக்கு இந்திய அரசு சார்பில் ரூ.1.87 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

பிங்க் பந்து டெஸ்டைத் தொடங்கி வைத்தார் ஷேக் ஹசினா

- வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தியா – வங்காளதேசம் இடையிலான பிங்க் பந்து (பகல் – இரவு மோதல்) டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டனில் தொடங்கியது.
- இந்த போட்டியைப் பார்ப்பதற்காக வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசினா கொல்கத்தாவுக்கு வருகை தந்தார்.
- இந்த டெஸ்டைக் கொண்டாடும் வகையில் இரவு நேரத்தில் கொல்கத்தாவில், குறிப்பிட்ட கட்டிடங்கள் "பிங்க்" நிற மின்னொளியில் ஜொலிக்கவைக்கப்பட்டது. இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில் ஷேக் ஹசினாவுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

உலகிலேயே டைபாய்டு காய்ச்சலுக்கு முதல்முறையாக புதிய தடுப்பூசியை அறிமுகம் செய்த பாகிஸ்தான்

- உலகிலேயே டைபாய்டு காய்ச்சலுக்கு முதன் முறையாக தடுப்பூசியைப் பாகிஸ்தான் அறிமுகம் செய்துள்ளது.
- அந்த நாட்டில் உள்ள சிந்து மாநிலத்தில் டைபாய்டு காய்ச்சலில் ஏராளமானோர் ஆண்டுதோறும் உயிரிழப்பதால், அங்கு முதன்முதலில் இந்தத் தடுப்பூசியைப் பாகிஸ்தான் அறிமுகம் செய்துள்ளது
- கடந்த 2016-ம் ஆண்டில் இருந்து தடுப்பூசிகளால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு சல்மோனெல்லா டைபி பாக்டீரியா எனப்படும் சூப்பர்பக் டைபாய்டு காய்ச்சல் பரவியது. சிந்து மாநிலத்தில் இந்த சூப்பர் பக் டைபாய்டு காய்ச்சலால் 11 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். உயிரிழப்பும் 20 சதவீதம் அதிகரித்தது.
- இதையடுத்து சூப்பர்பக் டைபாய்டு காய்ச்சலுக்காக "தி டைபாய்ட் கான்ஜுகேட் வாக்ஸின்"(டிசிவி) தடுப்பூசியைப் பாகிஸ்தான் அறிமுகம் செய்துள்ளது. இந்தத் தடுப்பூசி அறிமுக நிகழ்ச்சி கராச்சி நகரில் நடந்தது.

இந்திய-சீன உறவின் 70-ஆவது ஆண்டைக் கொண்டாட 70 நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

- இந்தியா, சீனா இடையே தூதரக ரீதியிலான உறவு ஏற்பட்டு 70 ஆண்டுகள் ஆவதைக் கொண்டாடும் வகையில், இரு நாடுகளும் இணைந்து அடுத்த ஆண்டு 70 நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கின்றன. இந்திய-சீன உறவின் 70-ஆவது ஆண்டை முன்னிட்டு, இரு நாடுகளுக்கு இடையே நாடாளுமன்ற அளவிலான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.
- இதுதவிர, வர்த்தகம், கல்வி, கலாசாரம், பாதுகாப்புத் துறை என பல்வேறு நிலைகளில் இருதரப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. அதிகரித்தது. இது இந்த ஆண்டு ரூ.7 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஷகீன் - 1 ஏவுகணையைப் பாகிஸ்தான் வெற்றிகரமாகச் சோதித்தது

- இந்தியாவுக்குப் போட்டியாக பாகிஸ்தானும் ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. இதில் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ரகத்தைச் சேர்ந்த ஷகீன்-1 ஏவுகணை குறிப்பிடத்தக்கது. இந்த ஏவுகணைகள் அனைத்து வகையான வெடி பொருட்களுடன், 650 கி.மீ. வரை சென்று தாக்கும் திறன் பெற்றதாகும்.

ஷகீன்-1:

- இது நில அடிப்படையிலான சூப்பர்சோனிக் குறுகிய தூரம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணை.
- இது பாகிஸ்தான் தேசியப் பொறியியல் மற்றும் அறிவியல் ஆணையம், தேசியப் பாதுகாப்பு வளாகத்தின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. இதன் வடிவமைப்பு சீன எம் 9 ஏவுகணையை அடிப்படையாகக் கொண்டது. இது ஏப்ரல் 1999ல் முதன் முதலில் சோதனை செய்யப்பட்டது.

இலங்கை அதிபராகிறார் கோத்தபய ராஜபட்ச

- இலங்கையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், முன்னாள் பாதுகாப்புச் செயலரும், முன்னாள் அதிபர் மகிந்த ராஜபட்சவின் சகோதரருமான கோத்தபய ராஜபட்ச வெற்றி பெற்றார்.

1.11 நியமனங்கள்

உச்சநீதிமன்றத்தின் 47வது தலைமை நீதிபதியாக எஸ்ஏ. போப்டே நியமனம்

- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக சரத் அரவிந்த் போப்டே நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலைக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- உச்சநீதிமன்றத்தின் 47-ஆவது நீதிபதியாக எஸ்.ஏ.போப்டே, நவம்பர் 18-ஆம் தேதி பதவியேற்றுக் கொண்டார்.

முக்கிய வழக்குகள்

- அயோத்தி நில வழக்கில் அண்மையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கிய அரசியல் சாசன அமர்வில் எஸ்.ஏ.போப்டே இடம்பெற்றிருந்தார் தனிநபர் ரகசியம் காப்பது அடிப்படை உரிமை என்று கடந்த 2017-இல் தீர்ப்பளித்த அப்போதைய தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் தலைமையிலான 9 நீதிபதிகள் கொண்ட அமர்விலும் இவர் அங்கம் வகித்திருந்தார். 'ஆதாரை காரணம் காட்டி அரசின் சேவைகளை மறுக்கக் கூடாது' என்ற தீர்ப்பை, கடந்த 2015-இல் உச்சநீதிமன்றம் வழங்கியது. எஸ்.ஏ.போப்டே இடம்பெற்றிருந்த 3 நீதிபதிகள் அமர்வே இத்தீர்ப்பை அளித்திருந்தது. தற்போது 47-ஆவது தலைமை நீதிபதியாக பதவியேற்கும் எஸ்.ஏ.போப்டே, 2021, ஏப்ரல் 23-அம் தேதி வரை அப்பதவியை வகித்தார்.

தேசியப் பாதுகாப்புத் துணை ஆலோசகராக தத்தாத்ரேய பட்சல்கிகர் நியமனம்

- மும்பைக் காவல்துறை முன்னாள் ஆணையரும், மகாராஷ்டிரக் காவல்துறையின் முன்னாள் இயக்குநருமான தத்தாத்ரேய பட்சல்கிகர் தேசியப் பாதுகாப்புத் துணை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய நில துறைமுக ஆணையத்தின் புதிய தலைவர் நியமனம்

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு (இந்திய நிலத்துறை முக ஆணையத்தின் (எல்பிஏஐ) தலைவராக மூத்த இந்திய போலீஸ் சேவை சேர்ந்த (ஐபிஎஸ்) அதிகாரி ஆதித்யா மிஸ்ராவை நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒரு நபர் தேடல்-தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அவர் நியமிக்கப்பட்டார்.

இந்திய நில துறைமுக ஆணையம் (LPAI)

- எல்.பி.ஏ.ஐ. என்பது மார்ச் 1, 2012 அன்று நிலத் துறைமுக ஆணையச் சட்டம் 2010 ஆல் அமைக்கப்பட ஒரு சட்டபூர்வமான அமைப்பாகும்.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் (எம்.எச்.ஏ) கீழ் செயல்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றப் புதிய தலைமை நீதிபதி ஏ.பி. சாஹி

- சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக அமரேஷ்வரர் பிரதாப் சாஹியை நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்தார்.
- நவம்பர் 13-ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக அமரேஷ்வரர் பிரதாப் சாஹி பதவியேற்றார்.

ஜம்மு-காஷ்மீர், லடாக்கிற்குத் துணைநிலை ஆளுநர்கள் நியமனம்

- புதியதாக உருவாக்கப் பட்டுள்ள ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கான துணைநிலை ஆளுநராக ஐஏஎஸ் அதிகாரி கிரீஷ் சந்திர முர்மு, லடாக் யூனியன் பிரதேசத்துக்கான துணைநிலை ஆளுநராக மற்றொரு ஐஏஎஸ் அதிகாரி ஆர்.கே.மாத்துர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் அக். 31-ஆம் தேதி பதவியேற்றுக் கொண்டனர். இதற்கான உத்தரவைக் குடியரசுத் தலைவர் பிறப்பித்தார்.

தென்னிந்தியாவின் முதல் பெண் விமான நிலையத் தீயணைப்பு வீரர் நியமனம்

- இந்திய விமான நிலைய ஆணையத்தின் தென்மண்டலத்தில், முதலாவது பெண் தீயணைப்பு வீரராக ரம்யா ஸ்ரீ கண்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தென்னிந்தியாவில் உள்ள, இந்தியா விமானநிலைய ஆணைய விமான நிலையங்களில் முதலாவதாகவும், இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் மூன்றாவது பெண் தீயணைப்புப் பணியாளராகவும், ரம்யா ஸ்ரீ கண்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூகுள் இந்தியாவின் மேலாளராக சஞ்சய் குப்தா நியமனம்

- கூகுள் இந்தியா தனது புதிய மேலாளராகவும், இந்தியாவுக்கான விற்பனை மற்றும் செயல்பாடுகளின் துணைத் தலைவராகவும் சஞ்சய் குப்தாவை நியமித்தது.
- அவர் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் குருகிராம் ஹைதராபாத் மற்றும் பெங்களூரைத் தளமாகக் கொண்ட அணிகளுடன் பணியாற்றுவார்.
- ராஜினாமா செய்த ராஜன் ஆனந்தனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் முதல் பெண் நீதிபதி அட்வகேட் பொது அதிகாரி நியமனம்

- லெப்டினைட் கேர்னல் ஜோதி ஷர்மா இந்திய ராணுவத்தின் முதல் பெண் நீதிபதி அட்வகேட் பொது அதிகாரியாக வெளிநாட்டுப் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளார்.
- சீஷெல்ஸ் அரசாங்கத்துடன் இராணுவச் சட்ட நிபுணராக அவர் நியமிக்கப்படுவார் என்று இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அமைப்பு மேம்பாட்டுச் சங்கத்தின் துணைத்தலைவராக முதல் இந்தியர் நியமனம்

- மும்பையைச் சேர்ந்த டாக்டர் வினயா செட்டி சர்வதேச அமைப்பு மேம்பாட்டுச் சங்கத்தின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். ஐ.ஓ.டி.ஏ இன் பொதுத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.
- இந்தியாவில் உள்ள அனைத்துத் தொழில் அமைப்புகளையும் மாற்றுவதற்கு இவர் உதவியுள்ளார். மேலும் 2009ஆம் ஆண்டு முதல் ஐ.ஓ.டி.ஏ இணைந்து பணியாற்றி வருகிறார்.
- 2016ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மாநாடு வர்த்தகம் மற்றும் மேம்பாட்டால் மதிப்புமிக்க எம்ப்ரெடெக் வுமன் இன் பிசினஸ் விருதிற்காக இறுதி போட்டியாளர் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் ஆவார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிப் பணி விஞ்ஞானிகள் சங்கத்தின் தலைவராக ச.மணிவண்ணன் தேர்வு

- இந்திய அளவிலான வேளாண் ஆராய்ச்சிப் பணி விஞ்ஞானிகள் சங்கத்தின் தலைவராகத் தமிழகத்தைச் சேர்ந்த ச.மணிவண்ணன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய வேளாண் ஆராய்ச்சிப் பணி விஞ்ஞானிகள் சங்கத்தின் 2019-2022 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்றது. கடந்த 1980 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இச்சங்கத்தில் தென் இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல்முறை ஆகும்.

நீதித்துறை நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக மன்மோகன்சிங் நியமனம்

- முன்னாள் பிரதமரும் தற்போது மாநிலங்களவை உறுப்பினருமாக உள்ள மன்மோகன்சிங், நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழு உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்தியக் கப்பற்படைக்கான முதல் பெண் விமானி

- இந்தியக் கப்பற்படைக்கான முதல் பெண் விமானி ஷிவாங்கி கப்பற்படை தினமான டிசம்பர் 4 அன்று பணியில் சேர உள்ளார் கொச்சியில் பயிற்சியை நிறைவு செய்த ஷிவாங்கி பணியில் சேர உள்ளார்.
- பிஹார் மாநிலம் முசாபர்பூரை சேர்ந்த ஷிவாங்கி கடந்த ஆண்டு ஜூனில் இந்தியக் கடற்படையில் சேர்ந்தார். விமானிக்கான பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த அவர் வரும் 2-ம் தேதி முதல் கடற்படையின் டோர்ணியர் விமானத்தை இயக்க உள்ளார். இதன் மூலம் கடற்படையின் முதல் பெண் விமானி என்ற பெருமையை ஷிவாங்கி பெற்றுள்ளார்.

கடற்படைத் துறையில் உதவிப் பாதுகாப்பு இணைப்பாளராக முதல் பெண் நியமனம்

- இந்தியக் கடற்படை, தனது முதல் பெண் அதிகாரியாக கராபி கோகோய்யை (Karbai Gogoi) நியமித்துள்ளது. இவர் மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உதவி பாதுகாப்பு இணைப்பாகச் செயல்படுவார்.

பிகார் : சத் பூஜை விழா

- சூரிய பகவானை வணங்கி பூஜை செய்யும் "சத்' பூஜை சமஸ்திபூர் மாவட்டம், பாட்கான் கிராமத்திலுள்ள காளி கோயிலில் நடைபெற்றது. பிகாரின் மிக முக்கியப் பண்டிகையாக கொண்டாடப்படும் "சத்' பூஜை, அக்டோபர் 31-ஆம் தேதி தொடங்கியது.

தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வுக்கு நீதிபதிகள் நியமனம்

- இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வுக்கு நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் கடந்த 2010-இல் தில்லியில் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 2012-இல் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வு சென்னையில் தொடங்கப்பட்டது.
- இந்த அமர்வு தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம், புதுச்சேரி மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் சுற்றுச்சூழல் தொடர்பான 1,500-க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரித்து வந்தது. கடந்த 2018 ஜனவரி முதல் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வு செயல்படாமல் இருந்தது.
- இந்நிலையில், தில்லி முதன்மை அமர்வு நீதிபதி ராமகிருஷ்ணன், உறுப்பினர் சாய்பால் தாஸ்குப்தாஆகிய இருவரைத் தேசியப்பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வுக்கு தேசியப் பசுமைத் தீர்ப்பாயப் பதிவாளர் இடம் மாற்றி உள்ளார். தென்மண்டல அமர்வு டிசம்பர் 2-ஆம் தேதி முதல் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தலைமை தகவல் ஆணையராக பதவியேற்றார் ஆர். ராஜகோபால்

- தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையராக ஆர். ராஜகோபால் பொறுப்பேற்றார்.
- இதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் தெரிவுக் குழு அமைக்கப்பட்டது.
- இந்தக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் அண்மையில் முதல்வர் பழனிசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையராக ஆர்.ராஜகோபால் தேர்வு செய்யப்பட்டார்.

1.12 கலாச்சாரம்

பாலியாத்ரா திருவிழா

- ஒடிசா மாநிலம் கட்டக்கில் ஆண்டுதோறும் பாலியாத்ரா திருவிழா நடைபெறுகிறது. வர்த்தக மற்றும் கலாச்சர விரிவாக்கத்திற்காக மாநிலத்தைச் சேர்ந்த கடற்படையினர் பாலி, சுமத்ரா, இந்தோனேசியாவின் ஜாவா, போர்னியோ மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்வதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மகாநதி ஆற்றின் கரையில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பழங்குடியினர் திருவிழா

- ஆடி மஹோத்ஸவ், தேசிய பழங்குடியினர் திருவிழா புது தில்லியில் *2019* நவம்பர் *16* முதல் *30* வரை நடைபெற்றது. விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் ஸ்ரீ அமித் ஷா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருவிழாவின் கருப்பொருள் *A Celebration of the Spirit of Tribal Culture, Craft, Cuisine and Commerce.*
- மினி-இந்தியாவை உருவாக்கும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த *1000* க்கும் மேற்பட்ட பழங்குடி கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்கள் இந்த விழாவில் பங்கேற்பார்கள்.

11வது பால்சங்கம் திருவிழா

- *11வது* பால் சங்கம் *(Bal Sangam Festival)* தேசிய நாடகப் பள்ளியால் டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திருவிழா நான்கு நாட்கள் நடைபெற்றது. நாட்டுப்புற மற்றும் பாரம்பரியக் கலை நிகழ்ச்சி குழந்தைகளால் நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் *12* மாநிலங்கள் கலந்து கொண்டன. தற்காப்புக் கலைகள், நாட்டுப்புற நடனம், தெரு நாடக நிகழ்ச்சிகள், மேஜிக் ஷோக்கள், பொம்மலாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நடத்தப்பட்டன.

தேசிய நாடகப் பள்ளி

- இது உலகின் முன்னணி நாடக பயற்சி நிறுவனங்களில் ஒன்றாகும். *1995*ஆம் ஆண்டு தேசிய நாடகப் பள்ளி சங்கீத் நடக் அகாடெமியின் அதன் தொகுதிகளில் ஒன்றாக இணைந்தது.

1.13 சமீபத்திய புதிய சொற்கள்

காலநிலை அவசரம் - 2019ன் ஆண்டின் வார்த்தையாக அங்கீகரித்த ஆகஸ்ஃபோர்டு அகராதி

- ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி, ஆண்டுதோறும் அந்த வருடத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட, அதிக முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைக்கு' அந்த ஆண்டின் வார்த்தை' என்ற அங்கீகாரத்தை வழங்கும். அதுபோல், இந்த வருடம் அதிக முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையாக, *2019*-ம் ஆண்டுக்கான வார்த்தையாக *(Word of 2019)* 'காலநிலை அவசரம்' *(Climate Emergency)* தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் 'காலநிலை அவசரம்' என்ற வார்த்தையின் பயன்பாடு அதிகமாகியுள்ளதாலும் இது முக்கியமாகப் பேசப்பட வேண்டிய விஷயம் என்பதாலும் இதைத் தேர்ந்தெடுத்துள்ளனர். காலநிலை மாற்றம் உலகெங்கும் அனைவரையும் பாதித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற, இனியும் தாமதிக்காமல் ஏதாவது செய்ய வேண்டும் என்கிற அவசரத்தை இந்த வார்த்தை உணர்த்துகிறது. இந்த வருடத்தில் மட்டும், இந்த வார்த்தையின் பயன்பாடு *10,796%* அதிகரித்துள்ளது. பொதுவாக, 'எமெர்ஜென்சி' என்ற வார்த்தையுடன் பயன்படுத்தப்படும் வார்த்தையாக இருந்த 'ஹெல்த் எமெர்ஜென்சி'யை விட மூன்று மடங்கு அதிகமாக இது பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடம் மட்டும் உலகின் பல நாடுகளில் 'காலநிலை அவசரம்' அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் ஸ்காட்லாந்திலும் அதைத் தொடர்ந்து மே மாதத்தில் கனடாவிலும் பிரான்ஸிலும் ஆஸ்திரேலியாவின் சிட்னியிலும் 'காலநிலை அவசரம்' அறிவிக்கப்பட்டுள்ளது.

2. அரசியல் அறிவியல்

2.1 சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள்

ஆர்டிஜ வரம்புக்குள் தலைமை நீதிபதி அலுவலகம்

- தகவல் அறியும் உரிமைச் (ஆர்டிஐ) சட்ட வரம்பின் கீழ் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அலுவலகமும் வரும் என்று உச்சநீதிமன்றம் ஒருமனதாகத் தீர்ப்பளித்தது.
- இதன் மூலம், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அலுவலகம், ஆர்டிஐ சட்ட வரம்புக்கு உள்பட்டதே, என்று தில்லி உயர்நீதிமன்றம் கடந்த 2010-ஆம் ஆண்டில் அளித்த தீர்ப்பை, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு உறுதி செய்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

- தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005 அல்லது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 (Right to Information Act, 22/2005) இந்திய நாடாளுமன்றத்தால் அரசிடம் அல்லது அரசு உதவிபெறும் நிறுவனங்களிடமிருந்து மக்கள் உரிமையுடன் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக்க உருவாக்கப்பட்ட சட்டம் ஆகும்.
- இச்சட்டம் டிசம்பர் மாதம் 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு மே 11, 2005, மக்களவையிலும், மே 12, 2005ஆம் ஆண்டு மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது. ஜூன் 15, 2005 குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. ஜூன் 21, 2005, அரசுப் பதிவிதழில் வெளியிடப்பட்டு அக்டோபர் 12, 2005 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.
- 2005ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் – ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
- 2005 ஆம் ஆண்டு பிரதமர் – மன்மோகன் சிங்

அழகர்மலை வனத்துறைக்கே சொந்தம் : 37 ஆண்டுகால வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு

- மதுரை அருகே அழகர்கோயில் அமைந்துள்ள அழகர்மலைப் பகுதி வனத் துறைக்குச் சொந்தம் என்றும், இது தொடர்பாகச் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்தும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சுமார் 37 ஆண்டுகளாகப் பல்வேறு நீதிமன்றங்களில் நடைபெற்று வந்த இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளது.
- இந்நிலையில், இந்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எல். நாகேஸ்வர ராவ், ஹேமந்த் குப்தா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பு அளித்துள்ளது.
- ஆய்வுக்குப் பிறகு 18 ஹெக்டேர் நிலத்தை அளிப்பதற்குத் தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. மேலும், வனத் துறையானது மலையடிவாரத்தில் இருந்து கோயில்கள் மற்றும் அனைத்து இடங்களுக்கும் சென்றடைய 50 அடி பாதைக்கு அனுமதி அளிக்கவும் சம்மதித்துள்ளது.
- மேற்கண்ட கருத்துகளைக் கொண்டு, சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் மசூதி கட்ட 5 ஏக்கர் நிலம் ஒதுக்க உத்தரவு

- *உத்தரப்பிரதேசமாநிலம், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு அனுமதி அளித்து உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.*
- *அதேசமயம், முஸ்லிம் தரப்பினர் மசூதி கட்டுவதற்கு அயோத்தியிலேயே 5 ஏக்கர் நிலத்தைஅரசு ஒதுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

பின்னணி:

- *அயோத்தியில் கடந்த 1528-ஆம் ஆண்டுபாபர் மசூதி கட்டப்பட்டது.*
- *ஆனால், அந்த இடத்தில் இருந்த ராமர் கோயிலை இடித்து விட்டு, அங்கு மசூதி கட்டப்பட்டுள்ளது என்பது ஹிந்துக்களின் வாதமாகும்.*
- *கடந்த 1885-இல், மசூதிக்கு வெளியே வழிபாட்டுத்தலம் அமைக்க அனுமதி கோரி ஹிந்து அமைப்பைச் சேர்ந்த ஒருவர் நீதிமன்றத்தை நாடினார். அதன் பிறகே சட்டச் சிக்கல்கள் எழுந்தன. அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.*
- *கடந்த 1949-ஆம் ஆண்டு டிசம்பரில் பாபர் மசூதிக்குள் அடையாளம் தெரியாத சிலர் ராமர் சிலையை வைத்தனர். அதைத் தொடர்ந்து கடந்த 1992-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி, பாபர் மசூதி கர சேவகர்களால் இடிக்கப்பட்டது.*

உச்சநீதிமன்றத்தில் அதிக நாள்கள் நடைபெற்ற விசாரணை

- *உச்சநீதிமன்ற வரலாற்றில் அதிக நாள்கள் விசாரணை நடைபெற்ற வழக்குகளில் அயோத்தி வழக்கு 2-ஆம் இடம் பிடித்துள்ளது. இந்த வழக்கில் 40 நாள்கள் விசாரணை நடைபெற்றது.*
- *இந்நிலையில் 40 நாள்கள் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றதால், உச்சநீதிமன்றத்தில் அதிகநாள்கள் நடைபெற்ற வழக்குகளின் பட்டியலில் இந்த வழக்கு இரண்டாமிடம் பிடித்துள்ளது.*
- *இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை சாராம்சம் தொடர்பாக கடந்த 1973-ஆம் ஆண்டில் நடைபெற்ற கேசவானந்த பாரதி வழக்கு 68 நாள்கள் நடைபெற்றது. இந்த வழக்கு அதிகநாள்கள் விசாரணை நடைபெற்ற வழக்குகளின் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது.*
- *இந்தப் பட்டியலில் ஆதார்வழக்கு 3-ஆம் இடம் பிடித்துள்ளது. இந்தவழக்கு தொடர்பான விசாரணை உச்சநீதிமன்றத்தில் 38 நாள்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.*

ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பு அளித்தது.:

- *தலைமை நீதிபதி ரஞ்சன்கோகோய்*
- *நீதிபதி எஸ்.ஏ.போப்டே*
- *நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்*
- *நீதிபதி எஸ்.அப்துல்நஸீர்*
- *நீதிபதி அசோக்பூஷண்*

உச்சநீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாகச் சனிக்கிழமை தீர்ப்பு

- *உச்சநீதிமன்றத்தின் 69 ஆண்டு கால வரலாற்றில் முதல்முறையாக சனிக்கிழமை நவம்பர் 9 தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.*
- *அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அயோத்தி வழக்கில் உச்சநீதிமன்றம் சனிக்கிழமை தீர்ப்புவழங்கியது. கடந்த 1950-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் நிறுவப்பட்டது. அதையடுத்து கடந்த 69 ஆண்டுக் கால உச்சநீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாக சனிக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்கதீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.*

விதி 142

- *சர்ச்சைக்குரிய பாபர் மசூதி இடிக்கப்பட்டதில் அரசியலமைப்பின் விதிஎண் 142ன் கீழ்தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனையாகக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றம் 142 ஐக் குறிப்பிட்டுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.*

ரஃபேல் போர் விமானக் கொள்முதல் விவகாரத்தில் சிபிஐ விசாரணை தேவையில்லை

- *ரஃபேல் போர் விமானக் கொள்முதல் ஒப்பந்தத்தில் முறைகேடு நடந்திருப்பதாகவும் இதுகுறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரியும் தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு மனுக்களை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.*
- *காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, பிரான்ஸின் தஸ்ஸோ நிறுவனத்திடமிருந்து 126 ரஃபேல் ரக போர் விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்தது.*
- *2014-ம் ஆண்டு மத்தியில் நரேந்திர மோடி தலைமையில் அமைந்தது. இதையடுத்து, 2016-ல் பழைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, 36 ரஃபேல் போர் விமானங்களை வாங்க அதே நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் போடப்பட்டது.*

2.2 மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

தலைமைத் தகவல் ஆணையரின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாகக் குறைப்பு

- *கடந்த 2005-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் (ஆர்டிஐ) திருத்தம் மேற்கொண்டதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டது. இந்தத் திருத்தத்தின்படி, தலைமைத் தகவல் ஆணையரின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.*
- *அரசின் அனைத்து மட்டத்திலும் வெளிப்படைத்தன்மை இருப்பதை உறுதி செய்யும் வகையில் கடந்த 2005-ஆம் ஆண்டு ஆர்டிஐ சட்டம் கொண்டுவரப்பட்டது.*
- *இந்நிலையில், இந்தச் சட்டத்தில், தலைமை தகவல் ஆணையர், தகவல் ஆணையர்கள், மாநிலத் தகவல் ஆணையர்களின் நியமனம் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள், அவர்களின் பதவிக்காலம், அவர்களுக்கான ஊதியம் மற்றும் படிகள் ஆகியவற்றை மத்திய அரசு நிர்ணயிப்பதற்கு அதிகாரமளிக்க வகை செய்யும் திருத்தம் கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்தில் கடந்த ஜூலை மாதம் 25-ஆம் தேதி 'ஆர்டிஐ சட்டத் திருத்த மசோதா, 2019' நிறைவேற்றப்பட்டது.*

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் ஒசிஐ-களுக்கு அனுமதி

- *தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (என்பிஎஸ்) வெளிநாட்டில் வசிக்கும் இந்திய மக்கள் (ஓசிஐ) பணம் செலுத்தலாம் என்று அரசு அறிவித்துள்ளது.*
- *ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (பிஎஃப்ஆர்டிஏ) இதற்கான அனுமதியை அளித்துள்ளது. ஓய்வூதியத் திட்டத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைக்கு இணையான சலுகை மற்றும் ஓய்வூதியத்தில் அனுமதிக்கப்படும் தொகை ஆகியவற்றிலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகவல் நிதி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS)

- *2004 ஜனவரி மாதத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்காகத் துவங்கப்பட்டது.*
- *பின்னர் அனைத்து மாநில அரசு ஊழியர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர் அனைத்துக் குடிமக்களுக்குமான திட்டமாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.*
- *2015ல் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டது.*

ஒரே நாடு, ஒரே சம்பளத் தினம் மத்திய அரசு திட்டம்

- முறைப்படுத்தப்பட்ட துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 'ஒரே நாடு, ஒரு சம்பளத் தினம்' திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு வருவதாக, மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சந்தோஷ் கங்வார் தெரிவித்தார்.
- பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க, ஒரே மாதிரியான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்ய, அரசு திட்டமிட்டு வருகிறது.
- பணியில் பாதுகாப்பு, உடல்நலம், ஊதியம் ஆகியவற்றில், விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்பட, கடுமையான சட்ட திட்டங்களை மத்திய அரசு விதித்துள்ளது.
- மேலும், தொழிலாளர் நலச் சட்டங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளும் பணியில், 2014 முதல், இந்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

Extra News

உதான் திட்டம்

- விமானப்பயணத்தைச்சந்தைஅடிப்படையிலான வழிமுறை மூலம் உள்நாட்டு விமானப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் விதமாக அறிமுகப்படுத்தப்பட்டது உதான் திட்டம் ஆகும். உதான் என்றால் சாதாரண மக்களும் பறக்கலாம் என்று அர்த்தமாகும். 2017ம் ஆண்டு ஏப்ரல் 27ம் தேதி உதான் திட்டத்தைப் பிரதமர் மோடி ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள சிம்லா மலைப் பிரதேசத்தில் துவக்கி வைத்தார். உதான் திட்டத்தின் மூலம் முதலில் சிம்லா-டெல்லி, கடப்பா-ஐதராபாத் மற்றும் நந்தேட்-ஐதராபாத் வழித்தடங்களில் விமானச் சேவை துவங்கப்பட்டது. 1 மணி நேர விமானப் பயணம் அல்லது 500 கி.மீ தூரம் கொண்ட விமானப் பயணங்களுக்கு அதிகபட்சம் 2,500 ரூபாயாக விமானக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி குறிப்பிட்ட பாரதியார் பாடல்

- பிரதமர் மோடி நவம்பர் 24 அன்று தனது 'மன் கி பாத்' உரையில், பாரதியார் பாடலை குறிப்பிட்டார். தாய்மொழி அறிவு இல்லாமல் உயர்வு சாத்தியமில்லை. இன்றிலிருந்தே, உங்கள் தாய்மொழி அல்லது வழக்கு மொழியையே பயன்படுத்தத் தொடங்குங்கள். குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் உத்வேகம் அளியுங்கள் என்று தெரிவித்தார்.

''முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்–இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்''

- பாரத அன்னைக்கு 30 கோடி முகங்கள் உள்ளன. ஆனால் உடல் ஒன்றுதான். அவளுக்கு 18 மொழிகள் இருக்கின்றன. ஆனால் எண்ணம் ஒன்றுதான் என்று குறிப்பிட்டு பேசி இருக்கிறார்.

மத்தியப் பிரதேசம் விளையாட்டு வீரர்களுக்கு 5 சதவீதம் இட ஒதுக்கீடு

- மத்தியப் பிரதேச மாநில அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சர் ஜிது பட்வாரி அவர்கள் சர்வதேச அளவில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு ஐந்து சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவதாக அறிவித்துள்ளார். மாநிலத்தில் ஆண்டுதோறும் விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்தவர்களுக்கு விக்ரம் விருதுகள் வழங்கப்படுகின்றன. அம்மாநிலத்தில் விளையாட்டுத் துறைக்கு வழங்கப்படும் மிகப்பெரிய விருதாகும். இவ்விருது வென்ற வீரர்களுக்கு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்குகிறது மத்திய பிரதேச அரசு.

சான்ஸ் பிரச்சாரம்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் *SAANS Social Awareness and Actions to Neutralise Pneumonia Successfully* என்ற பிரச்சாரம் தொடங்கி வைத்தது. இதன் மூலம் நிமோனியா காரணமாகக் குழந்தை இறப்பைக் குறைப்பது தொடர்பான பிரச்சாரம் ஆகும்.
- 6வது தேசிய உச்சி மாநாட்டில் மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தன் தொடங்கி வைத்தார்.

***SAANS* பிரச்சாரம் நோக்கம்**

- நிமோனியா காரணமாக குழந்தை இறைப்பைக் குறைத்தல்.
- நிமோனியாவிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க மக்களை அணிதிரட்டுதல்.
- நோயைக் கட்டுப்படுத்த, முன்னுரிமை அளிக்கப்பட்ட சிகிச்சையை வழங்க சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகும்.

புதிய நீர்க் கொள்கை - வரைவுக் குழு

- மத்திய ஜல்சக்தி அமைச்சகக் குழு புதிய தேசிய தண்ணீர்க் கொள்கை வரைவுகளை இறுதி செய்துள்ளது. இக்குழுவின் தலைவராக முன்னாள் திட்டமிடல் ஆணையத்தின் உறுப்பினர் மற்றும் நீர் நிபுணர் மிஹிர் ஷா *(Mihir Shah)* நியமிக்கப்பட்டார்.
- இக்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அறிக்கை அளிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

***2012* தேசிய நீர்க் கொள்கையைப் பற்றி:**

- தேசிய நீர்க் கொள்கை வரைவை ஏற்படுத்தும் நோக்கத்தில் தேவையான ஒருங்கிணைந்த சட்டங்கள் இயற்றுதல் மூலம் நீர்ப் பங்கீடுகளை நதிகள் அளவிலும், மாநிலங்களின் இடையேயும் தீர்க்க முற்படுகிறது, தேவையான நெறிமுறைகள் *1882*ஆம் ஆண்டு நீர்பாசன சட்டத்திலிருந்து பெறப்படுகிறது.
- தண்ணீர் மூலங்களைக் கண்டறிந்து ஒருங்கிணைத்தல், சூழலியலுக்கு ஏற்ப ஆற்று நதிநீர் ஒழுங்குபடுத்துதல், குடும்பங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச சுத்தமான குடிநீர் வழங்க வகை செய்தல்.

80வயது நிரம்பியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தபால் வாக்களிக்கும் வசதி

- சட்ட அமைச்சகம், தேர்தல் விதிகள் *1961*ல் திருத்தங்கள் மேற்கொண்டு மாற்றுத் திறனாளிகள் மற்றும் *80* வயது நிரம்பியவர்களுக்குத் தபால் வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்தி உள்ளது.
- இந்தப் பிரிவினர் தேர்தல் நாள் அன்றே வாக்களிக்கவோ அல்லது ஐந்து நாட்கள் முன்னதாக விண்ணப்பப் படிவம் *12D*ஐ பூர்த்தி செய்தோ வாக்களிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாராஸ் இந்தியா சர்வதேச வணிகக் கண்காட்சி

- மத்திய கிராமப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் டெல்லியில் சாராஸ் இந்தியா சர்வதேச வணிகக் கண்காட்சி தொடங்கி வைத்தது. கிராமப்புறங்களில் உள்ள சுயஉதவி குழுக்களை தீனதயாள் அந்தோதயா யோஜனா தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ஒரே தளமாக ஒருங்கிணைக்க இதன் நோக்கமாகும். இதுவரை ஏழு கோடிக்கும் அதிகமான பெண்கள் சுய உதவிக் குழுக்களில் சேர்ந்துள்ளனர். மேலும் இந்த எண்ணிக்கை *10* கோடியாகக் கொண்டு செல்ல அமைச்சகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களின் முக்கியப் பயனாளி தமிழ்நாடு

- பிரதம மந்திரியின் பாசல் பீம் யோஜனாவின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் முக்கிய பயனாளிகளில் ஒன்றாகத் தமிழ்நாடு மாநிலம் உருவெடுத்துள்ளது.
- கடந்த இரண்டரை ஆண்டுகளில் விவசாயிகளுக்கு மொத்தமாகப் பயன்பெற ரூ.*7000* கோடி ரூபாய் மத்திய அரசு மாநிலத்துக்கு ஒதுக்கியுள்ளது.
- இந்தக் காப்பீடுத் திட்டம் மூலம் விவசாயிகள் எப்பொழுது சம்பா அல்லது ராபீ பயிர்கள் பயிரிடும் காலத்தில் மானியம் வழங்கப்படும். தற்போது வரை விவசாயக் கணக்குகளில் ரூ.*3500* கோடி வரை சேர்க்கப்பட்டுள்ளது.

"Shikhar Se Pukar" திரைப்படம்

- மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் நீர்ப் பாதுகாப்பு குறித்த குறும்படத்தை வெளியிட்டார். அப்படத்தின் பெயர் *Shikhar Se Pukar"* என்பதாகும். ஜல்ஷக்தி அபியானை ஊக்குவிப்பதற்காக இந்தப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இந்த ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய ஐ.ஏ.எஸ் அதிகாரிஅரவீந்திர் குமாரின் பயணத்தை அடிப்படையாகக் கொண்டது. மேலும் எவரெஸ்ட் பகுதியில் நீர்ப் பாதுகாப்பு மற்றும் நீர் மாசுபாட்டைக் குறைப்பது தொடர்பான விழிப்புணர்வை இத்திரைப்படம் விவரிக்கிறது.

ஜல்சக்தி அபியான்

- இந்தப் பிரச்னையைச் சரி செய்யவும், இயற்கை வளத்தைப் பாதுகாக்கவும் மத்திய அரசு ஜல் சக்தி அபியான் என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் *257* மாவட்டங்களில் உள்ள *1,592* தாலுகா வாரியாக நீர்நிலைகள் கண்காணிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது. கண்காணிக்க முப்பரிமாண படம் உருவாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் மூன்றில் ஒரு பங்கு பேர் பயன்பெறுகின்றனர்

- தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ்ப் பெறப்பட்ட தகவலின் படி மத்திய அரசின் மகப்பேறு திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் மூன்றில் ஒரு பங்கு பேர் மட்டுமே பயன் பெறுகின்றனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.
- பிரதம மந்திரி மாத்ரு வந்தன யோஜனா திட்டத்தின் கீழ் ஏப்ரல் *2018* முதல் ஜூலை *2019* வரையிலான காலகட்டத்தில் *61%* பேர் மட்டுமே இந்த திட்டத்தின் கீழ்ப் (பதிவு செய்யப்பட்ட மொத்தம் *62.8* லட்சத்தில் *38.3* லட்சம்) பயன் அடைந்து உள்ளனர்.

பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா

- *1* ஜனவரி *2017*லிருந்து செயல்படத் தொடங்கியது. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களின் முதல் குழந்தைக்கு *3* தவணையாக நேரடிப் பயன் பரிமாற்ற முறையில் ரூ.*6000* வழங்கப்படும். இத்திட்டமானது மத்திய மற்றும் மாநில அரசு அல்லது பொதுத் துறை நிறுவனங்களில் முறைசார் முறையில் பணிபுரிவோர்களுக்குப் பொருந்தாது.

சுகாதாரத் துறையில் அரசுகளின் நிதிப் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும்

- மருத்துவச் செலவுகளுக்காக மக்கள் செலவிடும் பணம் அதிகமாக உள்ளதாகவும், சுகாதாரத் துறையில் அரசுத் தரப்பின் நிதிப் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்றும் நிதி ஆயோக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'புதிய இந்தியாவுக்கான சுகாதார அமைப்பு: சீர்திருத்தத்துக்கான வழிமுறைகள்' என்ற தலைப்பிலான நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை, தில்லியில் வெளியிடப்பட்டது.
- நாடு முழுவதும் கடந்த *2015*-ஆம் ஆண்டில் மருத்துவத்துக்காக ரூ.*49.8* லட்சம் கோடி செலவிடப்பட்டதாகவும், அதில் ரூ.*31.5* லட்சம் கோடி பொது மக்களால் செலவிடப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) *1.5* சதவீத நிதியை மட்டுமே சுகாதாரத் துறைக்கு மத்திய அரசு ஒதுக்கிவருகிறது. மருத்துவச் செலவுகளுக்காக மக்கள் செலவிடுவது, நாட்டின் ஒட்டுமொத்த மருத்துவச் செலவில் *20* முதல் *30* சதவீதத்துக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்று நிதி ஆயோக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. *2015* ஜனவரி *1* அன்று, மத்திய திட்டக்குழுவைக் கலைத்துவிட்டு அதற்கு மாற்றாக நிதி ஆயோக் அமைப்பு நிறுவப்பட்டது.
- இதன் தலைவராகப் பிரதமர் மோடியும் துணைத் தலைவராக ராஜீவ் குமாரும் உள்ளனர்.முதன்மை நிர்வாக அலுவலராக அமிதாப் காந்த் உள்ளார்.

பாரதிய போஷன் கிரிஷி கோஷ்

- மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி பாரதிய போஷன் கிரிஷி கோஷ் என்ற திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின் கீழ் சிறந்த ஊட்டச்சத்து விளைவுக்காக, இந்தியாவில் 128 வேளாண் காலநிலை மண்டலங்களில் பல்வேறு பயிற்சிகளின் களஞ்சியமாக இத்திட்டம் செயல்பட உள்ளது.
- பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனத்தின் தலைவர் பில்கேட்ஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். வேளாண்மை விஞ்ஞானியான எம்.எஸ் சுவாமிநாதனும் கலந்து கொண்டார்.

போஷன் அபியான்

- உலகத்தின் மிகப்பெரிய ஊட்டச்சத்து திட்டம் "போஷன் அபியான்". இதன் மூலம் 10 கோடி மக்கள் பயன்பெறுவர் என்று பிரதமர் மோடியால் அறிவிக்கப்பட்டு, 2018-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் இலக்குகள் வளர்ச்சிக் குறைவு (Stunting), போதிய எடை இல்லாமை, பிறக்கும்போது எடை குறைவாக இருப்பது ஆகியவற்றை ஒவ்வோர் ஆண்டும் 2 சதவீதம் அளவுக்குக் குறைப்பதாகும். ரத்த சோகையை ஒவ்வோர் ஆண்டும் 3% என்ற அளவில் 2022-க்குள் குறைக்கப்பட வேண்டும்.
- போஷன் அபியானின் சிறப்பு இலக்காக, வளர்ச்சிக் குறைபாட்டை 25 சதவீதமாக 2022-ம் ஆண்டுக்குள் முழுமையாகக் குறைக்கத் திட்டமிட்டப்பட்டிருந்தது.

2.4 அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள்

மகாராஷ்டிரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி

- மகாராஷ்டிரத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பாகத் தொடர்ந்து குழப்பமும், இழுபறியான சூழ்நிலையும் நீடித்து வந்த நிலையில் அந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

ஆளுநர் அறிக்கை:

- முன்னதாக, மத்திய அரசுக்கு ஆளுநர் கோஷியாரி அளித்த அறிக்கையில், "தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 15 நாள்களுக்கு மேல் கடந்துவிட்ட நிலையில், மாநிலத்தில் நிலையான அரசு அமைவதற்கான சூழ்நிலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. புதிய ஆட்சி அமைவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பிறகும், அதற்கான வாய்ப்புகள் தொடர்ந்து குறைந்தே வருகிறது' என்று தெரிவித்திருந்தார்.

மத்திய அமைச்சரவை பரிந்துரை:

- ஆளுநர் அளித்த பரிந்துரையைப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை பரிசீலித்தது. அந்தக் கூட்டத்தில் அரசமைப்புச் சட்டத்தின் 356 (1) பிரிவின்படி மகாராஷ்டிரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தவும், சட்டப்பேரவையைத் தற்காலிகமாக முடக்கி வைக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.
- தற்போது மகாராஷ்டிர முதல்வராக உத்தவ்தாக்கரே பதவியேற்று உள்ளார்.

3-ஆவது முறையாக

- மகாராஷ்டிரத்தில் கடந்த 59 ஆண்டுகால வரலாற்றில் இப்போது மூன்றாவது முறையாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது.

3. புவியியல்

3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

உலகம் முழுவதும் பருவநிலை அவசரநிலை

11,000 விஞ்ஞானிகள் பிரகடனம்

- அமெரிக்கான் இன்ஸ்டியூட் ஆப் பயலாஜிகல் சயின்சஸ் சார்பில் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், "பயோசயின்ஸ்" என்ற மாதாந்திர இதழை வெளியிட்டு வருகிறது.
- இதன் சமீபத்திய இதழில், 69 இந்தியர்கள் உட்பட 153 நாடுகளைச் சேர்ந்த 11,258 விஞ்ஞானிகள் இணைந்து ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளனர்.
- அதில், பருவநிலை மாற்றம் குறித்த இப்போதைய நிலவரம் மற்றும் அதைத் தணிக்க உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெரிவித்துள்ளனர்.
- குறிப்பாக, உலகளாவிய பருவநிலை அவசரநிலையை அவர்கள் பிரகடனம் செய்துள்ளனர். கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொது வெளியில் உள்ள எரிசக்திப் பயன்பாடு, வெப்பநிலை, மக்கள்தொகை வளர்ச்சி, காடுகள் அழிப்பு உள்ளிட்ட பல்வேறு தரவுகளின் அடிப்படையில் இந்தப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.

புதிய மரத்தவளை கண்டுபிடிப்பு

- மேற்கு வங்க மாநிலத்தில் புதிய மரத் தவளையை ஊர்வன பற்றி ஆராயும் அறிஞர் களான ஆறு பேர் கொண்ட குழு கண்டறிந்து உள்ளனர். இதன் பெயர் Brown Blotched Bengal tree Frog (Polypedates Bengalensis) என்பதாகும்.

தால் ஏரி, ஜம்மு & காஷ்மீர் சூழலியல் -

உணர்திறன் மண்டலமாக அறிவிப்பு

- ஜம்மு&காஷ்மீர் அரசு 10 பேர்கொண்ட குழுவை அமைத்து தால் ஏரியை சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலமாக (Eco-sensitive Zone) அறிவித்துள்ளது. இந்தியத் தூர்வாரல் நிறுவனத்தால் (Dredging Corporation of India) நடத்திய ஆய்வின் அடிப்படையில் இந்த முடிவுஅறிவிக்கப்பட்டது.

காரணம்

- மாசுபாடுகள் மற்றும் அத்துமீறல்களால் ஏரியின் அளவு 22 ச.து.கி.மீ இருந்து 10 ச.து.கீ. சுருங்கியது.
- இந்தஏரி 40% குறைந்துள்ளது. சுத்திகரிக்கப் படாத கழிவுநீர், திடக்கழிவுகள் ஏரிக்குள் பாய்வதால் நீரின் தரம் குறைந்துள்ளது.

சூழலியல் உணர்திறன் மண்டலம்

- இப்பகுதிகள் நேரடியாக சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் கட்டுப் படுத்தப்படும்.
- பொதுவாக இவ்வாறு அறிவிக்கப்படும் பகுதிகள் வனவிலங்கு சரணாலயங்கள், பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசிய பூங்காக்களைச் சுற்றி அமைந்திருக்கும்.
- சூழலியல் உணர்திறன் மண்டலம், சுற்றுச்சூழல் ரீதியான பலவீனமான பகுதி என்று அழைக்கப்படும்.

சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தின் விதிகள்

- சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ல் சூழலியல் உணர்திறன் மண்டலம் (Eco-Sensitive Zone) என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளது.

சுமத்ரான் காண்டாமிருக இனம் முற்றிலும் அழிந்தது

- சுமத்ரான் இன காண்டாமிருகம் தற்போது அழிவின் விளிம்பில் இருக்கும் உயிரினமாகும். ஒரு காலத்தில் ஆசியா கண்டம் முழுவதும் பரந்து காணப்பட்ட சுமத்ரான் காண்டாமிருகத்தின் எண்ணிக்கை தற்போது வெறும் 100ஆகக் குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.
- இந்நிலையில் மலேசியா நாட்டில் சுமத்ரான் இனத்தில் கடைசியாக எஞ்சியிருந்த, இமான் என்ற ஒரே ஒரு பெண் காண்டாமிருகம் புற்றுநோய் காரணமாக நவம்பர் 23 அன்று இறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பருவகால மாற்றங்கள் குழந்தைகளைப் பாதிப்பதாக லான்சட் அறிக்கையில் தகவல்

- நிர்ணயிக்கப்பட்ட 2OC அளவிற்கு உலக வெப்பத்தைக் குறைக்காமல் பருவகால மற்றும் சுற்றுச்சூழலில் மாற்றம் ஏற்படும் போது குழந்தைகளுக்கு அதிகம் பாதிப்பை ஏற்படுத்தி, வரும் தலைமுறையினருக்கு பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பிருப்பதாக லான்சட் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. 41 வகைக் காரணிகளுடன் வருடாந்திர அடிப்படையில் 120 வல்லுநர்களுடன் 35 நிறுவனங்கள் இந்த அறிக்கையைத் தயார் செய்வதில் பணியாற்றுகின்றனர். அதிக மக்கள்தொகை, சுகாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகம் காணப்படும் நாடுகளில் இந்தப் பாதிப்பு அதிகமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்தியாவின் முதல் யானைகள் நினைவகம் திறப்பு

- வனவிலங்கு வாழ்வு எஸ்.ஓ.சி., இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பு தொண்டு, நிறுவனம் மூலம் இந்தியாவின் முதல் யானைகள் நினைவகம் உத்தரப்பிரதேச மாநிலம் மதுராவில் திறந்து வைக்கப்பட்டது.
- சட்டவிரோதமாக யானைகள் கடத்தல், கொடுமையான முறையில் உயிரை இழந்த யானைகளைக் கௌரவிப்பதற்காக ஒரு தனித்துவமாக இந்த நினைவகம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நினைவுச் சின்னம் யானைகள் வனப்பகுதிக்கு சொந்தமானது என்பதையும் அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் தொடர்ந்து நினைவூட்டுவதாக இருக்கும்.

வனவிலங்கு எஸ்.ஓ எஸ்

- தொடக்கம்: 1995
- நிறுவனர் : கார்திக் நாராயணன் மற்றும் கீதா சேஷாமணி
- நோக்கம்: இந்திய வனப்பகுதியைப் பாதுகாத்தல்

டார்ஜிலிங் கிரீன் டீ மற்றும் வெள்ளை டீ புவிசார் குறியீடு

- டார்ஜிலிங் சேர்ந்த கிரீன் தேநீர் மற்றும் வெள்ளை தேநீர்-க்கு புவிசார் குறியீடு (பதவி மற்றும் உற்பத்தி சட்டம் 1999) வழங்கப்பட்டுள்ளது.

டார்ஜிலிங் தேநீர்:

- டார்ஜிலிங் 85 லட்சம் கி.கி. தேயிலை உற்பத்தி செய்கிறது. இதில் கிரீன் தேநீர் 10லட்சம் கி.கி. மற்றும் வெள்ளை தேநீர் 1 லட்சம் கி.கி. ஆகும்.

மஹா புயல்

- குமரி கடல் பகுதியில் நிலவிய குறைந்த காற்றழுத்தத்தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. அதற்கு "மஹா" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ரசகுல்லா தினம் (“Rosagolla Dibas”)

- மேற்குவங்க மாநில அரசு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு "பங்களார் ரசகுல்லா" அல்லது "வங்காள ரஸகுல்லா"வின் புவிசார் குறியீடு வழங்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் மேற்கு வங்கம் "ரசகுல்லா தினம்" அல்லது "ரஸகுல்லா தினம் நவம்பர் 14 அன்று கொண்டாடியது.

ரசகுல்லா தினம் கொண்டாட்டம்

- விதவிதமான இனிப்பு வகைகளை உருவாக்குபவரான மேற்கு வங்காளத்தை சேர்ந்த நோபின் சந்திர தாஸ் அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. மேற்கு வங்கத்தின் இனிப்புத் தொழிலின் வரலாற்றில் முதன்முறையாக மாநிலத்தில் உள்ள அனைத்து இனிப்புக் கடைகளிலும் இந்த நாள் ரோசோகொல்லாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

ஸ்வச்-நிர்மல் தத் அபியான்

- மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ஸ்வச்-நிர்மல் தத் அபியான் என்ற விழிப்புணர்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதனைத் தொடர்ந்து நாட்டில் உள்ள 50 கடற்கரை பகுதியில் தூய்மை பணி மற்றும் விழிப்புணர்வுப் பணி மேற்கொள்ள இத்திட்டம் தொடங்கப்பட்டது. இப்பிரச்சாரம் நவம்பர் 11ல் தொடங்கி 17 வரை நடைபெற உள்ளது. இதன் நோக்கம் கடற்கரைப் பகுதியின் தூய்மை மற்றும் மக்களிடையே கடற்கரைச் சூழல் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது ஆகும். கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் படி கடற்கரை பகுதியில் உள்ள கழிவுகள் சேகரிக்கப்படுகிறது.

சம்பார் ஏரியில் பறவையில் உயிரிழப்புக்குப் பாக்டீரியா காரணம்

- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள நாட்டின் மிகப்பெரிய உப்பு நீர் ஏரியான சம்பார் ஏரியில் சில நாள்களுக்கு முன்பு சுமார் 5,000 வெளிநாட்டுப் பறவைகள் உயிரிழந்ததற்கு நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் பாக்டீரியா தொற்றே காரணம் என்று முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. "கிளாஸ்டிரிடியம் பாட்டுலினம் (அவியன் போட்டுலிசம்) என்ற பாக்டீரியா வெளியிடும் நச்சு ஏரி நீரில் கலந்துள்ளது. அந்த நீரைப் பருகிய பறவைகளின் நரம்பு மண்டலம் பாதிப்படைந்துள்ளது. அதனால் பறவைகள் உயிரிழந்தன". முன்னதாக, ஜோத்பூர் மாவட்டத்தின் கின்சன் பகுதியில் கடந்த 7-ஆம் தேதி 35-க்கும் மேற்பட்ட நாரைகள் இறந்து கிடந்தன என்பது குறிப்பிடத்தக்கது

ஒரே நேரத்தில் இரு புயல்கள்

- மத்திய மேற்கு அரபிக்கடலில் 'கியார்' புயல் நிலைகொண்டுள்ளது. இது தெற்கு, தென் மேற்கு நோக்கி நகர்கிறது. இதுபோல், மத்திய கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதை யொட்டிய லட்சத்தீவு பகுதியில் 'மஹா' புயல் நிலைகொண்டுள்ளது. அரபிக்கடலில் ஒரே நேரத்தில் இரண்டு புயல்கள் உருவாகுவது 1961-ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல்முறையாகும்.

இந்தியாவின் முதல் சமிக்ஞை மீன்

(India's First Signal Fish)



- கேரளாவின் ஆழமான கடற்கரைப் பகுதியில் முதல் சமிக்ஞை மீன்களைக் கேரளா பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த கடல் அறிவியல் நிறுவனம் கண்டுபிடித்துள்ளனர்.
- இதன் பெயர் "Pterdopsaron indicum" என்பதாகும். இது கடல் பகுதியில் 70 மீட்டர் ஆழம் பகுதி வரை செல்லும் தன்மை கொண்டது. சாதாரண மீன் வகைகளில் இருந்து வேறுபட்டுள்ளது மற்றும் தனித்துவமான வண்ணத்தைக் கொண்டுள்ளது.

இந்தியக் கடலோரப் பகுதியில் கடல்நீர் மட்டம் 8.5செ.மீ. உயர்வு; மத்திய அரசு தகவல்

- இந்தியக் கடலோரப் பகுதிகளில் ஆண்டுக்கு சராசரியாக 1.70 மி.மீ. அளவுக்குக் கடல்நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த 50 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் 8.5 செ.மீ. அளவுக்கு உயர்ந்துள்ளது.
- முக்கியமாக, வடக்கு இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் கடல் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடல்நீர் மட்டம் உயர்வு காரணமாகச் சுனாமி புயல் போன்ற சமயங்களில் தாழ்வான பகுதிகள் அதிகம் பாதிப்புக்குள்ளாக வாய்ப்புள்ளது.
- பருவநிலை மாற்றம் காரணமாக கடல்நீர் மட்டம் உயர்ந்து, பல்வேறு நகரங்கள் மூழ்கும் ஆபத்து தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய சுற்றுச் சூழல் துறை இணையமைச்சர் பாபுல் சுப்ரியோ இவ்வாறு பதில் அளித்தார்.

இந்தியாவின் முதல் புவிவேதியியல் அடிப்படையிலான வரைபடம் வெளியீடு

- ஹைதராபாத்தில் உள்ள சி.எஸ்.ஐ.ஆர் தேசியப் புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் சுற்றுச்சூழல் மேலாண்மை இந்தியாவின் முதல் "புவி வேதியியல் அடிப்படையிலான வரைபடத்தை வெளியிட்டுள்ளது. இந்த வரைபடம் மேற்கொள்ளும் பணி 2007ஆம் ஆண்டு தொடங்கியது. வரைபடங்களை உருவாக்க உலகின் 160கி.மீ. 5000 கலங்களாக (Cells) தலா 160 கி.மீ. பிரிக்கப்பட்டது. இந்தியாவில் 122 கலங்கள் (Cells) உள்ளன. 2007ல் ஒரு களம் (Cell) கன்னியாகுமரில் தொடங்கப்பட்டது. கடைசியாக ஆந்திரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது.

சர்வதேசப் புவியியல் அறிவியல் ஒன்றியம் (IUGC)

- தொடக்கம் – 1961 | உறுப்பினர் – 121

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் கவுன்சில்

- தொடக்கம் – 1942 | இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பாக உருவெடுத்துள்ள தன்னாட்சி அமைப்பு ஆகும்.

3.2 இயற்கைப் பேரழிவு - பாதுகாப்பு நடவடிக்கைகள்

மும்பை, கொல்கத்தா கடலில் மூழ்கும்
அமெரிக்க ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை

- அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியைச் சேர்ந்த, மத்தியக் காலநிலை ஆய்வு மையம் என்ற அமைப்பு, காலநிலை மாற்றம் குறித்து, ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்த ஆய்வு குறித்து, 'இயற்கைத் தொடர்பியல்' என்ற சுற்றுச்சூழல் இதழில், கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

12 வருடங்களுக்குப் பிறகு முதல்
பேரிடர் சூறாவளி (Super Cyclone)

- கடந்த 2007 ஆம் ஆண்டு ஓமன் கடற்கரையில் கோனு புயலுக்கு அடுத்து 12 வருடங்களுக்கு சமீபத்தில் அரபிக் கடலில் ஏற்பட்ட கியார் புயல் முதல் சூப்பர் சூறாவளி என்று அறியப்படுகிறது. இந்தச் சூறாவளி மேற்கு வடமேற்குப் பகுதியான ஓமன் கடற்கரை நோக்கி நகர்ந்தது. கோலா மற்றும் மகே பகுதியில் அதிக கனமழை பெய்தது.

3.3 சுகாதார அறிவியல் பற்றி சமீபத்திய கண்டுபிடிப்புகள்

ஆண்களிடையே இரத்தசோகை பொது சுகாதாரப் பிரச்சனையாக உள்ளது

- இந்தியாவில் ஆண்களிடையே இரத்த சோகை பொது சுகாதாரப் பிரச்சனையாக உள்ளதாக லான்செட் குளோபல் ஹெல்த் வெளியிட்டுள்ள *"Anaemea Among Men in India: A Nationally Respresentative Cross – Sectional Study"* அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முக்கியமாக ஆண்களிடையே இரத்த சோகை இருப்பதைக் கண்டவறிவதை நோக்கமாகக் கொண்ட இந்த அறிக்கை, 23.2 சதவீத ஆண்களுக்கு இரத்த சோகை இருப்பதைக் கண்டறிந்துள்ளது. இரத்த சோகையின் மாநில அளவிலான பாதிப்பு 9.2% (சராசரி 7.7% -10.9%)

இரத்த சோகையால் அதிக அளவில் பாதிக்கப்படும் மாநிலம்	இரத்த சோகையால் குறைந்த அளவில் பாதிக்கப்படும் மாநிலம்
பீகார் (32.86 %)	மணிப்பூர் (9.19%)
மேற்கு வங்காளம் (30.46%)	மிசோரம் (9.78%)
ஜார்கண்ட் (30.3%)	நாகலாந்து (10.23%)
மேகாலயா (29.13%)	கோவா (10.68%)
ஒடிசா (28.45%)	கேரளா (11.77%)

லான்சேட்

- உலகின் பழமையான சிறந்த பொது மருத்துவப் பத்திரிகை
- தொடக்கம் : 1823
- நிறுவனர் : தாமஸ் வாக்லே

4. பொருளாதாரம்

4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

பவர் கிரிட் கார்ப் நிறுவனத்திற்கு மகாரத்னா அந்தஸ்து

- பொதுத்துறை நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலிய கார்பரேஷன் மற்றும் பவர் கிரிட் கார்பரேஷனுக்கு இந்திய அரசு மகாரத்னா என்ற அந்தஸ்து வழங்கி உள்ளது.
- மத்திய கனரகத் தொழில் மற்றும் பொது நிறுவன அமைச்சகத்தின் கீழ், பொது நிறுவனங்கள் துறை இரண்டு தனித்தனி உத்தரவுகளை வெளியிட்டன.

மஹாரத்னா நிறுவனங்கள்

- தொடர்ந்து மூன்று வருடத்துக்கும் மேல் 25,000 கோடி ரூபாய்க்கும் மேல் பணப் பரிவர்த்தனை செய்திருந்தால், அத்தகைய நிறுவனங்கள் மஹாரத்னா என்றும் அழைக்கப்படும். அதோடு மூன்று வருடத்திற்கும் மேலாக வரி நீங்கலாக லாபம் 5000 கோடி ரூபாய்க்கும் மேல் இருக்க வேண்டும் என்றும், இந்த நிறுவனங்கள் பங்குச் சந்தைப் பட்டியலில் இருக்க வேண்டும் எனவும், ஆக மொத்தம் இந்தப் பிரிவில் இதுவரை 7 நிறுவனங்கள் மட்டுமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை உட்பட பாதுகாப்பானப் பணப் பரிமாற்றச் செயல்பாடு : முன்னணி நாடுகளின் பட்டியலில் இந்தியா

- டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை உட்பட பணப் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் பாதுகாப்பை வழங்கும் முன்னணி நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பிடித்துள்ளது.
- அந்த வகையில் முன்னேறிய நாடுகள் தவிர்த்து, பாதுகாப்பு அம்சங்களில் முன்னிலை வகிக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா, பெரு, கொலம்பியா, மெக்ஸிகோ, உருகுவே ஆகிய நாடுகள் இடம்பெற்று இருப்பதாக லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட எக்னாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யுனிட் நிறுவனம் தெரிவித்துள்ளது.
- உலகளாவிய அளவில் நிதிப் புழக்கம் தொடர்பான செயல்பாடுகள் பற்றிய ஆய்வு அறிக்கை ஒன்றை அந்நிறுவனம் உருவாக்கி இருக்கிறது.

சவூதியில் பொருளாதார மாநாடு

- சவூதி அரேபியா தலைநகர் ரியாதில் "எதிர்கால முதலீட்டுக்கான தொடக்கம்" என்ற தலைப்பிலான பொருளாதார மாநாடு தொடங்கி மூன்று நாள்கள் நடைபெற்றது.
- கச்சா, எண்ணெய், எரிவாயு, எரிசக்தி, விமானப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் இந்தியா-சவூதி அரேபியா இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன.

ஒருங்கிணைந்த தொழில் பூங்காக்கள் அமைக்க அரசு திட்டம்

- அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்க மத்திய அரசு 10 தொழில் பூங்காக்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. மிகப் பெரிய அளவில் உருவாக்கப்பட உள்ள இந்தத் தொழில் பூங்காக்கள் அனைத்தும் ஒருங்கிணைந்ததாகப் பல்வேறு கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக இருக்கும். தொழில் பூங்காக்களைச் சர்வதேசத் தரத்துக்கு உருவாக்குவதோடு அதில் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

புராஜெட் ஜீரோ திட்டம்

- மிகவும் பிரபலமான இணையதள வர்த்தகம் அமேசான் "புராஜெட் ஜீரோ" திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் கள்ள பொருட்கள் விற்பனையை முற்றிலுமாகத் தடுக்கவும் மற்றும் நல்ல பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும் இத்திட்டம் அறிமுகப்படுத்தி உள்ளது.

குஜராத் மாநிலத்துக்கு "ஸ்டேட் ஆஃப் ஸ்டேட்ஸ்" விருது

- பொருளாதார ரீதியாக சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக குஜராத் மாநிலத்துக்கு இந்த ஆண்டுக்கான 'ஸ்டேட் ஆஃப் ஸ்டேட்ஸ்' விருது வழங்கப்பட்டு உள்ளது.

5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு

- இந்தியா 2025-ம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டுமென்றால், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அதன் நாமினல் ஜிடிபி வளர்ச்சி 12.4 சதவீதமாக இருக்க வேண்டும் என்றும் நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 2018-19ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட அளவை விட 0.4 சதவீதம் அதிகம் ஆகும்.

அரசுத்துறைகளுக்குப் பொருட்களைக் கொள்முதல் செய்ய மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ள ஜெம் நிறுவனம்

- இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆண்டபோது, அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பேப்பர், பென்சில், நாற்காலி முதல் ஆயுதங்கள் வரை அனைத்தையும் கொள்முதல் செய்வதற்காக இந்தியா ஸ்டோர்ஸ் என்ற நிறுவனத்தை 1922-ம் ஆண்டு தொடங்கியது.
- நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, பொது பொருட்கள் மற்றும் அகற்றல் இயக்குநரகம் (Directorate General of Supplies and Disposals) என்ற பெயரில் இந்நிறுவனம் மாற்றி அமைக்கப்பட்டது. பிற்காலத்தில் பொருட்களை கொள்முதல் செய்வதில் நிறைய முறைகேடுகளும், தனியார் நிறுவனங்களின் ஆதிக்கமும் இருந்ததால் இந்நிறுவனம் மூடப்பட்டது. இதையடுத்து, கடந்த 2016-ம் ஆண்டு இ-மார்க்கெட் நிறுவனமான 'ஜெம்' (GeM – Government e-Marketplace, https://gem.gov.in/) நிறுவனம் மத்திய அரசால் தொடங்கப்பட்டது.
- இ-காமர்ஸ் நிறுவனங்கள் செயல்படுவது போல் இந்நிறுவனம் செயல்படுகிறது. அரசுத் துறைகளுக்குத் தேவைப்படும் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ள 'ஜெம்' என்ற இ-மார்க்கெட் நிறுவனத்தில் வணிகம் செய்வதற்கான நடைமுறைகள் எளிதாக உள்ளன.
- இது வணிகர்கள் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. 'ஜெம்' நிறுவனத்தில் பொருட்களை வாங்கி, விற்க வணிகர்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகத் தமிழகம் உட்பட 28 மாநிலங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- 'ஜெம்' நிறுவனம் குறித்து அறிந்துகொள்ள, தமிழ் உள்ளிட்ட 12 மொழிகளில் இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

5.6 சதவீதமாகக் குறைப்பு : மூடிஸ்

- நடப்பு ஆண்டுக்கான இந்தியாவின் பொருளாதர வளர்ச்சியை 5.6 சதவீதமாகக் குறைப்பதாக மூடிஸ் இன்வென்டார்ஸ் நிறுவனம் தெரிவித்தது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முன்பு 5.8 சதவீதமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அது தற்போது 5.6 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.
- பொருளாதார நடவடிக்கைகள் வரும் 2020 மற்றும் 2021-ஆம் ஆண்டுகளில் வேகமெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து அவ்வாண்டுகளில் பொருளாதார வளர்ச்சி முறையே 6.6 சதவீதம் மற்றும் 6.7 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பணவீக்கம் 0.16 சதவீதம்

- நாட்டின் பணவீக்கம் கடந்த அக்டோபர் மாதத்தில் 0.16 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது, மூன்றரை ஆண்டுகளில் இல்லாத குறைந்தபட்ச அளவாகும்.
- உணவுப் பொருள்களின் விலை அதிகரித்திருந்த போதிலும் தயாரிப்புத் துறைப் பொருள்களின் விலை குறைந்து காணப்பட்டதையடுத்துச் சென்ற அக்டோபரில் நாட்டின் பொதுப் பணவீக்கம் 0.16 சதவீதமாகக் குறைந்திருந்தது.
- மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் (டபிள்யூபிஐ) அடிப்படையில் கணக்கிடப் படும் இப்பணவீக்கம் இதற்கு முன்பு கடந்த 2016 ஜூன் மாதத்தில்தான் 0.1 சதவீதம் என்ற அளவில் பின்னடைவைக் கண்டது. அதற்குப் பிறகு தற்போதுதான் பொதுப் பணவீக்கம் இந்த அளவுக்குக் குறைந்தது.

இந்தியாவின் கடன் தர மதிப்பீட்டைக் குறைத்தது மூடிஸ்

- மூடிஸ் நிறுவனம், இந்தியாவின் கடன் தர மதிப்பீட்டை "எதிர்மறை " என்ற நிலைக்குக் குறைத்துள்ளது.
- பொருளாதார மந்த நிலைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் மத்திய அரசின் செயல்பாடுகள் பகுதியளவில் ஆக்கப்பூர்வமானதாக அமையவில்லை. இது, மீண்டும் பொருளதார வளர்ச்சிக் குறைவு என்ற அபாயத்துக்கு வழிவகுக்கும் என்பதால், இந்தியாவின் கடன் தர மதிப்பீடு "எதிர்மறை" என்ற நிலைக்குக் குறைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் கடன் சுமையானது ஏற்கெனவே அதிகபட்ச அளவில் உள்ளது. இந்த வேளையில், பொருளாதார மந்த நிலைக்குக் காரணமான பிரச்னைகளைக் கண்டறிந்து தீர்ப்பதில் மத்திய அரசின் நடவடிக்கை ஓரளவுக்குப் பயனளிப்பதாக உள்ளது. அதற்கான கொள்கைகளும் செயலற்ற தன்மையில்தான் உள்ளன. இந்தச் சூழலில் தான் இந்தியாவின் கடன் தகுதி மதிப்பீடு இந்த நிலைக்குக் குறைக்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், அந்நியச் செலவாணிக்கான தரக் குறியீட்டில் "பிஏஏ2" என்ற இரண்டாவது குறைந்த முதலீட்டுத் தர மதிப்பெண் நிலையே தொடரும்.

Review us on Google
4.8 ★★★★★
Vetrii IAS Academy

கர்நாடகா கிராமின் வங்கி

"Mobile ATM" தொடங்கியது

- *கர்நாடகா கிராமின் வங்கி "Mobile ATM" காலபுராகி என்ற இடத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த வண்டியில் வங்கிகளின் திட்டங்கள் பற்றி காணொலி வழியாக மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.*
- *இந்த Mobile ATM விவசாயிகளின் வீடுவரைக்கும் சென்று வங்கிகளின் திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் இயக்க முறைமைகள் பற்றித் தெரிவிக்கின்றது. வண்டியில் ஒரு வங்கி அதிகாரி இருப்பார், அவர் டிஜிட்டல் இயக்க முறைமைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவார்.*

தங்கம் மூன்றாவது முதலீடாகும்

- *உலகளாவிய சில்லறை முதலீட்டாளர்களில் 46% தங்கம் முதலீடாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். உலகளவில் தங்கம் தொடர்ந்து மூன்றாவது முதலீடாக உள்ளதாக உலகத் தங்கக் கவுன்சில் தெரிவித்துள்ளது.*

உலகத் தங்கக் கவுன்சில்

- *உலகத் தங்கக் கவுன்சில் அறிக்கையில் உலக அளவிலான முதலீடுகளில் சேமிப்புக் கணக்கு மற்றும் ஆயுள் காப்பீட்டுக்கு அடுத்த நிலையில் தங்கத்தின் மீதான முதலீடுகளே அதிகம் உள்ளதாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
  - *தலைமையிடம் : லண்டன், இங்கிலாந்து*
  - *தலைவர் : டேவின் ஹர்குவால்.*

ஐ.நா. மேம்பாட்டுக்கு

1.35 கோடி டாலர் நிதி

உதவி : இந்தியா உறுதி

- *ஐ.நா.வின் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்கு 1.35 கோடி டாலர் (சுமார் ரூ.35 கோடி) நிதி உதவியை வழங்குவதாக இந்தியா உறுதியளித்துள்ளது.*
- *வரும் 2020-ஆம் ஆண்டில் ஐ.நா. மேற்கொள்ளவுள்ள பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்கு இந்தியாவின் பங்களிப்பாக 1.35 கோடி டாலரை வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளது.*
- *பாலஸ்தீன் அகதிகளுக்கான ஐ.நாவின் நிவாரணப் பணிகளுக்கு 50 லட்சம் டாலரையும், ஐ.நா. மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 45 லட்சம் டாலரையும் இந்தியா தனது பங்களிப்பாக வழங்கவுள்ளது.*

எஸ்ஸார் ஸ்டீல் வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு ஆர்சிலர் மிட்டல் நிறுவனத்துக்கு இருந்த தடை விலகியது

- *எஸ்ஸார் நிறுவனம் தொடர்பான திவால் நடைமுறை வழக்கில், கடன்தொகை பங்கீட்டில் கடனாளர் குழுவுக்கு முழு உரிமை உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது. தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (என்சிஎல்ஏடி) அதில் தலையிடக் கூடாது என்றும் கூறியுள்ளது.*
- *இந்நிலையில் ஆர்சிலர் மிட்டல், எஸ்ஸார் நிறுவனத்தை வாங்குவதில் இருந்த சிக்கல் முடிவுக்கு வந்துள்ளது. இரும்பு தயாரிப்பு நிறுவனமான எஸ்ஸார் ஸ்டீல் சில ஆண்டுகளுக்கு முன் மிகப் பெரிய அளவில் நிதி நெருக்கடிக்கு உள்ளானது. அதைத் தொடந்து கடந்த 2017-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அந்நிறுவனம் திவால் நடைமுறைச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.*

உலகின் 6வது பெரிய எண்ணெய் நிறுவனமானது ரிலையன்ஸ்

- *ரிலையன்ஸ் நிறுவனத்தின் சந்தை மதிப்பு சமீப காலமாக அதிக அளவில் உயர்ந்து வருகிறது. சந்தை மதிப்பு ரூ. 10 லட்சம் கோடி அளவைத் தொட்டது. இத்தகைய சந்தை மதிப்பை எட்டும் முதல் இந்திய நிறுவனம் ஆகும். ரிலையன்ஸ் நிறுவனத்தின் சந்தை மதிப்பு புதிய உச்சத்தை த்தொட்டுள்ள நிலையில், முகேஷ் அம்பானி உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 12-வது இடத்தை பிடித்துள்ளார்.*

5. அறிவியல்

5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

நாஸா: நிலவில் தண்ணீர் உள்ளதா என ஆய்வு செய்ய ரோபோவை அனுப்புகிறது

- நாஸா, 2022 ஆம் ஆண்டு VIPER என்ற அளவிலான ரோபோவை நிலவுக்கு ஏவ முடிவு செய்துள்ளது, இந்த ரோபோ மூலம் நிலவில் தண்ணீர் உள்ளதா என ஆய்வு செய்ய உள்ளது. மேலும் 2024 ஆம் ஆண்டு மனிதர்கள் நிலவுக்கு அனுப்ப நாஸா முடிவு செய்துள்ளது. இதன் மூலம் நிலவில் தண்ணீர் இருந்தால் ராக்கெட்டுக்கு எரிபொருள்களாகவும் மற்றும் விண்வெளி வீரர்களுக்கு குடிக்க உதவியாக இருக்கும் என்று நாஸா தெரிவித்துள்ளது.

VIPER

- இந்த ரோபோவின் பெயர் VIPER (Volatiles Investigating Polar Exploration Rover) என்பதாகும்.
- இந்த VIPER ரோபோ தூசிகள் நிறைந்த நிலவுப் பகுதியில் ஆராய்ச்சி மேற்கொள்ள உள்ளது.

நிலவில் ஆர்கான் 40 வாயு இருப்பதை உறுதிப்படுத்தி யது சந்திராயன்

- நிலவில் ஆர்கான் 40 வாயு மூலக்கூறுகள் இருப்பதைச் சந்திராயன் 2 விண்கலம் உறுதிப்படுத்தி இருப்பதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. இந்த ஆர்கான் 40 வாயு மூலக்கூறுகள் ரோடியோ அலைக்கற்றைகளை உருவாக்கப் பயன்படக் கூடியது என்றும், பூமியில் அரிதாகக் காணப்படும் ஒன்று என்றும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அரசு மருத்துவமனையில் முதல் அறுவை சிகிச்சை ரோபோ வசதி



- டெல்லியில் உள்ள அரசு சப்தர்ஜங் மருத்துவமனையில் ரோபோ அறுவை சிகிச்சை வசதி அறிமுகம் செய்துள்ளது. இது சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் இந்தியாவின் மிகப்பெரிய பாரம்பரிய மருத்துவ மையங்களில் ஒன்றாகும். சிறுநீர்ப்பைபுற்றுநோய், சிறுநீரகசெயலிழப்பு, போன்ற யூரோ-புற்றுநோய்களில் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. இந்தப் புதிய ரோபோ அறுவை சிகிச்சை வசதி நாட்டின் முதல் முறையாக அரசு மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது.

ரோபோ "CYBIRA"

- விசாகப்பட்டின காவல்துறையினர் "CYBIRA" என்ற ரோபோவை மஹாராணிபெடா காவல் நிலையத்தில் தொடங்கி வைத்தனர்.
- இந்த ரோபோ மூலம் குற்றங்களை பதிவு செய்ய முடியும். டீராபோக்ப்ளர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தயாரித்த "CYBIRA" Cyber security Interactive Robetic Agent) தயாரித்தது.
- இதன் மூலம் குற்றங்கள் பதிவு செய்வது மூலம் காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.



சீனா 5ஜி சேவையை அறிமுகப்படுத்தியது

- சீனாவின் 3 முக்கிய மாகாணங்களில் அதி நவீன 5ஜி தொலைத் தொடர்புச் சேவையை அந்த நாடு அறிமுகப்படுத்தியது.
- அமெரிக்காவுடன் வர்த்தகப் போர் நீடித்து வரும் நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே தொழில்நுட்ப ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக இந்தச் சேவையைச் சீன அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐஐடி தில்லியில் விண்வெளித் தொழில் நுட்ப மையம் அமைக்க முடிவு

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (இஸ்ரோ) உதவியுடன் தில்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (ஐஐடி) விண்வெளித் தொழில்நுட்ப மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- 'விண்வெளித் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் பங்களிப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இஸ்ரோ அமைப்புடன் இணைந்து கல்வி நிறுவனத்தில் விண்வெளித் தொழில்நுட்ப மையம் அமைக்கவுள்ளது.
- விண்வெளித் தொழில்நுட்பத் துறையில் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக, இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி) பெங்களூரு, ஐஐடி மும்பை, ஐஐடி கான்பூர், ஐஐடி கரக்பூர், ஐஐடி சென்னை, ஐஐடி குவாஹாட்டி மற்றும் ஐஐடி ரூர்கி ஆகிய கல்வி நிறுவனங்களில் ஏற்கெனவே விண்வெளித் தொழில்நுட்ப மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வி நிறுவனங்களின் வரிசையில் இப்போது ஐஐடி தில்லியும் இணைந்துள்ளது.

போயிங் 787 விமானத்தில் குருநானக்கின் ஏக் ஓங்கார் - முத்திரை

- ஏர் இந்தியா விமானத்திற்குச் சொந்தமான போயிங் 787 டிரீம்லைனர் விமானத்தில் குருநானக் அவர்களின் 550வது பிறந்த நாளை முன்னிட்டு "EK Onkar" (ஏக் ஓங்கார்) என்ற முத்திரை பொறிக்கப்பட்டு உள்ளது. அக்டோபர் 31ம் தேதி அம்ரிதசரஸில் இருந்து இலண்டனுக்கு இந்த விமானம் இயக்கப்பட்டது

நின்றபடியே செல்லக்கூடிய சக்கர நாற்காலி

- சென்னை ஐ.ஐ.டி, பீனிக்ஸ் மருத்துவ சாதனங்கள் தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து, முதன்முறையாக முற்றிலும் இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட "நின்றவடியே செல்லக்கூடிய சக்கர நாற்காலியை உருவாக்கியுள்ளது.
- "அரைஸ்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நவீன சக்கர நாற்காலி, சென்னை ஐஐடியின் இயந்திரப் பொறியியல் துறை பேராசிரியர் சுஜாதா ஸ்ரீனிவாசன் தலைமையிலான குழுவினரால் வடிவமைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியர்களின் மூளை சிறியது
ஐ.ஐ.டி. ஆய்வில் தகவல்

- மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களின் மூளையின் அளவை விட இந்தியர்களின் மூளை அளவு சிறியது என, ஐதராபாத்தில் உள்ள ஐ.ஐ.ஐ.டி. எனப்படும் சர்வதேசத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். தெலுங்கானா தலைநகர் ஐதராபாத்தில் உள்ள ஐ.ஐ.ஐ.டி.யின் ஆராய்ச்சியாளர்கள், 'நியூராலஜி இந்தியா' என்ற இதழில், இந்திய மூளை வரைபடங்கள் கொண்ட ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டு உள்ளனர்.
- அந்த ஆய்வுக் கட்டுரையில், 'மேற்கத்திய நாட்டு மக்களின் மூளையுடன் ஒப்பிடுகையில் இந்தியர்களின் மூளையின் உயரம் அகலம் மற்றும் எடை சிறியதாக இருக்கிறது. மேலும் அல்சைமர்ஸ் போன்ற மறதி தொடர்பான நோய்களை, ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவதற்கு, மூளை சிறியதாக இருப்பது உதவியாக இருக்கும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் முதல் மின்சாரப் பந்தய விமானம்

- ஏர்பஸ் நிறுவனம் உலகின்ன முதல் மின்சாரத்தால் இயங்கும் பந்தய விமானத்தை அறிமுகம் செய்துள்ளது. துபாயில் நடைபெற்ற விமானக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த கான்டர் விமான நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த விமானத்தில் உள்ள எலக்டிரிக் மோட்டார் மணிக்கு 482 கி.மீ. வேகத்தில் செல்லும், 5 கி.மீ. (சுமார் 3 மைல்) சுற்று வட்டத்தில் தரையில் இருந்து 10 மிட்டர் உயரத்தில் பறக்கும் திறன் கொண்டது.

சூடான் நாட்டின் முதல் செயற்கைக்கோள் SRSS-1

- சூடான் நாட்டின் முதல் செயற்கைக்கோள் 'SRSS-1' இராணுவம், பொருளாதாரம், தொழில்நுட்பப் பயன்பாட்டிற்காக சீனா ஏவியுள்ளது.
- SRSS-1 என்பது Sudan's remote sensing satellite ஆகும். இதனை ஷென்சென் ஏரோஸ்பே ஓரியண்டல் செங்கடல் சேட்டிலைட் நிறுவனம் உருவாக்கி உள்ளது.
- இந்தச் செயற்கைக் கோளை சீனா March-4B என்ற ராக்கெட் மூலம் செலுத்தி உள்ளது. மற்ற செயற்கைகோள்களான Gaofen 7, Xiao xiang-108, whampoa 1 வடக்கு சீனாவில் உள்ள தைவான் செயற்கைக்கோள் ஏவுதல் மையத்தில் இருந்து செலுத்தப்பட்டது.
- சிவில் மற்றும் ராணுவ ரிமோட் சென்சிங்கிற்காக சூடான் செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டது. ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள் விண்வெளித் தொழில் நுட்பத்தில் ஆராய்ச்சி முன்னேற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

"Indian Air Force – A cut above game"

- இந்திய விமானப்படை தனது மொபைல் விளையாட்டான மல்டிபிளேயர் பதிப்பை "இந்தியன் ஏர் ஃபோர்ஸ்-எ கட் அபோவ்" என்ற பெயரில் அறிமுகப்படுத்தி உள்ளது.
- ஒற்றைப் பிளேயர் பதிப்பு முதன்முறையாக தலைமை விமானப்படைத் தலைவர் பி.எஸ். தானோ 2019 மே 31 அன்று வெளியிட்டார்.
- இந்த விளையாட்டு ஒரு போர் சிமுலேட்ட ராகும், இது இந்திய விமானப்படைப் போர் விமானங்களான தேஜாஸ் மிராஜ்-2000, சு-30 போன்றவற்றிலிருந்து தேர்வு செய்ய வீரர்களை அனுமதிக்கிறது.

"அல்டிமா துலே" "அரோகோத்" என்று பெயர் மாற்றம்

- தேசிய விமானவியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (நாசா) அல்டிமாதுலேக் "அரோகோத்" என்று பெயர் மாற்றப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

காற்றில் இருந்து கார்பன்-டை-ஆக்ஸைடு நீக்கும் தொழில்நுட்பம் கண்டுபிடிப்பு

- அமெரிக்காவில் உள்ள மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவன ஆராய்ச்சியாளர்கள் காற்றில் இருந்து கார்பன்-டை-ஆக்சைடை, காற்றின் நீரோட்டத்திலிருந்து எந்தச் செறிவு மட்டத்திலும் கைப்பற்றப் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது வளிமண்டல பசுமை இல்ல வாயு அளவைக் குறைக்க வழிவகுக்கும்.
- ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வு பற்றிச் சுற்றுச்சூழல் அறிவியல் இதழில் வெளியிடப்பட்டது.

புதிய தொழில்நுட்பம்

- நடைமுறையில் உள்ள பெரும்பாலான முறைகளில் கார்பன்-டை-ஆக்ஸைட்டைப் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தி நிலைகளிலிருந்து வெளியேற்ற அதிக அளவு செறிவு தேவைப்படுகிறது. ஆனால் தற்போது கண்டறியப்பட்ட புதிய முறையில் மிகக்குறைந்த செறிவுகளில் இருக்கும் போது கூட வெளியேற்ற முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வாயேஜர் நாசாவின் சூரிய குடும்ப எக்ஸ்ப்ளோரர் விண்மீன் கூட்டத்திற்குள் நுழைந்தது

- சூரியனின் வாயேஜர் 2 நாசாவின் சூரிய குடும்ப எக்ஸ்ப்சோலார் விண்மீன் கூட்டத்திற்குள் நுழைந்தது.
- இப்போது பூமியிலிருந்து 11 பில்லியன் மைய தொலைவில் உள்ளது. விண்கலத்திலிருந்து வரும் தகவல்கள் ஒலியின் வேகத்தில் பூமியை அடைய 16.5 மணி நேரம் ஆகும். இந்த விண்கலம் டிசம்பர் 10, 2018 அன்று அதன் இரட்டை லோயோசர் 1இல் இணைந்தது. வெளிப்புறச் சூரிய மண்டலத்தை நெருக்கமாக ஆய்வு செய்வதற்காக வாயேஜர் செலுத்தப்பட்டது.

வாயேஜர் 2

- இந்த வாயேஜர் 2 நான்கு கிரகங்களையும் ஒன்றாக ஆய்வு செய்த முதல் விண்கலம் (வியாழன், நெப்டியூன், சனி, யுரேனஸ்) மற்றும் வியாழனின் 14வது சந்திரனைக் கண்டுபிடித்த முதல் விண்கலம் இது. நெப்டியூனை ஆய்வு செய்ய மனிதர்களால் உருவாக்கப்பட்ட முதல் விண்கலம் ஆகும்.
- வாயேஜர் 2 நெப்டியூனின் 5 நிலவுகளை கண்டுபிடித்துள்ளது. இது நெப்டியூனில் ஒரு பெரிய இருண்ட இடத்தைக் (“Great Dark Spot”) கண்டுபிடித்துள்ளது. நெப்டியூனைச் சுற்றி நான்கு வளையங்களைக் கண்டறிந்துள்ளது.

செவ்வாய் கிரக லேண்டர் : சீனா வெற்றிகர சோதனை

- செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கி ஆய்வுகளை மேற்கொள்வதற்காகச் சீனா உருவாக்கியுள்ள லேண்டர், வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.
- பூமியைப் போல் மூன்றில் ஒரு பங்கு ஈர்ப்பு விசையைக் கொண்டுள்ள செவ்வாய் கிரகத்தின் சூழலை செயற்கையாக ஏற்படுத்தி, இந்த ஆய்வை சீனா மேற்கொண்டது. அந்தக் கிரகத்தில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக, லேண்டர் மற்றும் ரோவர் ஆய்வுக் கலங்களை சீனா அடுத்த ஆண்டு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

அல்சீமர் குணப்படுத்தும் கார்போ ஹைட்ரேட் அடிப்படையிலான மருந்து GV-971 கண்டுபிடிப்பு

- சீனாவின் தேசிய மருத்துவ உற்பத்தி நிர்வாக அல்சீமர் நோயைக் குண்படுத்த *GV-971 (Sodium Aligo-Mannurarate)* என்ற மருந்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன்மூலம் அல்சிமர் நோயைக் குணப்படுத்த கார்போஹைட்ரேட் அடிப்படையிலான மருந்திற்கு ஒப்புதல் வழங்கிய உலகின் முதல் நாடு சீனாவாகும்.
- சீனாவின் அறிவியல் அகாடெமிக்குக் கீழ் உள்ள ஷாங்காவின் மடேரியா மெடிகா நிறுவனத்துடன் சீனாவின் கடல் பல்கலைக்கழகம் மற்றும் பசுமைச் சமவெளி மருந்து ரிமிட் இணைந்து 22 வருடத்தில்) இந்த மருந்து உருவாக்கியுள்ளது.

அல்ஷிமர் நோய்

- இது ஒரு மூளை சம்பந்தமான கோளாறு. இது மூளையின் நினைவை மெதுவாக அழிக்கும் தன்மை கொண்டது. சிந்திக்கும் எண்ணமும் இதனால் குறைந்து விடும்.

கள சோதனைகளுக்கான இந்தியாவின் முதல் நானோ தொழில்நுட்ப அடிப்படையிலான தயாரிப்புகள்

- இந்திய உழவர் உரக் கூட்டுறவு லிமிடெட் நானோ-தொழில்நுட்ப அடிப்படையிலான தயாரிப்புகளைக் கள ஆய்வுச் சோதனைகளுக்கு அறிமுகம் செய்துள்ளது. இது குஜராத்தில் உள்ள கலால் *(Kalal)* என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த நானோ தொழில்நுட்ப அடிப்படையிலான பொருள்கள்என்பதுநானோநைட்ரஜன்,நானோ ஜிங், நானோ காப்பர் ஆகியவை அடங்கும். இந்த நானோ பொருட்களை ஐ.எஃப்.எஃப்.சி.ஓ. சேர்ந்த நானோ உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்துள்ளது. மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், பசுமை இல்ல வாயுக்களைக்குறைப்பதும் இதன் நோக்கமாகும்.

இந்திய விவசாய உரக் கூட்டுறவு லிமிடெட்

- தொடக்கம் : 3 நவம்பர் 1967
- தலைமையகம் : டெல்லி

மின்சாரத்தில் இயங்கும் சிறிய ரக விமானத்தை உருவாக்கி வரும் நாசா

- மின்சாரத்தில் இயங்கும் சிறிய ரக விமானம் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா, மின்சாரத்தில் இயங்கும் சிறிய ரக விமானத்தை உருவாக்கி வருகிறது.
- எக்ஸ்.57 மேக்ஸ்வெல் எனப்படும் அந்த விமானம், இரட்டை என்ஜின் விமானத் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டு வருகிறது. 2015ம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டு வரும் இந்த விமானத்தை முதல்முறையாக நாசா விஞ்ஞானிகள் வெளியுலகுக்குஅறிமுகப்படுத்தினர்.
- மின்சார விமானங்கள், ஹோவர் கிராப்ட் களை உருவாக்கும் முயற்சியில் ஏராளமான தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. நாசாவின் எக்ஸ் 57 விமானம், அரசு சான்றிதழுக்கான வடிவமைப்பு, தொழில்நுட்பத் தரங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் வகையில் உருவாக்கப்பட்டு வருகிறது.

புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உயிரினத்திற்கு டெண்டுல்கர் பெயர் சூட்டப்பட்டது

- புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு சிலந்திகளுக்குக் கிரிக்கெட் விளையாட்டு வீரனான சச்சின் டெண்டுல்கர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இச்சிலந்தியின் பெயர் *"Marengo SachinTendulkar"* என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய சிலந்தி இனங்கள் சிலந்தி வகைப் பிரித்தல் ஆராய்ச்சியாளர் துருரவ் பிரஜபதி என்பவரால் கண்டறியப்பட்டது.

பாலின் புத்துணர்ச்சித் தன்மையை கண்டறிய காகித அடிப்படையிலான சென்சார்கள்

- எளிய மற்றும் உடனடி முறையால் பாலின் புத்துணர்ச்சியை மதிப்பிடுவதற்கு ஐஐடி கௌஹாத்தி காகித அடிப்படையிலான சென்சாசரை உருவாக்கி உள்ளது.
- பால் சேகரிக்கும் இடத்திலும், வீட்டுச் சமையலறைகளிலும் பாலின் தரத்தை சரிபார்க்க இந்த முறையைப் பயன்படுத்தலாம்.
- இந்த முறை பாலில் உள்ள *ACP (Alkaline Phosphate)* அல்கலைன் பாஸ்பேட் அளவைக் கண்டறிந்து அதன் புத்துணர்ச்சித் தரத்தைத் தீர்மானிக்கிறது.

ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் புரதத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்

- இந்தியாவின் *CSIR* மற்றும் செல் நுண்ணுயிரி உயிரியல் நிறுவனமும் இணைந்து இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகப்படுத்தி இரத்த சர்க்கரையைக் கட்டுப்படுத்தும் புதிய வகை புரதத்தை கண்டறிந்துள்ளனர்.
- செக்ராடகோஜின் *(Secretagogin)* என்ற அந்தப் புரதம் நீரிழிவு நோய்க்கு எதிராகப் பணியாற்றுவதை ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

பூமிக்குத் திரும்புகிறது ஹாயாபுஸா-2

- சூரியனைச் சுற்றி வரும் தொலைதூர நுண்கோளில் வெற்றிகரமாக ஆய்வு செய்த ஜப்பானின் ஹாயாபுஸா-2 விண்கலம், பூமிக்குத் திரும்புவதற்கான தனது பயணத்தைத் தொடங்கியுள்ளது.
- கடந்த *2014*-ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்கலம், ரியூகு நுண்கோளில் இரு முறை தரையிறங்கி அங்குள்ள மணல் மாதிரிகளை சேகரித்துள்ளது.
- ஏராளமான ஆய்வுத் தகவல்களையும் ஹாயாபுஸா-2 விண்கலம் பெற்றுள்ளது.
- பூமியை நோக்கிப் புறப்பட்டுள்ள அந்த விண்கலம், அடுத்த ஆண்டு இறுதியில் பூமியை வந்தடையும் என்று ஜப்பானிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்தது.
- இந்த ஆய்வு மூலம், சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றிய பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது.

சந்திராயன் - 3 விண்கலத்தை அடுத்த ஆண்டு விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டம்

- சந்திரயான்-3 விண்கலத்தை அடுத்த ஆண்டு நவம்பர் 2020-ஆம் ஆண்டில் விண்ணில் ஏவ இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) திட்டமிட்டுள்ளது. பெங்களூருவில் இஸ்ரோ அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திரயான்-3 திட்ட உயர்நிலைக் குழுக் கூட்டத்தில், இதற்கான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேலும், இந்த முறை லேண்டர் மற்றும் ரோவர் ஆகிய இரு அமைப்புகளை மட்டும் விண்கலம் மூலம் அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. நிலவை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட சந்திரயான்-1 திட்ட வெற்றியைத் தொடர்ந்து, சந்திரயான்-2 விண்கலத்தை கடந்த ஜூலை 22-ஆம் தேதி இஸ்ரோ விண்ணுக்கு அனுப்பியது. விண்கலத்திலிருந்து பிரித்துவிடப்பட்ட ஆர்பிட்டர் அமைப்பு, நிலவின் பரப்பிலிருந்து 100 கி.மீ. தொலைவில் இருந்தபடி நிலவைச் சுற்றிவந்து தொடர்ந்து விவரங்களை பூமிக்கு அனுப்பி வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.
- மேலும், சந்திரயான்-2 ஆர்பிட்டர் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதால், சந்திரயான்-3 விண்கலம் மூலம் லேண்டர் மற்றும் ரோவர் ஆகிய இரு அமைப்புகளை மட்டும் அனுப்ப முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன், இம்முறை அனுப்பப்படும் லேண்டரின் கால்கள் வலுவான தாகவும், எந்தச் சூழலிலும் தரையிறங்கும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது என்றார் அவர்.

5.2 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

பயன்படாத நிலையில் இருக்கும்
ஆழ்துளைக் கிணறுகளைத் தெரியப்படுத்த
விசில் ரிப்போர்ட்டர் செயலி

- பயன்படாத நிலையில் இருக்கும் ஆழ்துளைக் கிணறுகள் குறித்துத் தெரிவிக்க "விசில் ரிப்போர்ட்டர்" என்ற செயலியை தொழில்நுட்பப்பிரிவுஅறிமுகப்படுத்தியுள்ளது.
- பயன்படாமல் கிடக்கும் ஆழ்துளைக் கிணறுகளை மழைநீர்ச் சேகரிப்பு நிலைகளாக மாற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தரவிட்டு உள்ளது.

சுங்கவரி மேம்படுத்த ICEDASHஐ
அறிமுகப்படுத்தப்பட்டது

- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் சுங்க வசதியை மேம்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும், மத்திய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் *ICEDASH* மற்றும் *ATITH* புதிய தகவல் தொழில்நுட்ப முயற்சியைத் தொடங்கி வைத்தார்.
- குறிப்பாக இது இடைதரகர்களைக் குறைக்கும் மற்றும் சுங்க செயல்பாட்டின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும்.

***ICEDASH* என்பது**

- பல்வேறு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் இறக்குமதிச் சரக்குகளின் தினசரி சுங்க அனுமதி நேரங்களைக் காணப் பொது மக்களுக்கு உதவுகிறது.
- இந்த டாஷ்போர்டை என்.ஐ.சி *(தேசிய தகவல் மையம்)* உடன் இணைந்து சிபிஐசி மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியம்) உருவாக்கியுள்ளது.

e-Ganna செயலி

- உத்தரப்பிரதேச மாநில அரசு கரும்பு விவசாயிகளுக்காக *e-Ganna* என்ற செயலியை அறிமுகம் செய்துள்ளது. கரும்பு விநியோகச் சீட்டு தற்போது சர்க்கரை ஆலைகள் மூலம் விவசாயிகளுக்கு ஆன்லைனில் வழங்கப்படும்.

"ஷாலா தர்பன் போர்டல்" மத்திய அரசு தொடக்கம்

- மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சஞ்சய் நேரா ஷாலா தர்பன் போர்டலை நவோதயா வித்யாலயா சமிதிக்காக தொடங்கி உள்ளார்.

ஷாலா தர்பன் போர்டல்

- இது ஒரு ஒருங்கிணைந்த இணையதளமாகும். இதன் மூலம் கல்வி நிர்வாகம், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை ஒருங்கிணைக்கிறது.
- இந்த இணையதளம் மூலம் பயனுள்ள உரையாடல்களைப் பரிமாற்றிக் கொள்ள முடியும். நாட்டில் உள்ள அனைத்து ஜவஹர் நவோதாயா வித்யாலாவை *(636 பள்ளிகள் மற்றும் 2.67 மில்லியன் மாணவர்கள்)* ஒருங்கிணைக்கிறது.

நவோதாயா வித்யாலயா

- இணைக் கல்வி தங்கிப் பயிலும் பள்ளிகள் *(Co-education Residential Schools)* நவோதயா வித்யாலயா சமிதியில் நிறுவப்பட்டது.
- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. நவீன தரமான கல்வியை வழங்குகிறது.

ஸ்வயம் 2.0 (SWAYAM 2.0)

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் போக்ரியால் ஸ்வயம் *2.0 (SWAYAM 2.0 Study webs of Active learning for young Aspiring minds)* டெல்லியில் தொடங்கி வைத்தார்.

ஸ்வயம்

- வளர்ந்த நாடுகளில் வழங்கப்பட்டு வந்த திறந்த நிகழ்நிலைப் பயிற்சி வகுப்புகளைப் போன்று இந்தியாவிலும் வழங்கத் திட்டமிட்ட இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், அதற்கென ஸ்வயம் *(SWAYAM)* எனும் பெயரிலான இணைய வழியிலான கல்வித் திட்டத்தைக் தொடங்கியது.

வேளாண் செயலி மூலம் செடிகளில் பூச்சித் தாக்குதலைக் கண்டறியும் புதிய வசதி

- வேளாண் செயலி மூலமாக, செடிகளில் பூச்சி தாக்குதலைக் கண்டறிந்து தீர்வு பெறும் புதிய வசதியை முதல்வர் எடப்பாடி பழனிசாமி தொடக்கி வைத்தார்.
- சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 'கனெக்ட் 2019' மாநாட்டை அவர் தொடக்கி வைத்தார். அப்போது, புதிய திட்டங்களைத் தொடக்கி வைத்தார்.
- செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் இந்த முக அடையாள வருகைப் பதிவேடு திட்டத்தை கனெக்ட் மாநாட்டின் வாயிலாக, முதல்வர் தொடக்கி வைத்தார்.
- இதனைத் தொடர்ந்து, செயற்கை நுண்ணறிவு மூலம் விவசாய விளை பயிர்களின் பூச்சி பாதிப்புகளைக் கண்டறிந்து தீர்வுகளைப் பெறும் வசதியை அவர் தொடக்கிவைத்தார்.
- தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கியுள்ள உழவன் செயலி வாயிலாக பதிவேற்றப்பட்ட புகைப்படங்களைப் பகுப்பாய்வு செய்து பயிர்களுக்கான நோய்கள் மற்றும் பூச்சி தாக்குதலைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்கும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திரா தனுஷ் 2.0 போர்டல்

- மத்திய சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் இந்திரா தனுஷ் 2.0 போர்டலை டெல்லியில் வெளியிட்டார். இப்போர்டல் டிசம்பர் 2019 தொடங்கி மார்ச் 2020 வரை செயல்பட உள்ளது.
- இந்திரா தனுஷ் 2.0 உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் மறுபெயராகும். 100% நோய் தடுப்பு மருந்துகளை அடைவதே இதன் நோக்கமாகும்.
- இந்த போர்டல் போலியோ திட்டத்தின் வெள்ளி விழாவின் போது வெளியிடப்பட உள்ளது. ஒவ்வொரு குழந்தைகளின் நோய்த்தடுப்புத் திறனை வலுப்படுத்துதல் மற்றும் Td10 மற்றும் Td16 தடுப்பூசி அமலாக்கத்தை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை அமைச்சர் வெளியிட்டார்.

"Sishu Suraksha" செயலி

- அசாம் மாநில மனித உரிமைகள் ஆணையம் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க Sishu Suraksha என்ற செயலியை அறிமுகம் செய்துள்ளது.
- இச்செயலி மூலம் மாநிலத்தில் குழந்தைகளுக்கு நேரிடும் தீமைகளை நேரடியாக கமிஷனில் பதிவு செய்யலாம்.

காசநோயைக் கண்டறிய புதிய கருவி கண்டுபிடிப்பு

- காசநோயைக் கண்டறிய பேட்டரி வகையிலான கருவிக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. "CLR-See TB" என பெயரிடப்பட்ட இந்தக் கருவி அதிகக் காசநோய் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டிற்கு மிகவும் தேவையாகும். உலகச் சுகாதார நிறுவனம் 2035க்குள் காசநோயை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் 2025க்குள் காசநோயை ஒழிக்க இந்திய அரசும் உறுதி பூண்டுள்ளது.

குழந்தைகளிடம் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்க சி.பி.ஐ. தனிப்பிரிவு அமைப்பு

- குழந்தைகளிடம் பாலியல் துன்புறுத்தலை தடுக்க மத்தியப் புலனாய்வுத்துறை புதுடெல்லியில் Online Child Sexual House and Exploitation என்ற தனிப்பிரிவு தொடங்கி உள்ளது. இந்தப் பிரிவு சிறப்புக் குற்ற மண்டலத்தின் கீழ் செயல்படும் மற்றும் சிறுவர்கள் தொடர்பான புகார்களை எடுத்துக் கொள்ளும்.

ATITHI செயலி

- இச்செயலி மூலம் சர்வதேச விமான நிலையங்களுக்கு வரும் பயணிகள் தங்கள் சுங்கப் பொருள்கள் மற்றும் நாணயங்களைச் சோதனை செய்ய மின்னணு முறையில் தாக்கல் செய்ய இச்செயலி உதவுகிறது.

ரோபோ "CYBIRA"

- விசாகப்பட்டின காவல்துறையினர் "CYBIRA" என்ற ரோபோவை மஹாராணிபெடா காவல் நிலையத்தில் தொடங்கி வைத்தனர்.
- இந்த ரோபோ மூலம் குற்றங்களைப் பதிவு செய்ய முடியும். டீராபோ க்ப்ளர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தயாரித்த "CYBIRA" Cyber security Interactive Robetic Agent) தயாரித்தது.
- இதன் மூலம் குற்றங்கள் பதிவு செய்வது மூலம் காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

வெளிப்புறக் காற்றைக் சுத்திகரிக்கும் இயந்திரம்

- சென்னை ஐ.ஐ.டியின் சிவில் பொறியாளர்கள் துறை மற்றும் ஐ.ஐ.டி.எம் ஆராய்ச்சி பூங்கா மாணவர்கள் "சைக்ளோஃபைன்" (Cuclofine) என்ற வெளிப்புறக் காற்றைச் சுத்திகரிக்கும் இயந்திரத்தை உருவாக்கி உள்ளனர். இது காற்றின் பி.எம். 10 இன் 60 ஐ நீக்குவது.
- இந்த இயந்திரம் மணிக்குக் காற்றில் இருந்து 750 கியூபிக் மீட்டர் மாசை உறிஞ்சுகிறது. கூடுதல் உறிஞ்சலுடன் இது பி.எம்.2.5 இன் 80 சதவீதம் (2.5 மைக்ரான் மற்றும் அதற்கும் குறைவான துகள்கள்) மற்றும் 100 சதவீதம் பி.எம்.10ஐ சுவாசிக்கும் காற்றிலிருந்து நீக்குகிறது.

ராணுவக் கண்காணிப்புக்கு உதவும் கார்டோசாட்-3 செயற்கைக்கோள்

- எல்லைப் பாதுகாப்புக் கண்காணிப்புக்கு உதவக்கூடிய கார்டோசாட்-3 செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) 27-ஆம் தேதி விண்ணில் ஏவியது.
- ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து, பி.எஸ்.எல்.வி. சி-47 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- 1,625 கிலோ எடை கொண்ட இந்த மூன்றாம் தலைமுறை அதிநவீன கார்டோசாட்-3 செயற்கைக்கோள், ராணுவ எல்லைப் பாதுகாப்புக்கு உதவுவதற்காக அனுப்பப்பட்டது.
- புவியிலிருந்து 509 கி.மீ. தொலைவிலான சுற்றுவட்டப் பாதையில் 97.5 கோணத்தில் இந்தச் செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட உள்ளது.

விவசாயிகள் பயன் பெற இ-நாம் இணையதளம்

- மாநில அரசுகள் விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு e-NAM செயலிக்கு மாற வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சிதாராமன் வலியுறுத்தியுள்ளார். தற்போது சில மாநிலங்களில் வேளாண் உற்பத்தி விற்பனை குழு (ஏபிஎம்சி) மூலமான வேளாண் கொள்முதல் நடைபெறுகிறது. இதை மாநில அரசுகள் கைவிட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.
- இ-நாம் இணையதளம் மூலமான விற்பனைக்கு மாறுவதன் மூலம் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களுக்கு மிகச் சிறந்த விலையைப் பெற முடியும் என்று அவர் குறிப்பிட்டார். ஏபிஎம்சி-களுக்குப் பதிலாக அவற்றை இ-நாம் தளத்துடன் இணைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். தற்போது 8 மாநிலங்களில் 21 இ-நாம் மண்டிகள் உள்ளன. இவை உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட், ஆந்திரா, தெலங்கானா, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

இ-நாம் இணையதளம்

- தொடக்கம் : 14 ஏப்ரல் 2016 | அமைச்சகம் : விவசாயத்துறை அமைச்சகம்

6 தினசரி தேசிய நிகழ்வு

காந்திநகர் மண்ணெண்ணெய் பயன்பாடு இல்லாத முதல் மாவட்டம்

- குஜராத்தின் காந்திநகர் மாவட்டத்தில் 1000 பெண்களுக்கு எல்பிஜி இணைப்புகள் ஒதுக்கீடு செய்தார் மத்திய அமைச்சர் அமித்ஷா.
- இதன் மூலம் காந்திநகர் மாவட்டம் மண்ணெண்ணெய் இல்லாத முதல் மாவட்டமாக மாறுகிறது.

மண்ணெண்ணெய் இல்லாத மாநிலங்கள்

- மண்ணெண்ணெய் இல்லாத முதல் நகரமாக சண்டிகர் ஆனது. நாடு முழுவதும் மண்ணெண்ணெய் பயன்பாட்டைக் குறைக்க அரசாங்கம் 2016 முதல் திட்டங்களை உருவாக்கி வருகிறது. 2020க்குள் மண்ணெண்ணெய் மானியங்கள் முற்றிலுமாக அகற்றப்படும்.

குழாய்வழி குடிநீர் திட்டத்திற்காக ஒடிசா அரசும் யுனிசெஃப் அமைப்பும் ஒப்பந்தம்

- சுத்தமான குடிநீரை அனைவருக்கும் குடியிருப்புகளுக்கும் குழாய் மூலமாக 24 மணி நேரமும் தங்கு தடையின்றி வழங்கும் நோக்கில் ஒடிசா மாநில அரசும் யுனிசெஃப் அமைப்பும் கடித வழிப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு உள்ளது.
- யுனிசெஃப் ஒடிசா அரசுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் முதல் கட்டமாக 1.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வார்டுகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

சேனானி - நஸ்ரி சுரங்கப்பாதைக்கு பெயர்மாற்றம்

- காஷ்மீர் மற்றும் ஜம்முவையும் ஸ்ரீநகரையும் இணைக்கும் வகையில் சேனானி மற்றும் நஷ்ரி இடையே மலைப்பகுதியில் 9.28 கி.மீ. தூரத்துக்கு சுரங்கம் அமைத்துச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவிலேயே மிக நீளமான இந்த சுரங்க சாலை எனக் கூறப்படுகின்றது. ரூ.3,720 கோடி செலவில் சேனானி-நஷ்ரியை இணைக்கும் சுரங்கச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதை மூலம் ஜம்மு-ஸ்ரீநகர் இடையேயான பயண தூரம் 31 கி.மீ. ஆக குறைந்துள்ளதாகவும் மேலும் பயண நேரமும் 2 மணி நேரம் அளவுக்கும் குறையும் என்றும் கூறப்படுகின்றது.

முகர்ஜி

- ஜம்மு காஷ்மீர் மாநில அரசிற்குத் தனிக்கொடி, தனிச் சின்னம், தனி பிரதம மந்திரி இருப்பதை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஒரு நாட்டில் இரண்டு அரசியல் அமைப்புச்சட்டமும், தேசிய சின்னமும் இருக்க இயலாது என வாதிட்டார்.
- மேலும் ஜம்மு காஷ்மீர் மாநிலப் பிரதமரின் அனுமதியின்றி, இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குள் செல்ல இயலாது என்ற விதியை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார்.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தனிக்கொடி, தனிப் பிரதம மந்திரி போன்ற சிறப்புத் தகுதிகள் வழங்கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்கக் கோரி, முகர்ஜி தலைமையிலான பாரதிய ஜனசங்கம், இந்து மகாசபை மற்றும் ராம ராஜ் சபையுடன் இணைந்து குரல் கொடுத்து, சத்தியாகிரகப் போராட்டங்களில் ஈடுபட்டது.

எளிமையாகத் தொழில் துவங்க ஆந்திர அரசின் 'SMART PORT' போர்டல்

- இந்தியாவில் முதல் மாநிலமாக ஆந்திர அரசு தொழில் துவங்க எளிமையான முறையில் உரிமம் வழங்க இணையதள போர்டலை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் துறைமுக வழி ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்ய மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

முக்கிய நிகழ்வுகள்:

- இந்த இணையதள சேவைகள் பொதுச் சேவைகள் உறுதிச் சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் தொழில் துவங்க எளிமையான மாநிலங்கள் பட்டியலில் ஆந்திர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.

ஷில்லாங்கில் செர்ரி மலர் திருவிழா

- மேகலாயாவின் ஷில்லாங் பகுதியில் இந்திய சர்வதேச செர்ரி ப்ளாசம் விழாவின் *(India International Cherry Blossom Festival) 4*வது பதிப்பு கொண்டாடப்பட்டது. செர்ரி மலரும் விழாவை நவம்பர் *13* முதல் *16* வரை, நாக்கு நாட்கள் போலோ மைதானத்தில் கொண்டாடின.
- இந்த ஆண்டு திருவிழா செர்ரி ப்ளாசம் மரங்களின் பூக்கும் காலநிலை மாற்றம் காரணமாக சீராக இல்லை என்று தெரிவித்துள்ளது.
- இந்த விழாவை மேகாலயா முதலமைச்சர் கான்ராட் கே சங்மா தொடங்கி வைத்தார். இயற்கை வளங்கள் மற்றும் நிலையான சுற்றுலா எவ்வாறு பயனுள்ள முறையில் பயன்படுத்தலாம் என்பதற்கும், ஏற்கனவே உள்ளவற்றின் மதிப்பை மேம்படுத்துவதற்கும் இந்த விழா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தொலைத்தொடர்புத் துறையின் நிதிச்சுமையை ஆராய கேபினட் செயலாளர் தலைமையில் குழு

- தொலைத் தொடர்புத் துறையின் நிதிச் சுமையை ஆராய்ந்து நெறிப்படுத்த மத்திய கேபினட் செயலாளர் ராஜிவ் கௌபே தலைமையில் செயலாளர்கள் குழுவை அரசு உருவாக்கி உள்ளது. சமீப காலங்களில் பார்தி-ஏர்டெல் மற்றும் வோடபோன் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து நிதிச் சிக்கல்களுக்கு ஆளாகி வருகின்றன. இது குறித்து விரிவான ஆய்வை மேற்கொள்ள நிதிச் செயலாளர், சட்டம் மற்றும் தொலைத்தொடர்பு துறைச் செயலாளர்கள் உள்ளடங்கிய குழுவை அரசு அமைத்துள்ளது.
- ஸ்பெக்ட்ரம் ஏலநடைமுறைகளின் வெளிப்படை தன்மையை ஏற்படுத்தவும், வழிமுறைகளை ஆராயவும் இந்தக் குழு அறிக்கை தயார் செய்யும்.

ஐ.ஐ.எம்.சி உலகளவில் 17வது இடம்

- இந்திய மேலாண்மை நிறுவனம் கல்கத்தா *(ஐ.ஐ.எம்.சி)* பைனான்சியல் டைம்ஸ் முதுநிலை *2019* பட்டியலில் உலகளவில் இந்த கல்லூரி *17*வது இடத்தில் உள்ளது. முதல் *50* தரநிலைகளில் ஐ.ஐ.எம். அகமதாபாத் *21*வது மற்றும் ஐ.ஐ.எம் பெங்களூரு *44*வது இடத்தில் உள்ளது.
- தரவரிசையில் சுவிட்சர்லாந்தில் உள்ள இந்த சென்.கலென் *(St. Gallen)* பல்கலைக்கழகம் முதல் தரநிலையில் உள்ளது. முதல்நிலைக்கு அடுத்து பிரான்ஸ் நாட்டின் பாரிஸில் உள்ள *Hautes Etudes Commercials* மற்றும் லண்டனில் உள்ள லண்டன் பிஸ்னஸ் பள்ளி இரண்டு மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளது. முதல் *100* தரநிலை பட்டியலில் ஐ.ஐ.எம். உதய்பூர் *76*வது மற்றும் ஐ.ஐ.எம் இந்தூர் *81*வது தரநிலையில் உள்ளது.

இலவச நடமாடும் ஆய்வகங்கள்

- புற்றுநோயைக் கண்டறிவதற்காக *9* நடமாடும் ஆய்வகங்களைத் தில்லியில் உள்ள கபூர்தலா ஹவுஸ் பகுதியில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தொடங்கி வைத்தார். பஞ்சாப் மாநிலம் சுல்தான்பூர் லோதியில் நிறுத்தி வைக்கப்படவுள்ள இந்த ஆய்வகங்களில், பாகிஸ்தானின் கர்தார்பூருக்கு செல்லும் சீக்கிய யாத்ரீகர்களுக்கு இலவசமாகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கன்ய சுமங்கல்ய யோஜனா

- உத்திரப்பிரதேச மாநில முதலமைச்சர் ஆதித்யநாத் முதல் மந்திரி கன்ய சுமங்கல்யா யோஜனா திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- **திட்டத்தின் முக்கிய அம்சம்**
- இந்தத் திட்டம் ஒரு பெண் குழந்தை பிறக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.15,000 வழங்கும்.
- இத்திட்டத்தின் மூலம் பெற்றோர் பெண் குழந்தையை அவரது உடல்நலம் மற்றும் கல்வி தொடர்பாக சரியான கவனிப்புடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.
- பெண் குழந்தை தடுப்பூசி, 1, 5, 9 ஆம் வகுப்பு சேர்க்கை மற்றும் பட்டப்படிப்பு போன்றவை முடிக்கும் போது இந்த நிதி வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்துடன் கன்யா சுமங்கலா இணையதளமும் தொடங்கப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ் சுமார் 1.25 லட்சம் பதிவுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டன. ஏப்ரல் 1, 2019க்குப் பிறகு பிறந்த பெண் குழந்தை இந்த நிதிக்குத் தகுதியானவர்கள்.

7-ம் ஆண்டு தவாங் திருவிழா

அருணாச்சல பிரதேசம்

- அக்டோபர் 28-2019ம் 3 நாட்கள் தவாங் திருவிழா அருணாச்சலப் பிரதேசத்தில் துவங்கப்பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேச சுற்றுலா அமைச்சகத்தால் நடத்தப்படும் இந்த விழா 7வது ஆண்டாக நடத்தப்படுகிறது.
- முதலமைச்சர் பெமா காண்டு முன்னிலையில் அமெரிக்க தூதர் ஜஸ்டர் கென்னித் இந்த விழாவினைத் துவங்கி வைத்தார்.

முக்கிய நிகழ்வுகள்:

- அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மலைப்பகுதியின் பெயரில் இந்தத் திருவிழா கொண்டாடப்படுகிறது.
- இந்தப் பகுதியின் புத்தமதக் கலாச்சாரம்அழகு போன்றவற்றை வெளிப்படுத்துவதின் மூலம் சுற்றுலாவைக் கவர இந்த விழா ஏற்பாடு செய்யப்படுகிறது.

இரு யூனியன் பிரதேசங்களானது ஜம்மு - காஷ்மீர்

- ஜம்மு-காஷ்மீர் மாநிலம் அக்டோபர் 30 அன்று நள்ளிரவு முதல் ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களானது. இவ்விரு யூனியன் பிரதேசங்களிலும் காவல் துறையும், சட்டம்-ஒழுங்கும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.
- ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த அரசியலமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவை நீக்குவதற்கான தீர்மானம், ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா-2019 ஆகியவை மாநிலங்களவையில் கடந்த ஆகஸ்ட் 5-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டன.
- இந்நிலையில், இவ்விரு யூனியன் பிரதேசங்களும் புதன்கிழமை நள்ளிரவு முதல் செயல்படத் தொடங்கின. அக்டோபர் 31 இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு 560-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைந்த நாட்டின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தினமாகும். இந்த நாளில், ஜம்மு-காஷ்மீர் மாநிலம், இரு யூனியன் பிரதேசங்களாகச் செயல்படத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கை வேளாண்மையின் கீழ் 2000 பஞ்சாயத்துகள்

- பிரகிருதிக் கெட்டி குஷ்ஷால் கிசான் யோஜனாவின் கீழ் சுமார் 2,209 பஞ்சாயத்துகள் இயற்கை விவசாயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந்த திட்டத்தின் கீழ் கரிம மற்றும் பூஜ்ஜிய பட்ஜெட் விவசாயத்தை அரசு ஊக்குவித்து வருகிறது.

அம்சங்கள்

- இத்திட்டத்தின் கீழ், 2019ஆம் ஆண்டிற்கான 50,000 விவசாயிகள் இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இதுவரை 20,579 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில், 15,391 பேர் ஏற்கனவே தங்கள் வயல்களில் இயற்கை விவசாயத்தைப் பயின்று வருகின்றனர்.
- 2020 மார்ச் வரை மாதத்திற்கு குறைந்தபட்சம் 5 பயிற்சி அமர்வுகளை நடத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- பயிற்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் தொழில்நுட்ப தொகுதி மேலாளர் மற்றும் உதவித் தொழில்நுட்ப மேலாளர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பிரிகிருதிக் கேதி குஷால் கிசான் திட்டம்

- இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் இத்திட்டத்தை இமாச்சல பிதேச அரசு தொடங்கியது.
- விவசாயிகளுக்குத் தேவையான செலவுகளைக் குறைத்தல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் பண்ணையில் ரசாயனங்கள் மற்றும் உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.
- இந்த திட்டம் இயற்கை விவசாயத்தின் உள்ளீடுகளை உருவாக்கத் தேவையான டிரம்ஸுக்கு 75% மானியத்தை வழங்குகிறது. இது கிராமங்களில் இயற்கை வளக் கடையைத் திறக்க ரூ.50,000 நிதி உதவி வழங்குகிறது.

இரண்டாவது சர்வதேசச் சூரிய சக்திக் கூட்டணிக் கூட்டம்

- இரண்டாவது சர்வதேசச் சூரிய சக்தி கூட்டணி சந்திப்பு இந்தியாவில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி மத்திய புதிய மற்றும் புதுபிக்கதக்க ஆற்றல் அமைச்சகம் ஏற்பாடு செய்திருக்கிறது.
- டெல்லியில் அக்டோபர் 30 முதல் 31, 2019 நடைபெறுகிறது. இதில் 81 நாடுகள் பங்கேற்கின்றன.

சர்வதேசச் சூரிய சக்திக் கூட்டமைப்பு

- இந்த கூட்டமைப்பை உருவாக்கும் விரிவான செயல்திட்டம் 30-11-2015 அன்று பிரான்ஸ் முன்னாள் அதிபர் பிராங்கோயிஸ் ஹாலண்டே-பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரால் உருவாக்கப்பட்டது. இதையடுத்து, டெல்லி அருகேயுள்ள குர்கான் நகரில் சர்வதேசச் சூரிய சக்திக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தியை மின் தேவைகளுக்குப் பயன்படுத்தும் நாடுகளுக்கு வழிகாட்டியாக இந்த அலுவலகம் இயங்கி வருகிறது.

விபத்து மற்றும் தற்கொலை இறப்புகள் பற்றி ஆய்வு வெளியீடு

- தேசியக் குற்றப் பதிவுப் பணியகம் "விபத்து மற்றும் தற்கொலை இறப்புகள் பற்றிய ஆய்வை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கைபடி நகரங்களில் தற்கொலை விகிதம் 2015ல் 10.6 ஆகவும், 2016ஆம் ஆண்டு 10.3 ஆகவும் குறைந்துள்ளது.
- நாடு முழுவதும் 8.68% இறப்பு இயற்கை யாகவும் 38.1% லைட்டிங்களாலும் , 8.9% வெள்ளம், 15.4% சூரிய பக்கவாதம் (Sun Stroke) ஆகியவற்றால் இறப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஐந்தாவது சர்வதேச சாலைத் தொழில்நுட்ப மாநாடு

- ஐந்தாவது சர்வதேசச் சாலைத் தொழில்நுட்ப மாநாடு (நிலையான சாலை மற்றும் நெடுஞ்சாலை) டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் அஜெண்டா "Smart Use of Available Resources for Green and Sustainable Roads" மத்திய மாநில சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் வி.கே.சிங் தொடங்கி வைத்தார்.

ஏக்தா திவாஸ் தினத்தில் பிரதமர் மோடி தொழில்நுட்பத் தளத்தைத் துவக்கி வைத்தார்

- குஜராத் மாநிலம் கெவடியாவில் அக்டோபர் 31ல் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு தினத்தில் புதிய தொழில்நுட்பங்களும் இங்கு செயல்படுத்திக் காட்டப்பட்டன.
- இந்தத் தொழில் தளத்தில் காவல்துறை மற்றும் பாராளுமன்ற பாதுகாப்பு படை குறித்த பலதரப்பட்ட தகவல்கள் தரப்பட்டிருக்கும்.
- CRPF, CISF, BSF, NSG மற்றும் மாநிலக் காவல் துறைகளை ஒருங்கிணைத்து தொழில்நுட்ப மேம்பாட்டை ஏற்படுத்தவும் இந்தத் தளம் உதவியாக இருக்கும்.

தேர்ச்சி விகிதம் குறைந்தால் ஆசிரியர்களுக்குக் கட்டாய ஓய்வு

- உத்தரகாண்ட் அரசுப் பள்ளிகளில் தேர்ச்சி விகிதம் குறையக் காரணமான ஆசிரியர் களுக்குக் கட்டாய ஓய்வு வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- உத்தரபிரதேசத்தில் இருந்து கடந்த 2000வது ஆண்டில் பிரிந்த மாநிலம் உத்தரகாண்ட், இதன் கடுவால் மற்றும் குமாவன் மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் தேர்ச்சி எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது.
- மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறையக் காரணமானவர்கள் மற்றும் முன் அனுமதி யின்றி விடுப்பு எடுக்கும் ஆசிரியர்களுக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்படும். இது 50 வயது நிறைவடைந்தவர்களுக்கு மட்டும் பொருந்தும்.

IIT முன்னாள் மாணவர்களின் அறக்கட்டளை

- டெல்லி IIT மாணவர்களில் உருவாக்கப்பட்ட முன்னாள் மாணவர்கள் அறக்கட்டளையை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந் துவங்கி வைத்தார். ரூபாய் 250 கோடியில் இந்த அறக்கட்டளை துவங்கப்பட்டுள்ளது.
- டெல்லி IITயின் முன்னாள் மாணவர்களால் இந்தியா முழுதும் அதிகளவில் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் துவக்கப்பட்டு உள்ளன. இந்த நிதியின் மூலம் மேலும் பலரை, ஊக்குவிக்க இயலும்.

லடாக் யூனியன் பிரதேசத்தில் இமாலயன் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு நிறுவனம்

- மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றங்கள் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் லடாக் யூனியன் பிரதேசத்தில் புதிய இமயமலை சுற்றுச்சூழல் மேம்பாட்டு நிறுவனம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளதாக அறிவித்தார்.

நோக்கங்கள்

- குளிர்ப் பாலைவனப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதார மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கான மாற்று வழிகளை ஆராய இந்த நிறுவனம் துவங்கப்பட்டுள்ளது.
- குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவது குறித்தும் ஆராயப்படும்.

மூங்கில் தொழில் பூங்கா

- வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டு அமைச்சகம் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் புதிய யூனியன் பிரதேச மாநிலங்களில் மூங்கில் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும் என அறிவிக்கை வெளியிட்டுள்ளது.
- வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மூங்கில் தொழில்நுட்ப மையம் இந்தத் திட்டத்தை செயல்படுத்த உள்ளது

யானைக்கால் நோய் ஒழிப்புக் கருத்தரங்கு

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை யானைக்கால் ஒழிப்பு குறித்த கருத்தரங்கை நடத்தியுள்ளது.
- இதன் மையக்கருத்து: *United to Eliminate Lymphatic Hilariasis.*

கருத்தரங்கின் முக்கிய நிகழ்வுகள்

- இந்தக் கருத்தரங்கு சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.
- இந்திய அரசு மூன்று மருந்து முறைகளை நவம்பர் மாதம் முதல் செயல்படுத்த உள்ளது.
- இந்திய அரசும் –உலக சுகாதார அமைப்பும் இணைந்து இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துகின்றன.

அபாய அளவைத் தாண்டியது காற்றுமாசு டெல்லியில் அவசர நிலை அறிவிப்பு

- *காற்றுத் தரக் குறியீட்டின்படி 50 புள்ளிகள் வரை காற்று மாசு இருந்தால் 'நல்லது'. 100 புள்ளிகள் வரை இருந்தால் 'திருப்தி'. 200 புள்ளிகள் வரை இருந்தால் 'மிதமானது'. 300 புள்ளிகள் வரை இருந்தால் 'மோசம்'. 400 புள்ளிகள் வரை 'மிகவும் மோசம்'. 500 புள்ளிகள் வரை இருந்தால் 'ஆபத்தானது'. 500 புள்ளிகளுக்கு மேல் சென்றால் 'அவசர நிலைக்கு' ஒப்பானதாகும்.*
- *கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு டெல்லியில் காற்று மாசு 582 புள்ளிகளைத் தொட்டது. இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தடுப்பு ஆணையம், டெல்லியில் சுகாதார அவசர நிலையை அறிவித்தது. காற்று மாசைக் குறைக்க வரும் 5-ம் தேதி வரை கட்டுமானப் பணிகளுக்கும் குளிர் காலம் முடியும் வரை பட்டாசுகள் வெடிக்கவும் ஆணையம் தடை விதித்துள்ளது.*

சுவாசக் கோளாறு

- *"ஆஸ்துமா, நுரையீரல் பிரச்சினை, சுவாசக் கோளாறு உள்ளவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்" என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

நோபல் பரிசு பெற்ற அபிஜித்துடன் இணைந்து பள்ளிக் கல்வியை மேம்படுத்தும் தெலுங்கானா

- *நோபல் பரிசு பெற்ற இந்தியரான், அபிஜித் பானர்ஜியுடன் இணைந்து, பள்ளிக் கல்வியை மேம்படுத்த, தெலுங்கானா மாநில அரசு திட்டமிட்டுள்ளது.*
- *அரசு பள்ளிகளில் மாணவ - மாணவியர் எண்ணிக்கை, பெரும் அளவில் குறைந்து வருவதாகச், சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் தெரியவந்தது.*
- *கிராமப் பகுதிகளில் உள்ள, 916 பள்ளிகளில், ஒரு மாணவர் கூட இல்லாத நிலை உருவாகி உள்ளது. 100க்கும் மேற்பட்ட பள்ளிகளில், 50க்கும் குறைவான மாணவர்களே படிக்கின்றனர்.*
- *இதையடுத்து, பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற இந்தியரான, அபிஜித் பானர்ஜியுடன் இணைந்து, பள்ளிக் கல்வியை மேம்படுத்தும் திட்டத்தைத் தெலுங்கானா அரசு வகுத்துள்ளது.*
- *அபிஜித்தின் ஜே.பி.ஏ.எல்., எனப்படும், அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு ஆய்வகத்துடன், ஒப்பந்தம் போடப்பட்டு உள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின், பொருளாதாரப் பேராசிரியர் கார்த்திக் முரளிதரன் மேற்பார்வையில், இந்தக் கல்வி திட்டம் செயல்படுத்தப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.*

Ex-gratia திட்டம்

- *நாகாலாந்து மாநில முதலமைச்சர் நீபியு ரியோ மாணவர்கள் வெளி மாநிலங்கள்/நாடுகளில் சென்று படிப்பதற்கு Ex-gratia என்ற திட்டம் தொடங்கி வைத்தார். இதன் மூலம் எதிர்பாராத விபத்துகளில் மாணவர்கள் இருக்கும்போது பெற்றோர்களுக்கு ரூ.5 லட்சம் வரை நிதியுதவி அளிக்க இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் பெயர் "Nagaland Government Ex-gratia Scheme for Students Studying outside Nagaland என்பதாகும்.*

Review us on Google 4.8 ★★★★★ Vetrii IAS Academy

இந்தியாவின் புதிய வரைபடம் வெளியீடு

- ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரு புதிய யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டதை அடுத்து, இந்தியாவின் புதிய வரைபடத்தை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது.
- புதிய யூனியன் பிரதேசங்களின் எல்லைகள் வரைபடத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரின் சில பகுதிகளும், புதிய வரைபடத்தில் இடம்பெற்றுள்ளன.



கொல்கத்தா சர்வதேசத் திரைப்பட விழா நவம்பர் 8-ம் தேதி தொடங்க உள்ளது

- கொல்கத்தா சர்வதேசத் திரைப்பட விழா நவம்பர் 8 ஆம் தேதி தொடங்கும். சத்யஜித் ரே இயக்கிய குப்பி கயன், பாகா யேன் இந்த விழாவின் தொடக்கப் படமாக இருக்கும்.
- விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் சினி சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சன் மற்றும் ஷாருக்கான், மேற்கு வங்க முதல்வர் மம்தா பான்ஜி கலந்து கொள்ள உள்ளார்.

வேலை உதவி எண்

- பஞ்சாப் மாநில முதலமைச்சர் அமரிந்தர் சிங் வேலைக்கான உதவி எண்ணை அறிமுகப்படுத்தி உள்ளார். வேலையில்லா இளைஞர்களுக்கு உதவுவதற்காக ஹர்கர் ரோஜ்கர் திட்டத்தின் கீழ் தொடங்கி வைக்கப்பட்டது.
- இதன்மூலம் மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற இது ஒரு உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இந்த உதவி எண் சென்றடைய வேண்டும் என்பதாகும்.

லடாக்கில் சிறப்புக் குளிர்கால எரிபொருள் தொடக்கம்

- லடாக்கில் பயன்படுத்த இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐஓசி) நிறுவனத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள சிறப்புக் குளிர்கால டீசல் அடங்கிய முதல் டேங்கர் லாரியைத் தில்லியில் வீடியோ கான்ப்ரன்ஸிங்கில் தொடங்கி வைத்தார் உள்துறை அமைச்சர் அமித் ஷா.

குளிர்காலச் சிறப்பு டீசலின் முக்கியத்துவம்:

- பொதுவாக லடாக், கார்கில், காடா மற்றும் கீலாங் போன்ற உயரமான மலைப் பிரதேசங்களில் குளில்காலத்தில் வெப்பநிலை மைனஸ்டிகிரி செல்ஷஸாக குறையும் போது வாகனங்களில் நிரப்பியுள்ள டீசல் உறைந்து விடும்.
- இந்தச் சிரமங்களை எதிர்கொள்ளும் வகையில், ஐஓசி நிறுவனம் குளிர்காலச் சிறப்பு டீசலை அறிமுகப்படுத்தித் தீர்வைக் கண்டுள்ளது.
- இந்த எரிபொருள் தீவிரக் குளிர்காலத்திலும் அதன் திரவத்தன்மையை இழக்காது.

NRIUMSD தொடக்கம்

- மத்திய ஆயுஷ் அமைச்சகம், ஹைதராபாத்தில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் (சி. ஆர்.ஐ.எம்) தோல் கோளாறுகளுக்கான யுனானி மருத்துவத்தின் தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தைத்) NRIUMSD) தொடங்கி வைத்துள்ளது.
- ஆயுஷ் என்பது ஆயுர்வேதா, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவத்தை உள்ளடக்கியது.

கொல்கத்தா சர்வதேசத் திரைப்படத் திருவிழா

- 25வது கொல்கத்தா சர்வதேசத் திரைப்படத் திருவிழா நவம்பர்8 அன்று நடைபெற உள்ளது. 76 நாடுகளில் இருந்து 214 சிறப்புப் படங்கள், 152 குறும்படம் மற்றும் ஆவணப்படங்கள், 17 இடங்களில் திரையிடப்பட உள்ளன.

கொல்கத்தாவில் சர்வதேச இந்திய அறிவியல் திருவிழா

- 5-வது சர்வதேச இந்திய அறிவியல் திருவிழா மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தாவில் உள்ள பிஸ்வ பங்களா கன்வென்ஷன் சென்டர் மற்றும் கொல்கத்தா அறிவியல் நகரம் ஆகிய முதல் 8-ந் தேதி வரை 4 நாட்கள் நடைபெற உள்ளது.
- இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை சாதனை மாணவர்கள், கண்டுபிடிப்பாளர்கள், தொழில்நிபுணர்கள், விவசாயிகள், அறிவியலாளர்கள் ஆகியோருடன் இணைந்து கொண்டாடும் வகையிலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் அனைத்து இந்தியர்களையும் அரவணைத்துச் செல்லும் வகையிலும் சர்வதேச இந்திய அறிவியல் திருவிழாவினை மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் கடந்த 2015-ம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.

நிர்பயா நிதியைப் பயன்படுத்தி மகளிர் உதவி மையங்கள் அமைக்கப்படும்

- நிர்பயா நிதியைப் பயன்படுத்திக் காவல் நிலையங்களில் மகளிர் உதவி மையங்களும், ஆள் கடத்தல் தடுப்புப் பிரிவுகள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி தெரிவித்தார்.
- பெண்களின் பாதுகாப்புக்காக நிர்பயா நிதி ஒதுக்கப்படும் என்று கடந்த 2013-ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது.
- இந்த நடவடிக்கையால் பெண்கள்மற்றும்குழந்தைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். நிர்பயா நிதி மூலம் முதல்முறையாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

eCAOA 2019 : முதல்கலைக் கண்காட்சி

- வளர்ச்சி குன்றியவர்களின் திறமைகளுக்கான இந்தியாவின் முதல் கலைக் கண்காட்சி "eCAPA 20419-Art frdom the Heart' டெல்லியில் தொடங்கி வைக்கப்பட்டது.
- இக்கண்காட்சி நவம்பர் 14 வரை நடைபெற உள்ளது.

eCAPA 2019 – Art from the Heart :

- நாடு முழுவதும் உள்ள டவுன் சின்ரோம், ஆட்டிசம், டிஸ்லெக்ஸிய, மனநலக் குறைபாடு, வலிப்பு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் கலைகள் மற்றும் ஓவியங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

நோக்கம் :

- அறிவு சார்ந்த சவால்களைக் கொண்ட இளைஞர்களின் திறமைகள் மற்றும் கலைகள் வெளிப்படுத்துவதற்கான ஒரு பிரத்யேகத் தளமாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

காந்தி சங்கல்ப யாத்திரை

- நாட்டில் அமைதி, சகோதரத்துவம், சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக 'காந்தி சங்கல்ப யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சகிப்புத்தன்மை என்பது இந்தியாவின் மரபணுவில் கலந்துள்ளது என்றும், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதில் உலகுக்கு முன்னுதாரணமாக இந்தியா திகழ்கிறது என்றும் மத்திய அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி தெரிவித்தார்.

ஐந்தாவது வறண்ட நில அட்லஸ் 2019

- மத்திய கிராமப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரீ நரேந்திர சிங் தோமா, ஐந்தாவது வறண்ட நில வரைபடம் 2019 வெளியிட்டார்.
- இந்தியா முழுவதும் 2015-16ன் அறிக்கையின் படி 17 சதவீதம் வறண்ட நிலம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2008-2009 மற்றும் 2015-16ன் படி இந்தியாவின் வறண்ட பகுதி 55.76 மில்லியன் ஹெக்டேரில் / 16.96% வறண்ட நிலப் பகுதி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மாவட்டம் மற்றும் மாநிலங்கள் வாரியாகத் தேசியத் தொலை உணர்வு மையம் மூலம் வறண்ட நிலங்கள் பற்றிய தகவல்கள் கண்டறியப்பட்டன. இதற்கு முன்பு 2000,2005, 2010, 2011 ஆகிய பதிப்புகளை நில வளங்கள் மேம்பாட்டுத் துறை, தேசியத் தொலை உணர்வு மையம் மற்றும் விண்வெளித் துறை இணைந்து வெளியிட்டது.

தேசியத் தொலை உணர்வு மையம்

- தலைமையிடம்: ஹைதரபாத், பெங்களூர்.
- செயலாளர் : சாந்தனு சௌதூரி

இந்தியாவின் முதல் மெகா அறிவியல் கண்காட்சி விக்யான் சமகம் 2019

- இந்தியாவின் முதல் உலகளாவிய மெகா-அறிவியல் கண்காட்சியை "விக்யான் சமகம் 2019" கொல்கத்தா நகரில், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சர், ஹர்ஷவர்தன் தொடங்கி வைத்தார்.
- அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.
- இக்கண்காட்சியின் முதல் இரண்டு பகுதிகள் மும்பை மற்றும் பெங்களூரில் நடைபெற்ற பின்னர் கொல்கத்தாவில் நடைபெற்றது.
- மேலும் இதன் இறுதி பகுதி தேசிய அறிவியல் மையத்தில் வரும் ஜனவரி 21 முதல் மார்ச் 20, 2020 வரை நடைபெற உள்ளது.

ரூ.8 கோடியில் மகளிருக்கான இ=டாய்லெட்

- பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் நிர்பயா நிதித் திட்டப் பங்களிப்புடன் பல்வேறு இடங்களில் ரூ. 8 கோடி மதிப்பில் 150 இருக்கைகள் அளவிலான இ-டாய்லெட்கள் அமைக்கப்பட உள்ளன.
- நீரைச் சிக்கனப்படுத்தவும், சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் சென்னை மாநகராட்சியில் கடந்த 2016-இல் இ-டாய்லெட்கள் அமைக்கப்பட்டன.

நிர்பயா நிதி

- பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்களுக்கான சிறப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சென்னை மாநகராட்சியில் மத்திய அரசின் நிர்பயா நிதித் திட்டத்தில் ரூ.425 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு கடந்த 2018-இல் தமிழக அரசு அனுமதி அளித்தது. இதன்படி, 60 சதவீத நிதியான ரூ.255 கோடியை மத்திய அரசும், 40 சதவீத நிதியான ரூ.170 கோடியை மாநில அரசும் வழங்குகிறது.

சுகாதார ஏ.டி.எம்

- இந்திய ரயில்வேதுறை, லக்னோவில் உள்ள சர்பேக் ரயில்வே நிலையத்தில் இரண்டு சுகாதார ஏ.டி.எம். நிறுவியுள்ளது. ரூ.50-100க்கு 16 சுகாதாரப் பரிசோதனைகளை இந்த YONO Health ATM வழங்குகிறது.
- இரண்டு வகையான பரிசோதனைகள் 9 நிமிடங்களில் ரூ.100க்கும், 6 நிமிடங்களில் பரிசோதனைகளுக்கு ரூ.50க்கு வழங்குகிறது. இதன் அறிக்கை உடனடியாக மின்னஞ்சல் அல்லது செல்லிடப்பேசிகளில் வழங்கப்படுகிறது.
- இரத்த அழுத்தம், கொழுப்பு. ஹீமோகுளோபின், வளர்சிதை மாற்ற வயது, எடை, உயரம், வெப்பம், தசை மஜாஜ், ஆக்சிஜன் செறிவு, இரத்த குளுக்கோஸ், வளர்சிதை மாற்ற மதிப்பீடு போன்ற பரிசோதனைகள் வழங்கப்படுகிறது.

உலகளாவிய இமாச்சல
முதலீட்டாளர்கள் சந்திப்பு 2019

- இமாச்சல மாநில அரசு "உலகளாவிய இமாச்சல் முதலீட்டாளர்கள் சந்திப்பு 2019 ஏற்பாடு செய்திருக்கிறது. இச்சந்திப்பு தர்மசாலாவில் நடைபெறுகின்றது.
- இச்சந்திப்பில் தூதுவர்கள், தலைவர்கள் மூத்த கொள்கை உருவாக்குபவர்கள், தனிக் கார்பரேட் துறை மேம்பாட்டு முகவர், உலகளவில் உள்ள முதலீட்டாளர்கள், மத்திய வணிகத் தொழில்துறை மற்றும் ரயில்வேத்துறை அமைச்சர் பியூஷ்கோயல் கலந்து கொண்டார்.
- இமாச்சல பிரதேசத்தில் முதலீட்டை அதிகரிக்கச் செய்வது இதன் நோக்கமாகும். உலகளாவிய இச்சந்திப்பில் இமாச்சல மாநிலத்தில் 8 துறைகளில் முதலீட்டை உருவாக்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.
- உலகளாவிய இமாச்சல மாநாடு தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வசதி நிறுவனம் மூலம் இந்தியாவில் முதலீடு ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும்.

இந்தியாவின் முதல் நான்கு நிலை
சந்திப்புச் சாலை கட்டப்பட உள்ளது

(India's First 4-level transit Intersection to be constructed in Nagpur)

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூர்க்கு அருகே உள்ள ரயில்வே தண்டவாளங்கள் மற்றும் நாக்பூர் மெட்ரோவுக்கு மேலே இந்தியாவின் முதல் நான்கு நிலை (Intersection) இடையே சந்தித்து கொள்ளும் சாலை கட்டப்பட உள்ளதாக தெரிவித்துள்ளது. இதற்காக இந்திய அரசு ரூ.573 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.
- காம்ப்டி சாலையில் ஒரு ரயில்வே பாலம் அருகே நான்கு நிலை சந்திப்பு முன்மொழியப்பட்டது. அதனுடன் நாக்பூர் மெட்ரோவும் இணையும்.

நாஸ்காம் அறிக்கை : உலகின் மூன்றாவது
பெரிய ஸ்டார்அப் மையமாக இந்தியா உள்ளது

- இந்தியன் டெக் ஸ்டார்ட்-அப் சுற்றுச்சூழல் அமைப்பு குறித்த நாஸ்காம் அறிக்கையில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது பெரிய ஸ்டார்ட் அப் சுற்றுச்சூழல் அமைப்பாக உள்ளது.
- இந்தியா 2019ஆம் ஆண்டில் 1300க்கும் மேற்பட்ட தொழில்நுட்பத் தொடக்கங்களைச் சேர்த்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டார்ட் அப் சுற்றுச்சூழல் அமைப்பால் உருவாக்கப்பட்ட மறைமுக வேலைகள் 2019ல் 14 லட்சம் முதல் 16 வரை, உயர்ந்து 2025 ஆம் ஆண்டில் 39 முதல் 44 லட்சமாக உயரக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

நாஸ்காம்

- நாஸ்காம் என்பது மென்பொருள் மற்றும் சேவை நிறுவங்களின் தேசியச் சங்கம். இது இந்தியத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிபிஓ தொழில்களின் இலாப நோக்கற்ற வர்த்தகச் சங்கமாகும்.

பெண்கள் அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு

- ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் பெண்கள், அமைதி ஆராய்ச்சி நிறுவனம் ஒஸ்லே, நார்வே ஆகியவை இணைந்து பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு 2019-ன் இரண்டாவது பதிப்பை வெளியிட்டது. இதில் 167 நாடுகளில் இப்பட்டியலில் நார்வே முதல் இடத்தில் உள்ளது. அனைத்து அம்சங்களிலும் ஐஸ்லாந்து மட்டுமே சிறப்பாகச் செயல்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

தரவரிசை	நாடுகள்
2	சுவிட்சர்லாந்து
3	பின்லாந்து
167	ஏமன்

நிமோனியா: ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் இந்தியாவுக்கு 2வது இடம் ஐ.நா

- உலகளவில் ஒவ்வொரு 39 விநாடிக்கும் ஒரு குழந்தை நிமோனியாவால் உயிர் இழக்கிறது. நிமோனியா, குணப்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய நோயாக இருந்தும் 2018 ஆம் ஆண்டில் நிமோனியாவால் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்று ஐ.நா.வின் புதிய அறிக்கை கூறி உள்ளது.
- பெரும்பாலான இறப்புகள் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஏற்பட்டு உள்ளன. மேலும் வாழ்க்கையின் முதல் மாதத்திற்குள் கிட்டத்தட்ட 153,000 குழந்தைகள் இறந்து உள்ளனர்.
- நிமோனியாவால் குழந்தைகள் இறப்புகளில் அதிகம் பாதிக்கப்படுவது ஐந்து நாடுகளே ஆகும். நைஜீரியா (162,000), இந்தியா (127,000), பாகிஸ்தான் (58,000), காங்கோ ஜனநாயக குடியரசு (40,000) மற்றும் எத்தியோப்பியா (32,000).

நாகா அமைதி ஒப்பந்தம்

- வடகிழக்கு மாநிலங்களில் நாகா இன மக்கள் வசிக்கும் பகுதிகளை ஒருங்கிணைத்து "நாகாலிம்" என்ற பெயரில் புதிய மாநிலம் உருவாக்க வேண்டும் எனப் பிரிவினைவாத அமைப்பான நாகாலாந்து தேசிய சோஷலிசக் கவுன்சில் (என்எஸ்சிஎன்-ஐம்), நீண்டகாலமாக போராடி வரும் நிலையில், அவர்களுடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு முன்னெடுத்துள்ளது.

சமஸ்கிருத பாரதி விஸ்லவா சம்மேளனம்

- 17 நாடுகளில் இருந்து 100 சதவீதத்துக்கும் மேற்பட்ட சமஸ்கிருத மொழியை விரும்புவோரின் சமஸ்கிருத பாரதி விஸ்வா சம்மேளன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த மெகா நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது

கங்கா உத்சவ்

- கங்கை தேசிய நதியாக அறிவிக்கப்பட்ட 11வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதமாக புதுதில்லியில் உள்ள மேஜர் தியன்சந்த் மைதானத்தில் "கங்கா உட்சவ்" ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கங்கா உட்சவ் பற்றி

- கங்கை நதியையும் அதன் துணை நதிகளையும் சுத்தம் செய்வதற்கான முயற்சிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பொது மக்களின் பங்களிப்பை சேகரிப்பதற்கும் இந்த நிகழ்வு ஏற்பாடுச் செய்யப்பட்டது.
- இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 4ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஏனெனில் 2008ஆம் ஆண்டில் இந்த நாளில் கங்கை நதி நாட்டின் தேசிய நதியாக அறிவிக்கப்பட்டது.

கல்லூரிகளில் "ஒரே இந்தியா மன்றம்"

- ஒரே இந்தியா; சிறந்த இந்தியா' என்ற பெயரில், கல்லூரிகளில் மன்றங்களை உருவாக்க, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. பல மாநிலங்கள், மொழிகள், இனங்கள், கலாசாரம் என்றிருந்தாலும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாக, இந்தியா உள்ளது.
- இதை வலுப்படுத்தும்வகையில், வல்லபாய் படேலின் பிறந்த நாளான, அக்டோபர் 31ல், தேசிய ஒருமைப்பாடு தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, பல மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை, இணைக்கும் விதமாக, 'ஒரே இந்தியா; சிறந்த இந்தியா' மன்றங்களை, பல்கலை மற்றும் கல்லூரிகளில் துவங்க வேண்டும்.
- இந்த மன்றங்கள் வழியே, மொழி, கலாசாரம், இலக்கியம், உணவு, கல்வி சுற்றுலா சார்ந்த விழாக்களை நடத்த வேண்டும். இவ்வாறு, யு.ஜி.சி., தெரிவித்துள்ளது.

குடிமக்களுக்கு நீதி வழங்குவதில் மகாராஷ்டிரா மாநிலம் முதல் இடத்தில் உள்ளது

- இந்தியா நீதி அறிக்கையின்படி குடிமக்களுக்கு நீதி வழங்குவதில் மகாராஷ்டிரா மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளது. நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை, சட்டஉதவி, மனித வளங்கள், பணிச்சுமை அரசுத் தரவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்த பின்னர் இந்திய நீதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சேவைகள் குறித்த உலகளாவிய கண்காட்சி

- ஐந்தாவது சேவைகள் குறித்த உலகளாவிய கண்காட்சி நவம்பர் 26 முதல் 28 வரை பெங்களூரு, கர்நாடகாவில் நடைபெற உள்ளது. உலகெங்கிலும் உள்ள தொழில் மற்றும் அரசாங்கங்களை ஈடுபடுத்துவதையும், இந்தியாவிற்கும் உலகின் பிற பகுதிகளுக்கும் இடையிலான சேவைகளின் அதிக வர்த்தக பரிமாற்றத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சேவைகளுக்கான உலகளாவிய கண்காட்சி என்பது வருடாந்திர நிகழ்வாகும். விண்வெளித் திட்டம், உள்கட்டமைப்பு மற்றும் தொலைத்தொடர்புத் திட்டங்கள் போன்ற முதலீடுகளை ஈர்க்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

அனைத்து மாநிலங்களிலும் கைவினைக் கலைஞர்களுக்கான பயிற்சி மையங்கள்

- நாட்டில் உள்ள கைவினைக் கலைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அடுத்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்திலும் பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி தெரிவித்தார். இதில் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர்களின் கைவினைப் பொருள்கள் இடம் பெறும்.

இந்திய சர்வதேச வணிகக் கண்காட்சி

- இந்திய சர்வதேச வணிக கண்காட்சியின் 39வது பதிப்பு புதுடெல்லியில் நடைபெற்றது. இந்தாண்டின் மையக்கருத்து – "Ease of Doing Business" என்பதாகும்.
- இந்த நிகழ்ச்சியை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தொடங்கி வைத்தார்.
- இந்த ஆண்டு "கூட்டாளர் நாடு" என்ற நிலையில் ஆப்கானிஸ்தானுக்கு வழங்கப்பட்டது மற்றும் தென்கொரியா கவனம் செலுத்தும் நாடாக இருக்கும். பீகார் மற்றும் ஜார்கண்ட் கவனம் செலுத்தும் மாநிலமாக இருக்கும். 2014ஆம் ஆண்டு தொழில் சாதகமான சூழலில் 142வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 63வது இடத்திற்கு முன்னேறி உள்ளது.

இந்தியாவின் முதல் காற்று மாசு கண்டறியும் வலைக் களஞ்சியம் "IndAIR"

- தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து கடந்த 60 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட காற்றின் தர ஆய்வுகளை ஆவணப்படுத்தும் இந்தியாவின் முதல் வலை களஞ்சியத்தை IndAIR அறிமுகப்படுத்தியுள்ளது.
- இன்டர்நெட் காலத்திற்கு முந்தைய 215 ஆய்வுக் கட்டுரைகள், 170 அறிக்கைகள் மற்றும் வழக்கு ஆய்வுகள் மற்றும் 100 வழக்குகளில் இருந்து சுமார் 700 ஸ்கேன் செய்யப்பட்ட பொருள்களை IndAIR கொண்டுள்ளது.
- காற்று மாசு ஆராய்ச்சி வரலாற்றை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காற்று மாசுபாடு குறித்த இத்தகைய களஞ்சியம் உலகிலேயே முதன்மையானது.

ஹைதராபாத்தில் சிறார் காவல் நிலையம் தொடக்கம்

- தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- இதையொட்டி, மேடிபள்ளி பகுதியில் 'பாலமித்ரா" என்ற பெயரில் சிறார் காவல் நிலையம் தொடங்கப்பட்டது. இந்தக் காவல் நிலையத்தில் சிறார்களுக்கு காவல்துறை சட்டங்கள், அவற்றின் விதிமுறைகள், தவறுகளுக்குக் கிடைக்கும் தண்டனைகள் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- இக்காவல் நிலைய அதிகாரியாக இஷான் என்ற மாணவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- "மேக் ஏ விஷ்" நிறுவனம் மூலம் கடந்த ஆண்டு ஒருநாள் காவல் ஆணையராகச் செயல்பட்டவர் ஆவார்.
- இந்தக் காவல் நிலையம் நோபல் பரிசு பெற்ற குழந்தைகள் நல ஆர்வலர் கைலாஷ் சத்யார்த்தி நடத்தி வரும் "பச்பன் பச்சாவ் ஆந்தோலன்" என்ற அமைப்பின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது.

சர்வதேசத் திரைப்பட விழா

- 50-வது கோவா சர்வதேச திரைப்பட விழா வரும் 28-ம் தேதி தொடங்கி நடைபெறுகிறது.
- 9 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் 76 நாடுகளை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.
- மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தலைமையில் நடக்கும்.
- இந்திய திரைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக அமிதாப் பச்சனுக்கு தாதா சாகேப் பால்கே விருதும், ரஜினிக்கு 'ஐகான் ஆப் கோல்டன் ஜூப்ளி' விருதும் வழங்கப்படுகிறது.
- இதேபோல பொன்விழா ஆண்டையொட்டி சிறந்த 12 திரைப்படங்களின் வரிசையில் கே.பாலசந்தர் இயக்கிய 'இரு கோடுகள்' திரையிடப்படுகிறது.

உலகின் முதல் அழுத்தப்பட்ட இயற்கை வாயு முனையம்

- குஜராத் மாநில அரசு உலகின் முதல் அழுத்தப்பட்ட இயற்கை வாயு முனையத்தை பாவ் நகர் துறைமுகத்தில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- அமெரிக்காவை சேர்ந்த Foresight Group மற்றும் மும்பையை சேர்ந்த பத்மநாப் மாய்டால் குழு இணைந்து ரூ.1900 கோடி மதிப்புள்ள இந்த முனையத்தை அமைக்க உள்ளது.

உத்தம் ரேக் (Uttam Rake): சிசிடிவி கேமராக்கள் கொண்ட முதல் ஏசி அல்லாத உள்ளூர் ரயிலை இந்திய ரயில்வே அறிமுகப்படுத்துகிறது

- இந்திய ரயில்வே "மேற்கு ரயில்வே மண்டலம் மும்பையில் உள்ள உள்ளூர் ரயில்களுக்கான அதிநவீன "உத்தம் ரேக்" அறிமுகப்படுத்தியுள்ளது.
- சென்னையில் உள்ள ICFல் இரண்டு உத்தம் ரேக்குகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் மற்றொன்று தென் மத்திய ரயில்வேக்கு வழங்கப்பட்டுள்ளது.
- உத்தம் ரேக்கில் சிறந்த இருக்கைகள், சிசிடிவி கேமராக்கள், சிவப்பு அவசர பொத்தான்கள், லக்கேஜ் ரேக்குகள் உள்ளன.

தேசிய தலைநகர் பிராந்தியம் 2041 மாநாடு

- மத்திய வீட்டு மற்றும் நகர விவகாரத்துறை அமைச்சகம், தேசிய தலைநகர் பகுதி 2041 என்ற மாநாட்டை டெல்லியில் தொடங்கி வைத்தது.
- இந்த மாநாட்டை தேசிய தலைநகர் பிராந்திய திட்டமிடல் வாரியம் ஏறபாடு செய்தது.
- இம்மாநாட்டின் மையக்கருத்து Planning for Tomorrow's Greatest Capital Region" என்பதாகும்.
- பிராந்திய திட்டம் 2014ல் குடிமக்கள் மையமாக கொண்ட திட்டமாகும், வாழ்க்கையை எளிமையாக வாழ்வதை உறுதி செய்தல் இதன் நோக்கமாகும்.

தமிழக உள்ளிட்ட 4 மாநிலங்களில் மருத்துவ உபகரணப் பூங்காக்கள்

- *இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தை ஊக்குவிக்கும் விதமாக, தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்களில் மருத்துவ உபகரணப் பூங்காக்களை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.*
- *ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, தமிழகம், கேரள மாநிலங்களில் இந்தப் பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன.*
- *சிகிச்சைக்கு தேவையான உலகத்தரம் வாய்ந்த உபகரணங்களைக் குறைந்த விலையில் உருவாக்கித் தரும் வகையில் இந்தப் பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன.*
- *நிறுவனங்கள் எளிதாக வந்து தொழில்தொடங்கும் வகையில் இந்த மருத்துவப் பூங்கா அனைத்திலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*
- *இந்தியாவில் மருத்துவ உபகரணங்களின் சந்தை மதிப்பு ரூ.70,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆசிய அளவில் நான்காவது மிகப்பெரிய சந்தையை இந்தியா கொண்டிருந்தாலும் மருத்துவ உபகரண தயாரிப்பு நிறுவனங்கள் மிகக் குறைந்த அளவுக்கே நாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.*

இந்தியன் சொசைட்டி ஆஃப்

ஏரோஸ்பேஸ் மருத்துவ மாநாடு

- *இந்திய விமானப்படை தளபதி ஆர்.கே.எஸ் இந்தியன் சொசைட்டி ஆஃப் ஏரோஸ்பேஸ் மெடிசன் மாநாட்டின் வருடாந்திர கூட்டம் 58வது பதிப்பினைப் பெங்களூரில் தொடங்கி வைத்தார்.*
- *விமானப்படை மருத்துவத்தில் சமகால சிக்கல்கள் மற்றும் பயன்பாடுகள் பற்றி இந்த மாநாட்டில் விவாதிப்பது இதன் நோக்கமாகும்.*
- *இதன் மையக்கருத்து Changing Paradigns in Aerospace Healthcare. இந்த நிகழ்வு பெங்களூரில் உள்ள இந்திய விமானப்படை மருத்துவ மையத்தில் நவம்பர் (14-16) நடைபெறுகிறது.*

சர்வதேச யோகா மாநாடு

- *கர்நாடக மாநிலம் மைசூரில் சர்வதேச யோகா மாநாடு நடத்த மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.*
- *இம்மாநாட்டின் மையக்கருத்து "Yoga for Heart Care" என்பதாகும். 700 மேற்பட்ட நாடுகள் மற்றும் தூதுவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 50 வல்லுநர்கள் அடங்கிய 10 தொழில்நுட்ப அமர்வுகள் (Sessions) இந்த மாநாட்டில் நடைபெறுகிறது.*

27வது மத்திய மாநில அரசு புள்ளியியல்

அமைப்புகளின் மாநாடு :

கொல்கத்தா, மேற்குவங்கம்

- *நவம்பர் 11, 12 தேதிகளில் 27வது மத்திய மாநில புள்ளியியல் அமைப்புகளின் மாநாடு மேற்கு வங்கம் கொல்கத்தாவில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் மையக்கருத்து நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals (SOG).*
- *மத்திய புள்ளியியல் மற்றும் திட்டங்கள் செயல்பாட்டு அமைச்சகம் இம்மாநாட்டை நடத்தியுள்ளது. புள்ளியியல் ஆணைய தலைவர் பேராசிரியர் பிமால் K.ராய் மாநாட்டை துவங்கி வைத்தார். 1971 முதல் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.*

Shilpotsav-2019

- *Shilpotsav-2019 டெல்லியில் (நவம்பர் 1-15) வரை நடைபெறுகிறது. சமூகத்தின் பலவீனமான பிரிவுகளைச் சேர்ந்த நாடு முழுவதும் உள்ள கைவினைஞர்களின் வருடாந்திரக் கண்காட்சி ஆகும்.*
- *இதற்காக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஏற்பாடு செய்தது. இந்த கண்காட்சியில் பட்டு புடவைகள், டூரிஸ், ரெடிமேட் பளிங்குப் பொருட்கள் மற்றும் கைத்தறி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.*

கிராம மற்றும் விவசாயி நிதி தொடர்பான உலக காங்கிரஸ்

- கிராம மற்றும் விவசாய நிதி தொடர்பான உலக காங்கிரஸ் மாநாடு 6வது பதிப்பு டெல்லியில் (நவம்பர் 12) நடைபெற்றது.
- உலகளவில் உள்ள கிராப்புற மற்றும் விவசாய நிதி பங்குதாரர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வணிக உறவுகளை வலுப்படுத்தவும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தவும் இந்த கூட்டமைவு வாய்ப்பு அளிக்கிறது.

6வது காங்கிரஸ்

- இந்தாண்டு டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டை நபார்ட் – விவசாய மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி, ஆசியா பசிபிக் கிராமப்புற மற்றும் விவசாய கடன் சங்கம், மத்திய விவசாய மற்றும் குடும்பநல அமைச்சகம் இணைந்து நடத்தியது.
- மையக்கருத்து : *"Rural and Agriculture Finance: Critical Input to achieve Inclusive and Sustainable Development".*

நோக்கம்:

- உலகளவில் விவசாயித்தின் மதிப்பை ஊக்குவித்தல்.
- உணவு பாதுகாப்பான முறையில் கையாள்வதை ஊக்குவித்தல்.

"NISHTHA" திட்டம் அறிமுகம்

- யூனியன் பிரதேசமான ஜம்மு & காஷ்மீரில் பள்ளித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தேசிய முன்னேற்றத்திற்கான தேசிய முயற்சி *(NISHTHA – National Initiative for School Heads and Teachers' Holistic Advancement)* தொடங்கி வைக்கப்பட்டது.
- இதன் முக்கிய நோக்கிய நோக்கம் பள்ளிகளில் கற்றல் திறனை மேம்படுத்துவதாகும்.

2G எத்தனால் ஆலை பானிபட

- மத்திய சுற்றச்சூழல் அமைச்சகம், பானிபட்டில் 2G எத்தனால் ஆலை அமைக்க இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆலை 766 கோடி செலவில் அமைக்க உள்ளது.
- இந்திய எண்ணெய் நிறுவனம் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக அறிக்கை சமர்பித்ததை அடுத்து தற்போது ஆலை அமைக்க *(100 KLPD Lingno-cellulloric-2G)* ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- உற்பத்தி செய்யப்படும் எத்தனால் பெட்ரோலுடன் எரிபொருளில் கலக்க பயன்படும்.

சர்வதேச லாவி கண்காட்சி

- நான்கு நாட்கள் நடைபெறும் சர்வதேச லாவி கண்காட்சி 2019 நவம்பர் 11 முதல் 14 வரை இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவின் ராம்பூர் மாவட்டத்தில் நடைபெறுகிறது. இதை இமாச்சல பிரதேச ஆளுநர் பண்டாருதாத்ரேயா துவங்கி வைத்தார். ஆளுநர் அவர்களால் "கின்னாரி சந்தை" மற்றும் பல்வேறு அரசு துறைகள் ஏற்பாடு செய்த கண்காட்சியையும் திறந்து வைக்கப்பட்டது.

சர்வதேச லாவி கண்காட்சி பற்றி

- லாவி கண்காட்சி கிட்டதட்ட 400 ஆண்டுகள் பழமையானது மற்றும் திபெத்துடனான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக இந்த கண்காட்சி இந்தியாவிற்கும் திபெத்துக்கும் இடையிலான ஒரு முக்கியமான வர்த்தக கண்காட்சியாக இருந்து வருகிறது. புகழ்பெற்ற சமூக, கலாச்சார, பொருளாதார வரலாறு மற்றும் இமயமலை மாநிலமான இமாச்சல பிரதேசத்தின் மரபுக்கு இது ஒரு தத்துவமான எடுத்துக்காட்டு.

இந்தியாவில் 77 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயால் பாதிப்பு

- உலகளவில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் ஆறில் ஒரு பங்கு மக்கள் இந்தியாவில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உலகளவில் நீரிழிவு நோயாளிகளின் பெரிய எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சர்வதேச நீரிழிவு கூட்டமைப்பின் சமீபத்திய தகவல்கள் படி 20-79 வயதுகுட்பட்டவர்களில் 77 மில்லியனாக உள்ளன. 116 மில்லியன் நீரிழிவு நோயாளிகள் கொண்ட நாடாகச் சீனா உள்ளது.

ஐ.பி.எம். வானிலை முன்கூட்டியே தெரிவிக்கும் அமைப்பு அறிமுகம்

- தொழில்நுட்ப நிறுவனமான சர்வதேச வர்த்தக இயந்திர நிறுவனம் புதியதாக விரைவாக வானிலையை முன்கூட்டியே தெரிவிக்கும் அமைப்பு அறிமுகம் செய்துள்ளது. இந்த அமைப்பு மூலம் 12 மணிநேரத்துக்கு முன்கூட்டியே வானிலை நிலை பற்றிய தகவலை அளிக்கும் திறன் கொண்டது.
- இதன்பெயர் IBM GRAF – The Global High Resolution Atmosphere Forecasting System என்பதாகும். இது சூப்பர் கணினி மூலமாக இயங்குகிறது மற்றும் உயர் தர வானிலை முன்னறிவிப்பை தருகிறது.

முதல் வாங்குபவர், விற்பவர் சந்திப்புக் கூட்டம்

- அருணாச்சல பிரதேசத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை உற்பத்தியாளர்களின் விற்பவர் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. இச்சந்திப்பு விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்தது.
- பூடான், வங்காளம், நேபாளம், இந்தோனிஷியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமன், கீரிக் நாடுகளை சேர்ந்த சர்வதேச வாங்குபவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பவன்தார் பர்பயே யோஜனா திட்டம்

- ஹரியானா மாநில அரசு தனது பவன்தார் பர்யே யோஜனா திட்டத்தின் கீழ் அதிக பயிர்களை இணைக்க முடிவு செய்து உள்ளது. இந்த முடிவை ஹரியானா மாநில முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் தெரிவித்தார்.
- பவந்தர் பர்பயே யோஜனா என்பது காய்கறி விவசாயிகளுக்கான ஒரு திட்டமாகும். இதன் கீழ் விவசாயிகள் தங்கள் பயிரை அரசாங்கம் நிர்ணயித்ததை விட குறைந்த விலைக்கு விற்றதற்கு இழப்பீடு தருகிறது.
- ஜனவரி 2018ல் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் உருளைக்கிழங்கு, வெங்காயம், தக்காளி மற்றும் காலிஃபிளவர் ஆகியவை அடங்கும்.

தொழில்நுட்ப மாநாடு பெங்களூருவில் தொடக்கம்

- பெங்களூருவில் 3 நாட்கள் நடைபெறும் தொழில்நுட்ப மாநாட்டை முதல்வர் எடியூரப்பா தொடங்கி வைத்தார்.
- நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணி மாநிலமாக கர்நாடகா விளங்குகிறது. கடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் இதற்கான மத்திய அரசின் முதல் தர விருதை கர்நாடகா பெற்றுள்ளது.

சுத்தமான காற்றை சுவாசிக்கக் கட்டணம் டெல்லியில் தொடங்கியது ஆக்சிஜன் பார்

- டெல்லியில் 527 என்ற அளவில் காற்று மாசு உலக அளவில் முதலிடத்தில் உள்ளது. இந்நிலையில், கட்டண முறையில் சுத்தமான காற்றை விற்பனை செய்யும் "ஆக்சிஜன் பார்" டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது.
- மே மாதம் "ஆக்சிஜன் பார்" தொடங்கப்பட்டது. இங்கு 10 முதல் 15 நிமிடங்களுக்கு சுத்தமான காற்றை சுவாசிக்க ரூ.299 வசூலிக்கப்படுகிறது.

முதல் தேசிய வேளாண் வேதியியல் காங்கிரஸ்

- முதல் தேசிய வேளாண் வேதியியல் காங்கிரஸ் நான்கு நாள் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஏற்பாடு செய்தது. இது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
- இம்மாநாட்டின் மையக்கருத்து : *Country's Status on various fronts of Agro Chemicals* என்பதாகும். ரசாயன பூச்சிக் கொல்லிகள் வகிக்கும் பங்கை முன்னிலைப்படுத்துவதே மாநாட்டின் நோக்கமாகும்.
- விவசாய உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவும் நானோ தொழில் சட்டம் வள மேலாண்டை, ஸ்மார்ட் ஃபார்முலேஷன்ஸ் தொடர்பான அறிவியல் ஆகியவற்றில் புதிய கருத்துகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

கேரளா அரசு 2025க்குள் காசநோயை ஒழிக்க முடிவு செய்துள்ளது

- 2025 ஆம் ஆண்டளவில் காசநோய் ஒழிப்பை கேரள அரசு, மத்திய அரசின் 6வது கூட்டு கண்காணிப்பு பணி மற்றும் திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுபாடு திட்டத்தின் கீழ் சரியான பாதையில் செல்வதாக உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

சர்வதேச யோகா மாநாடு

- சர்வதேச யோகா மாநாடு (நவம்பர் 15-16) கர்நாடகா மாநிலம் மைசூரில் நடைபெற்றது. இம்மாநாட்டை மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டில் மாநில ஆயுஷ் அமைச்சர் யெசோ நாயக் சர்வதேச யோகா தினம் 2020 ஆம் ஆண்டு நிகழ்வு மைசூரில் நடைபெறும் என்று அறிவித்தார்.
- இதன் மையக்கருத்து: "Yoga for Heart Care" என்பதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை 2014 ஆம் ஆண்டில் 69ஆவது அமர்வின் போது ஒரு மனதாக தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதை நினைவுகூறும் வகையில் ஐந்தாவது பதிப்பு மைசூரில் நடைபெற்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பிரச்சாரம்

- ஐ.நா. சபை, பெண்களுடன் இணைந்து மத்திய உள்துறை அமைச்சகம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை தொடங்கியது.
- டெல்லியில் உள்ள சுல்தான்பூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் "UNiTE to End Violence Against Women" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தனர்.
- நவம்பர் 25ம் தேதி கடைப்பிடிக்கப்படும் "பெண்களுக்கு எதிரான வன்முறைகளை (ஒழிப்பதற்கான சர்வதேசத் தினத்திற்கு முன்னதாக, "ஆரஞ்சு தி வோல்ட்" என்ற பெயரில் 16 நாள் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இந்தப் பிரச்சாரம் தொடங்கி வைக்கப்பட்டது. இது சர்வதேச மனித உரிமை தினம் டிசம்பர் 10 வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம்

- அனைத்து வீடுகளுக்கும் 2024-ஆம் ஆண்டுக்குள் குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இஸ்ரேலின் உதவியுடன் இந்தியா செயல்படவுள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தினத்தின்போது ஆற்றிய உரையில், அனைத்து வீடுகளுக்கும் வரும் 2024-ஆம் ஆண்டுக்குள் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு ரூ.3.5 லட்சம் கோடிக்கும் அதிகமாக செலவிடப்படவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், 'நீர் மேலாண்மையில் இந்தியா-இஸ்ரேல் இடையேயான பரஸ்பர ஒத்துழைப்பு' என்ற மாநாடு, இஸ்ரேலில் வரும் 17-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
- இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவிலுள்ள இந்தியத் தூதரகம் இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது

ஆந்திர பிரதேச மாநில அரசு
"நாடு-நேடு" திட்டம் அறிமுகம்

- ஆந்திர பிரதேச மாநில அரசு "நாடு-நேடு" திட்டம் அறிமுகம் செய்துள்ளது. அடுத்த கல்வி ஆண்டில் இருந்து அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு வரை ஆங்கிலம் பயிற்று மொழியாகவும், ஹிந்தி மற்றும் உருது பாடங்களை விருப்பபாடமாக கொண்டு வர உள்ளதாக அறிவித்தள்ளார். அம்மாநில முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி அறிவித்தார்.
- தெலுங்கு கட்டாயமாக்கப்படுவதாகவும், இந்த கல்வித் திட்டத்தை படிபடியாக 7, 8, 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கும் அமல்படுத்தப்படும் என்றும் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.
- இந்த திட்டத்தின் முதல் கட்டமாக 15, 715 பள்ளிகளில்அமல்படுத்தப்படும்என்றும்ரூ.12,000 கோடி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அம்மா வோடி திட்டம்

- மாநில அரசு பள்ளிகளில் தங்கள் குழந்தைகளை சேர்க்கும் தாய்மார்களுக்கு ஜனவரி 9, 2020 முதல் வருடாந்தில் உதவித்தொகை ரூ.15,000 வழங்கப்படும் என ஆந்திர முதல்வர் அறிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர், லடாக் இடையே
சொத்துகளைப் பகிர்ந்தளிக்க
3 பேர் குழு அமைப்பு

- இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கும் இடையே சொத்துகள், உரிமைகளை எந்தவிதப் பிரச்னையுமின்றி பகிர்ந்தளிக்க 3 அதிகாரிகள் அடங்கிய குழுவை மத்திய அரசு அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்பு அமைச்சக முன்னாள் செயலர் சஞ்சய் மித்ரா தலைமையிலான குழுவில் ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அருண் கோயல், ஓய்வுபெற்ற ஐசிஏஎஸ் அதிகாரி கிரிராஜ் பிரசாத் குப்தா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- 14-ஆவது நிதிக் குழுவின் அடிப்படையில் மத்திய அரசு வழங்க வேண்டிய நிதி, ஜம்மு-காஷ்மீருக்கு 70 சதவீதமாகவும், லடாக்குக்கு 30 சதவீதமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. நடப்பு 2019-20 ஆம் நிதியாண்டு நிறைவடையும்வரை இந்த நிதிப் பங்கீடு அமலில் இருக்கும்.

முக்கிய மந்திரி கழிவுநீர் தொட்டி திட்டம்

- டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் முக்கிய மந்திரி கழிவுநீர் தொட்டி (செப்டிக் சஃபை) யோஜனா-வை அறிமுகம் செய்துள்ளார்.
- மனிதர்கள் கழிவுகளை அகற்றுவதை குறைப்பதற்காக தொடங்கியுள்ளது. இத்திட்டம் நவீன தொழில்நுட்பம் மூலம் சுத்தம் செய்து தரப்படும் என தெரிவித்துள்ளது.

பி.என்.பி. பரிபாஸ் மற்றும் பரோடா பரஸ்பர
நிதி ஆகியவை இணைக்க இந்திய போட்டி
ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது

- பி.என்.பி. பரிபாஸ் மற்றும் பரோடா பரஸ்பர நிதி ஆகியவற்றை இணைக்க இந்திய போட்டி ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதை போட்டி சட்டம் 2002 கீழ் இணைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேலும் ஓராண்டு நீட்டித்து அவசர சட்டம்

- சொத்து உரிமையாளர் வாடகைதாரர்கள் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான காலக்கெடுவை மேலும், ஓராண்டுக்கு நீட்டித்து தமிழக அரசு அவசர சட்டம் பிறப்பித்துள்ளது.
- ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான காலக்கெடுவை மேலும் 12 மாதங்கள் நீட்டித்து கடந்த அக்டோபர் 21-ம் தேதி அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இதற்கான ஒப்புதல் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வெளிநாட்டு ஒத்துழைப்பு துறை

- ஹரியானா மாநில அரசு "புதிதாக வெளிநாட்டு ஒத்துழைப்புத் துறை" அமைக்க முடிவு செய்துள்ளது. முதலீட்டை மேம்படுத்துதல், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் குடியுரிமை பெறாத இந்தியர்களின் நலனுக்காக மாநில அரசு எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளை ஒழுங்குப்படுத்துவதற்கும் கவனம் செலுத்துவதற்கும் வெளிநாட்டு ஒத்துழைப்புத் துறை அமைக்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஹரியானா மாநில அரசு பஞ்சாயத்துகள் கிராமபுறங்களில் மதுவை தடை செய்ய அதிகாரம் வழங்கியுள்ளது

- ஹரியானா அரசாங்கம் தனது அதிகார எல்லைக்குள் மதுபான விற்பனையைத் தடை செய்ய கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் வழங்க முடிவு செய்துள்ளது.
- இது சம்பந்தமாக, ஹரியானா பஞ்சாயத்துராஜ் சட்டம் 1994இன் பிரிவு 31இல் திருத்தத்தை கொண்டுவர கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டது, கிராம சபைக்கு (கிராமத்தில் வாக்காளர்களின் உள்ள குழு) அதிகாரங்களை பகிர்ந்தளிக்க அனுமதிக்கிறது.
- முதலமைச்சர் மனோகர் லால் கட்டர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

12வது நகர்ப்புற மொபைலிட்டி இந்திய மாநாடு

- 12வது நகர்ப்புற மொபிலிட்டி இந்திய மாநாடு மற்றும் கண்காட்சி 2019 உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள லக்னோவில் நவம்பர் 15 முதல் 17 வரை நடைபெற்றது.
- நகர போக்குவரத்து நிறுவனம் மற்றும் நகர மேம்பாட்டுத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டின் மையக்கருத்து Accessible and Civeable cities என்பதாகும்.

டிசம்பர் 1-ம் தேதி முதல் ஃபாஸ்டேக் கட்டாயம்

- தேசிய நெடுஞ்சாலையில் பயணிக்க வாகனங்களுக்கு வருகிற டிசம்பர் ஒன்றாம் தேதி முதல் ஃபாஸ்ட்டேக் கட்டயமாக்கப்பட்டுள்ளது. ஃபாஸ்ட்டேக் (NETC - National Electronic Toll Collection) programme) வசதியில்லாத வாகனங்கள், பாஸ்டேக் தடத்தின் வழியே சென்றால், இரண்டு மடங்கு கட்டணம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ரேடியோஃப்ரீக்குவென்சிஐடன்டிஃபிகேஷன்
- ரேடியோ ஃப்ரீக்குவென்சி ஐடன்டிஃபிகேஷன் (RFID) என்ற தொழில்நுட்பத்தில் இயங்கக்கூடிய ஸ்டிக்கர் ஆகும். சுங்கச்சாவடியில் வாகனத்தில் ஒட்டப்பட்டிருக்கும் இந்த ஸ்டிக்கர் ஸ்கேன் செய்யப்படும்.

ஆக்ராவின் பெயரை மாற்ற உத்தரப்பிரதேச அரசு திட்டம்

- ஆக்ராவின் பெயரை அக்ரவன் என மாற்ற உத்தரப்பிரதேச அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
- ஆக்ரா உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ளது. ஆக்ரா நகரம், யமுனை ஆற்றின் கரையில் இருக்கும் இந்நகரில்தான், உலகப் புகழ்ப்பெற்ற தாஜ்மஹால் அமைந்துள்ளது.
- இது யுனெஸ்கோவால் பண்பாட்டுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த நகரத்தின் பெயரை மாற்ற உத்தரப்பிரதேச அரசு முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.
- அந்த மாநிலத்தில், முகல் சாராய் (Mughal Sarai) நகர், பண்டித தீனதயாள் உபாத்யாய் நகர் எனவும் அலகாபாத் பிரயாக்ராஜ் என்றும், ஃபைசாபாத்தை ஆயோத்யா என்றும் பெயர் மாற்றப்பட்டது. இப்போது ஆக்ரா பெயரையும் மாற்ற அம்மாநில அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் (3S) திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசு திட்டம்

- உலக சுகாதார அமைப்பின் மூன்று திட்டங்களான ஸ்மார்ட், பாதுகாப்பு, கண்காணிப்பு *(Smart Security Surveillance of WHO)* நாட்டில் விரிவுபடுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்தவும், முன்னுரிமை மருந்துகளின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும் இந்த விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மூன்று எஸ் திட்டம்

- நாட்டில் தடுப்பூசிகள் குறித்த பாதுகாப்பு தரவுகளை கருத்தில் கொண்டு இந்த திட்டத்தை உலக சுகாதார அமைப்பு இந்தியாவில் அறிமுகப்படுத்துகிறது.
- 3 எஸ் திட்டத்தின் கீழ் இந்தியா தற்போது ரோட்டா வைரஸ் தடுப்பூசிகளை மதிப்பீடு செய்து வருகிறது.
- 3 எஸ் திட்டத்தின் முக்கிய பங்குதாரர்களில் சுகாதார அமைச்சகம் மற்றும் மத்திய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவை அடங்கும்.
- 3 எஸ் திட்டத்தின் கீழ் 2022-ஆம் ஆண்டிற்குள் அனைத்து மாநிலங்களுக்கும் பி.சி.வி. *(PCV –Pneumonal Conjugate Vaccine)* விரிவுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு & காஷ்மீர் Back to Village Programme

- ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேச ஆளுநர் *"Back to Village Programme"* என்ற திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்கி வைத்தார். பஞ்சாயத்துகளின் அதிகாரம் மற்றும் வளர்ச்சியை நோக்கமாக கொண்டுள்ளது.
- பயனாளிகள் சார்ந்த திட்டங்களின் 100% பாதுகாப்பு மற்றும் மக்களின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்த உத்வேகம் அளிக்கிறது.

"Aao School Chalein"

- ஜம்முவில் அரசு பள்ளிகளில் சேர்க்கை அதிகரிப்பதற்காக பள்ளி கல்வி இயக்குநரகம் *"ஆவோ பள்ளி சலீன்"* என்ற பதாகையின் *(Banner)* கீழ் சிறப்பு சேர்க்கை இயக்கத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- அரசுப் பள்ளிகளில் சேர்க்கை அதிகரிப்பதைத் தவிர, 3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளை மழலையர் பள்ளியில் *(Pre Schooling)* சேர்க்கை அதிகப்படுத்துவதையும் ஊக்குவிக்கிறது.
- ஜம்முவில் அனைத்து மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையில் அரசுப் பள்ளிகள், கிராமங்களில் உள்ள குழந்தைகளைச் சிறப்பு சேர்க்கை இயக்கம் நடத்தப்படும் என்று பள்ளி கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் "மூன்றாம் நடுவர்" ஆர்.டி.பி.சி.ஆர். இயந்திரங்களை நிறுவிய முதல் நகரம் கொல்கத்தா

- மாநிலத்தின் பொது சுகாதாரத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சியில் கொல்கத்தா மாநகராட்சி டெங்கு, காசநோய் மற்றும் பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களை விரைவாக கண்டறிவதற்காக இந்தியாவில் முதன்முறையாக *Reserve Transcription Polymerase Chain Relation Machines* இயந்திரங்களை நிறுவியுள்ளது.

ஆர்.டி-பி.சி.ஆர் இயந்திரம்

- கொல்கத்தா நகரம் தொடர்ந்து கொசுக்கள் பரவும் நோய்களை அதிகரித்து வருவதால், ஆர்.டி–பி.சி.ஆர் இயந்திரங்கள் மூலம் டெங்கு போன்ற நோய்க்கான மூல காரணங்களை அடையாளம் காண கொல்கத்தா மாநகராட்சி இலக்கு கொண்டுள்ளது.
- நோய்க்கான சரியான காரணத்தைக் கண்டறிய இரத்த பரிசோதனைகள் குறித்த துல்லியமான டி.என்.ஏ அறிக்கையை வழங்குவதே இதன் நோக்கம்.

அருந்ததி திட்டத்தின் கீழ் ஒரு டோலா தங்கம் வழங்கத் திட்டம் : அசாம்

- மணப்பெண்களுக்கு ஒரு டோலா தங்கத்தை அருந்ததி திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்க அசாம் மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவை கூட்டம் கௌஹாத்தியில் நடைபெற்றது. இதன் மூலம் சமூகத்தில் பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவுகளை சேர்ந்த மணப்பெண்களுக்கு 1 டோலா தங்கம் (11.66 கிராம்) இலவசமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- குழந்தை திருமணத்தை தடுக்கவும், 21 வயது அடையும் முன் திருமணம் செய்வதை தடுக்கவும், அசாம் மாநில சிறப்பு திருமணச் சட்டம் 1954 கீழ் பதிவு செய்வதையும் ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கி, ஆண்டு 5 லட்சம் கீழ் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இந்த திட்டம் கீழ் பயனடைய தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் 9வது குடியிருப்பு சந்தை புதுடெல்லி

- நைட்பிராங்கின் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின் படி உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் ஒன்பதாவது பிரதம குடியிருப்பு சந்தையாக (9th Prime Residential Market) டெல்லி உள்ளதாக தெரிவித்துள்ளது. இப்பட்டியலில் மும்பை 28வது இடத்தில் உள்ளது. நாட்டின் நிதி மூலதனம் ஆண்டுக்கு 0.8 சதவீதம் உயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளது. இருப்பினும் பெங்களூரு ஐந்து இடங்கள் சரிந்து 20வது இடத்திற்கு வந்துள்ளது. ஆண்டுக்கு விலை 2.1 சதவீதம் உயர்ந்துள்ளது.

உலகளாவிய உயிரி-இந்தியா மாநாடு

- உயிரி-இந்தியா மாநாடு (Global Bio-India Summit) முதல் முறையாக டெல்லியில் நடைபெறுகிறது. மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப, புவி அறிவியல் மற்றும் சுகாதார குடும்பநல அமைச்சகம் ஹர்ஷவர்தன் தொடங்கி வைத்தார்.
- இதில் 30 நாடுகளை சேர்ந்த பங்குதாரர்கள் 250 தொழில்முனைவோர், 200 காட்சியாளர்கள் பங்கேற்றனர். இது முதல் முறையாக இந்தியாவில் நடைபெற்ற மிகப்பெரிய உயிரி தொழில்நுட்ப பங்குதாரர்களின் கூட்டமைப்பாகும்.
- இதில் இந்தியாவில் உயிர் தொழில் நுட்பத்தில் முதலீடுகளை ஈர்க்கவும், இந்தியாவின் உயர்தொழில் நுட்பங்களின் சாதனைகள் காட்சிப்படுத்தவும் உள்ளது

புதிய உலகளாவிய செழிப்பு குறியீடு

- உலகளாவிய செழிப்பு குறியீடு பட்டியலில் இந்தியாவின் பெங்களூர் நகரம் 83ஆவது இடத்தில் உள்ளது. பொருளாதாரம் மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு உலகளவில் 133 நகரங்களில் இந்தியாவில் பெங்களூர் நகரம் மட்டும் முதல் நூறு இடங்களில் உள்ளது.
- டெல்லி மற்றும் மும்பை நகரம் 101 மற்றும் 107 ஆவது இடத்தில் உள்ளது. பில்பாவோ நகரம் 20வது இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் சுவிட்சர்லாந்த் நாட்டின் சூரிச் நகரம் முதல் இடத்தில் உள்ளது.
- உலக மக்கள் தொகையில் 96% மற்றும் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 99% உள்ளடக்கிய 149 நாடுகளின் வருடாந்திர தரவரிசை குறியீடாகும்.

முதல் இந்திய செய்தித்தாள் : அருணாச்சலப் பிரதேசம்

- அருணாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் பேமா காண்டு மாநிலத்தின் முதல் ஹிந்தி செய்தித்தாள் "அருண் பூமி" தொடங்கி வைத்தார்.
- இந்தி பேசும் மற்றும் படிக்கும் மக்கள் கொண்ட அருணாச்சலப் பிரதேச மாநிலம் குறித்த செய்திகள் தகவல்கள் இச்செய்திதாள்கள் மூலம் பெறுவார்கள் என தெரிவித்தார்.

2018-ல் மணிக்கு 53 சாலை விபத்துகள் 17 மரணங்கள் : அரசு ஆண்டறிக்கையில் தகவல்

- *2018-ல் சாலை விபத்துக்களில் மட்டும் சுமார் 1.5 லட்சம் பேர் மரணமடைந்துள்ளதாகவும் கடந்த ஆண்டை விட இது 2.4% அதிகாித்துள்ளதாகவும் மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தொிவிக்கப்பட்டுள்ளது.*
- *மாநிலங்களில் தமிழகம் சாலை விபத்துச் சம்பவங்களில் முதலிடம் வகிக்கிறது. மொத்த விபத்துக்களில் 13.7%தமிழ்நாட்டில் நடக்கிறது. இதற்கு அடுத்த இடத்தில் மத்தியப் பிரதேசம் (11%), உ.பி. (9.1%), என்று அரசு ஆண்டறிக்கையில் தொிவிக்கப்பட்டுள்ளது.*

நியூஜென் மொபிலிடி மாநாடு

(NuGen Mobility Summit 2019)

- *நியூஜென் மொபிலிடி மாநாடு ஹரியானா மாநிலம் மனேசர் என்ற இடத்தில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டிற்கு தானியங்கி தொழில் நுட்பத்திற்கான சர்வதேச மையம் (ICAT) ஏற்பாடு செய்திருக்கிறது.*
- *இதன் மையக்கருத்து "Smart & Green Mobility" என்பதாகும். வாகனங்களில் இருந்து வெளியேறும் மாசுகளை கட்டுப்படுத்துவது, தீர்வு விளைவிக்கும் மாசுகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது போன்ற தீர்வுகள் காண உள்ளது.*
- *மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தொடங்கி வைத்தார்.*

மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக மொபைல் செயலி

- *மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பயன்படும் வகையில் புதிய செயலி உருவாக்கப்படும் என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.*
- *நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 18 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. "வரும் 2021 ஆம் ஆண்டு நாடு முழுவதும் 16 இந்திய மொழிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இரண்டு கட்டமாக நடத்தப்பட உள்ள பணிகளுக்காக 8,754 கோடி ரூபாய் ஒதுக்கும்படி மத்திய அரசுக்கு செலவின நிதிக்குழு பாிந்துரை அளித்துள்ளது.*
- *மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக தனி மொபைல் செயலி உருவாக்கப்படும்.*

உலகின் முதல் முஸ்லீம் யோகா முகாம்

- *உலகின் முதல் முஸ்லீம் யோகா முகாம் உத்காண்ட் மாநிலம் கோத்வார் நகரில் உள்ள கன்வா ஆஸ்ரம் என்ற இடத்தில் நடைபெறுகிறது.*

யோகா முகாம்

- *யோகா பயிற்சி செய்வதால் ஏற்படும் ஆரோக்கிய நன்மைகளைப் பற்றி இம்முகாமில் தெரிவிக்கப்படுகிறது. யோகா ஒருவரின் இதயம், மனம், எண்ணங்களை ஒரு நிலைப்படுத்த உதவுகிறது.*

பங்கேற்றவர்கள்

- *வெவ்வேறு நாடுகளில் இருந்து 500 முஸ்லீம் ஆண் மற்றும் பெண்கள் பங்கேற்றனர்.*

உலகளாவிய புத்தத்துறவிகள் கூட்டம்

- *உலகளாவிய புத்த துறவிகள் கூட்டம் நக்சென்வன், அவுரங்கபாத், மகாஷ்டிராவில் மூன்று நாட்கள் நடைபெற்றது.*
- *தொடக்க விழாவில் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா மற்றும் இலங்கையைச் சேர்ந்த மகாநாயக தீரோ முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைமை அமைப்பாளரும் மாநில கைத்தொழில் துறையின் அபிவிருத்தி ஆணையர் டாக்டர் ஹர்ஷ்தீப் காம்பிள் தொடங்கி வைத்தார்.*

சோவா-ரிக்பாவுக்கான தேசிய நிறுவனம்

- மத்திய அமைச்சரவை யூனியன் பிரதேசமான லடாக்கில் சோவா-ரிக்பாவுக்கான தேசிய நிறுவனம் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி பெற்ற நிறுவனமாகும்.
- முதன்மையான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பாரம்பரிய மருத்துவத்தின் சோவா-ரிக்டாஅமைப்பில் இடைநிலைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ளவும், பல்வேறு மருத்து முறைகளை ஒருங்கிணைக்கவும் ஊக்குவிக்கிறது.

சோவா - ரிக்பா

- இது பொதுவாக திபெத்திய மருத்துவ முறை என்று அழைக்கப்படுகிறது. இது உலகின் பழமையான மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட மருத்துவ பாரம்பரியங்களில் ஒன்றாகும்.

இரண்டாவது தெற்காசிய பாதுகாப்பு மாநாடு

- பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி டெல்லியில் இரண்டாவது தெற்காசியப் பாதுகாப்பு மாநாட்டை த்தொடங்கி வைத்தார்.
- தனிநபர்களும், சமூகங்களும் டிஜிட்டல் உலகில் இணைக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பு பிரச்சனையை முன்னிலைப்படுத்த தெற்காசிய பாதுகாப்பு உச்சி மாநாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தெற்காசிய ஆசியா பாதுகாப்பு மாநாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் மற்றும் *facebook* ஏற்பாடு செய்தது. இதில் *"We Think Digital"* என்ற இணையத்தளம் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த இணைய தளம் ஒரு ஆன்லைன் கல்வி போர்டல் ஆகும்.

போடோ அமைப்புக்கு மேலும் 5 ஆண்டுகள் தடை

- அசாம் மாநிலத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் போடோ பயங்கரவாத இயக்கத்தை சட்டவிரோத அமைப்பாக அறிவித்து கடந்த *1990*-ம் ஆண்டு அந்த இயக்கத்துக்கு மத்திய அரசு *5* ஆண்டுகள் தடைவிதித்தது. அப்போது முதல் ஒவ்வொரு *5* ஆண்டுகளுக்கும் அந்த தடை நீட்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் போடோ பயங்கரவாத இயக்கம் மீதான தடையை மேலும் *5* ஆண்டுகளுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.
- *"*போடோ பயங்கரவாத இயக்கம், கொலை மற்றும் மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட வன்முறை நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதோடு, தேசவிரோத சக்திகளுடன் இணைந்து ஒருமைப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தி வருகிறது. எனவே அந்த இயக்கத்துக்கு தடைவிதிக்க வேண்டியது அவசியமாகிறது*"* என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஒடிஸா : பள்ளி மாணவர்கள் குடிநீர் அருந்துவதற்கான திட்டம் அறிமுகம்

- பள்ளி மாணவர்கள் போதுமான குடிநீர் அருந்துவதை உறுதி செய்யும் வகையில் ஒடிஸா மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மணியடித்து நினைவுறுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த முயற்சி குழந்தைகளிடையே தண்ணீர் அருந்துவதை ஒரு பழக்கமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த முயற்சி முதன் முதலாக கேரளத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் கர்நாடகம், தெலங்கானாவிலும் செயல்படுத்தப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலும் இதனை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஜம்மு&காஷ்மீர் நாட்டின் மிக அதிக நீளமான சாலைகள்

- ஜம்மு & காஷ்மீர் நாட்டின் மிக அதினமான சாலை நீளத்தை பெற்றுள்ளது. இது மைய கிராமப்புற சாலைகள் திட்டத்தின் கீழ் 1838 வாழ்விடங்களை உள்ளடக்கிய சுமார் 11400 கிலோ மீட்டர் தூரத்தை நிறைவு செய்துள்ளது.
- மத்திய நிதியுதவி பெற்ற பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனாவின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது கிராமப்புறங்களுக்கு இணைப்பு வழங்கும் முக்கிய நோக்கமாகும்.

பிரதம மந்திரி கிராம் சதக் யோஜனா:

- இந்தியாவில் மலைவாழ் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதி, பாலைவனப் பகுதி, குக்கிராமங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் 2007-ம் ஆண்டுக்குள் சாலை வசதியை ஏற்படுத்தித் தரும் நோக்கில், மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 2000-ம் ஆண்டில் "பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். முழு அளவில் மத்திய அரசின் நிதியிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எட்டாவது சர்வதேச சுற்றுலா கண்காட்சி

- எட்டாவது சர்வதேச சுற்றுலா கண்காட்சி மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் நடைபெற்றது. மத்திய சுற்றுலாத் துறை சுற்றுலா அமைச்சகத்தால் வடகிழக்கு மாநிலங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இதன் மையக்கருத்து - *'Sustainable Tourism an engine for Economic Growth and Employment'.*
- சர்வதேச சுற்றுலா கண்காட்சியை மணிப்பூர் இரண்டாவது முறையாக நடத்துகிறது. இதற்கு முன்பு கௌஹாத்தி, தவாங், ஷிலாங், காங்டாக், அகர்தாலா ஆகிய இடங்களில் நடைபெற்றது.

மகாராஷ்டிரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ரத்து

- மகாராஷ்டிரத்தில் அமலில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி நவம்பர் 23 அன்று ரத்து செய்யப்பட்டது. இதுதொடர்பான அறிவிக்கையை உள்துறை அமைச்சகம் வெளியிட்டது.
- *'மகாராஷ்டிரத்தில் அரசமைப்புச் சட்டத்தின் 356-ஆவது பிரிவின்படி கடந்த 12-ஆம் தேதி அமல்படுத்தப்பட்டிருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி 23-ஆம் தேதியுடன் ரத்து செய்யப்படுகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

ஐம்பதாவது ஆளுநர்கள் மாநாடு

- மாநில ஆளுநர்கள், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்கள் ஆகியோருக்கான 50-ஆவது மாநாடு தில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் தொடங்கியது. இந்த 2 நாள் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார்.
- அரசமைப்புச் சட்ட நடைமுறைகளைச் செயல்படுத்துவதில் ஆளுநர்கள், துணைநிலை ஆளுநர்களின் பணி மிகவும் அவசியமானது.
- முக்கிமாக, கூட்டாட்சித் தத்துவத்தை மேம்படுத்துவதிலும், நாட்டின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதிலும் அவர்களின் பங்கு இன்றியமையாதது என்று தெரிவிக்கப்பட்டது.

கலாபுரகி விமான நிலையம்

(Kalaburagi Airport)

- கர்நாடக மாநில முதலமைச்சர் எடியூரப்பா உதான் திட்டத்தின் கீழ் பெங்களூரு-ஹைதராபாத் (கர்நாடகா பிராந்தியம்) இடையேயான விமான சேவையை – கலாபுரகி விமான நிலையத்தில் தொடங்கி வைத்தார்.
- மத்திய அரசின் உதான் திட்டத்தின் கீழ் ரூ.176 கோடி செலவில் இந்த கலாபுரகி விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

7 சர்வதேச நிகழ்வு

ஆசியான் நாடுகளுக்கு வடகிழக்கு மாநிலங்கள் நுழைவுவாயில்

- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) - இந்தியா இடையேயான 16-ஆவது உச்சி மாநாடு தாய்லாந்தில் நடைபெற்றது.
- கிழக்கு ஆசியா அமைப்பின் 14-ஆவது உச்சி மாநாடும், ஆசியான் நாடுகள், இந்தியா, சீனா உள்ளிட்ட 16 நாடுகளிடையே தடையற்ற வர்த்தகத்தை ஏற்படுத்தும் நோக்கில் உருவாகவுள்ள "பிராந்திய அளவிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு (ஆர்சிஇபி)' ஒப்பந்த மாநாடும் அங்கு நடைபெறுகிறது.
- இவற்றில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி தாய்லாந்து தலைநகர் பாங்காக்குக்கு சென்றடைந்தார். தாய்லாந்துக்கு பிரதமர் மோடி அரசு முறைப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களே தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான ("ஆசியான்') நுழைவு வாயில் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். அந்த மாநிலங்களில் வளர்ச்சிப் பணிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழில் திருக்குறள் வாசித்த பிரதமர்!

- தாய்லாந்தில் இந்தியர்களிடையே உரை நிகழ்த்திய பிரதமர் மோடி, தாய்லாந்து மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை வெளியிட்டார்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" - இது திருவள்ளுவரின் ஒரு குறள். (தமிழில் திருக்குறளை வாசித்தார்). இக்குறளுக்கு, "ஒப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருள் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும்" என்பது பொருளாகும்.

- இந்தியர்களின் வாழ்க்கைமுறை இவ்வாறுதான் அமைந்துள்ளது என்றார் பிரதமர் மோடி. அவர் குறிப்பிட்ட குறளானது இல்லறவியல் அதிகாரத்தில் 212-ஆவது குறளாக அமைந்துள்ளது. பிரதமர் மோடி தனது உரையை, "வணக்கம்' என்று தமிழ் உள்ளிட்ட பல இந்திய மொழிகளில் பேசி தொடங்கினார்.

ஷார்ஜா சர்வதேச புத்தக கண்காட்சி 2019

- ஷார்ஜா சர்வதேச புத்தக கண்காட்சி (எஸ்ஐபிஎஃப்) 2019 இன் 38வது பதிப்பை உச்சி கவுன்சில் உறுப்பினரும் ஷார்ஜாவின் ஆட்சியாளருமான ஷெக் டாக்டர் சுல்தான் பின் முஹம்மது அல் காசிமி திறந்து வைத்தார்கள்.
- 77 நாடுகளைச் சேர்ந்த 1800 கண்காட்சியாளர்கள் கண்காட்சியில் பங்கேற்கின்றனர்.
- இந்த கண்காட்சியில் விஞ்ஞான, அறிவு மற்றும் இலக்கியம் வழங்கும் 987 செயல்பாடுகள் காண்பிக்கப்படும்
- ஷார்ஜா உலக புத்தக கண்காட்சி "மையக்கருத்து "Open Books Open Minds'.

வறுமை ஒழிப்பு : நோபல் பரிசு வென்ற அபிஜித்தின் அமைப்புடன் ஒடிஸா அரசு ஒப்பந்தம்

- பொருளாதாரத்தில் நோபல் பரிசு வென்ற அமெரிக்கவாழ் இந்தியரான அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டஃப்லோ ஆகியோரின் ஜமீல் - வறுமை ஒழிப்பு ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து செயல்பட ஒடிஸா அரசு முடிவு செய்துள்ளது.
- ஏழைகள், பெண்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்காகவும் ஊட்டச்சத்து பற்றாகுறையைப் போக்குவதற்காகவும் அந்த நிறுவனம், ஒடிஸாவின் 8 மாவட்டங்களில் பணிபுரியவுள்ளது. இதற்காக இந்த அமைப்பும், ஒடிஸா அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளன.
- ஒடிஸாவை மாற்றியமைப்பதற்கான திட்டமான ஐந்து அம்சத் திட்டத்தின்கீழ் அந்த அமைப்புடன் மாநில அரசு இணைந்து பணியாற்றவுள்ளது.

சிங்கப்பூரில் உலகின் முதல் பிளாக்செயின் தொழில்நுட்ப கார்பன் வர்த்தக மாற்று மையம்

- சிங்கப்பூரைச் சேர்ந்த ஏர் கார்பன் என்ற நிறுவனம் உலகின் முதல் பிளாக்செயின் அடிப்படையில் கார்பன் வர்த்தக பரிமாற்றத்தை துவங்கியுள்ளது.
- சர்வதேச வானூர்தி அமைப்பின் ஒப்புதலை பெற்றுள்ள இந்த முறையில் நிறுவனங்கள் தங்களுக்கு வேண்டிய அளவில் டோக்கன் முறையில் பெற்றுக் கொள்ள இயலும்.

ஜப்பான் : யுனெஸ்கோ பாரம்பரிய சின்னம் தீயில் எரிந்தது

- ஜப்பானில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஷூரி கோட்டையில் ஏற்பட்ட தீவிபத்தில் அதன் பெரும் பகுதி எரிந்து நாசமானது.
- ஜப்பானின் ஒகினாவா பகுதி கலாசாரத்தின் அடையாளமாகக் கருதப்படும் ஷூரி கோட்டை பாரம்பரியம் மிக்க பகுதியாகும்.

உணவு மற்றும் விவசாயத்திற்கான தாவர மரபணு வளர்ச்சிக்கான சர்வதேச ஒப்பந்தம்

- இத்தாலி நாட்டின் ரோம் நகரில் உணவு மற்றும் விவசாயத்தில் தாவர மரபணு வளர்ச்சிக்கான சர்வதேச ஒப்பந்த கூட்டத்தில் இந்தியா கலந்து கொண்டது.
- இந்தியா சார்பில் வேளாண்மைத்துறை அமைச்சர் ஸ்ரீ நரேந்திரதோமர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- இந்த ஒப்பந்தத்தின் மூலம் உயிரியியல் பன்முகத் தன்மையில் இணக்கமான சூழலை ஏற்படுத்துவதாகும்.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வினால் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது.

ஒப்பந்தத்தை பற்றி

- தாவர மரபணு வளர்ச்சி ஒப்பந்தம் ''விதைகள் ஒப்பந்தம்'' எனவும் அறியப்படுகிறது.
- உலக அளவிலான தாவர ஜீன்கள் பரிமாற்றத்தின் மூலம் உலகின் உணவு தேவையை உறுதி செய்வதே ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- மேலும் நீடித்த மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட வகையில் விதைகளை பயன்படுத்துதல்.

நியூஸிலாந்து : கருணைக் கொல்லைக்கு அனுமதி

- தீராநோயால் அவதியுறுபவர்களை கருணைக் கொலை செய்வதற்கு சட்டஅங்கீகாரம்வழங்கும்மசோதா நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவைப் பொருத்த வரை, மருத்துவர் அல்லது செவிலியின் உதவியுடன் தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்கப்படும் நோயாளி, தீர்க்க முடியாத வியாதி கொண்டவராகவும், இன்னும் 6 மாதங்களில் அவர் நிச்சயம் இறந்துவிடுவார் என்ற நிலையும் இருக்க வேண்டும் என்பது போன்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது உலக மதத் தலைவர்கள் மாநாடு

- இரண்டாவது உலக மதத் தலைவர்கள் மாநாடு அஜெர்பை ஜான் நாட்டின் பாக்கு *(Baku)* என்ற இடத்தில் நடைபெற்றது. இம்மாநாடு நவம்பர் *14* முதல் *15* வரை நடைபெற்றது.
- பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் மனித ஒற்றுமை போன்ற மனித மதிப்பீடுகளின் மதங்களுக்கு இடையிலான உரையாடல், ஊக்குவிப்பு மற்றும் பரிணாம வளர்ச்சிக்கு பங்களிப்பதை உச்சி மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

19வது இந்திய பெருங்கடல் ரிம் சங்கம் அமைச்சர்கள் மாநாடு

- *19வது* இந்திய பெருங்கடல் ரிம் சங்க கவுன்சில் அமைச்சர்கள் சந்திப்பு, அபுதாபியில், ஐக்கிய அரபு எமீரெட்டில் நடைபெற்றது. *22* நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். ஐக்கிய அரபு எமீரெட்ஸ் இச்சந்திப்பிற்கு தலைமை தாங்குகிறது.
- *2019-21* காலகட்டத்தில் பங்களாதேஷின் உதவியுடன் ஐக்கிய அரபு அமீரகம் தலைமை வகிக்க உள்ளது. மையக்கருத்து *2019: Promoting a shared destiny and path to prosperity in Indian Ocean.*

19வது ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு அரசு தலைவர்கள் கவுன்சில் மாநாடு

- *19*வது ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் அரசாங்க தலைவர்கள் கவுன்சில் மாநாட்டை, *2020*ஆம் ஆண்டு இந்தியா நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் விளாடிமீர் நேரோவ் தெரிவித்தார்.
- சீனா தலைமையிலான எட்டு உறுப்பினர்களின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு முகாமின் உயர் மட்டக் கூட்டத்தை இந்தியா நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு

- எஸ்சிஒ *(SCO)* அமைப்பில், இந்தியா, சீனா, ரஷியா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய எட்டு நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த அமைப்பில், கடந்த *2017*-இல் இந்தியாவும், பாகிஸ்தானும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் மாநாடு

- இந்த அமைப்பின் மாநாடு இரண்டு வகைகள் ஆகும். ஒன்று மாநிலத் தலைவர்களின் உச்சி மாநாடு மற்றொன்று அரசாங்க தலைவர்களின் உச்சி மாநாடு ஆகும்.
- இந்த மாநாடுகளை உறுப்பு நாடுகள் இணைந்து ஏற்பாடு செய்கின்றன. சமீபத்தில் அரசாங்க தலைவர்கள் மாநாடு தாஸ்கண்ட் என்ற இடத்தில் நடைபெற்றது.

இந்தியா - ஜப்பான் இடையேயான கடற்படை சுரங்க பயிற்சி

- நவம்பர் *23-2019* இந்தியா கடற்படை மற்றும் ஜப்பானிய கடற்படைகளுக்கு இடையேயான முதல் கடற்படை சுரங்க பயிற்சி நடைபெற்றது.

ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மாட்ரிட் Cop 25 மாநாடு நடத்துகிறது

- வருடாந்திர கட்சிகளின் மாநாடு *(Cop)* மாநாடு வரும் டிசம்பர் *2*இல் தொடங்கி *13*வரை ஸ்பெயின் நாட்டின் தலைநகரான மாட்ரிட் நகரில் நடைபெற உள்ளது. *200* உறுப்பு நாடுகளை கொண்ட சி.ஓ.பி. தற்போது உள்ள உலகின் வெப்பமயமாதல் காலநிலைகள் பற்றி கலந்தாலோசிக்க உள்ளது.

இந்திய ரயில்வேயின் மிகப்பெரிய அன்னிய நேரடி முதலீடு திட்டம்

- இந்திய –பிரெஞ்ச் நாடுகளுக்கு இடையே இந்திய ரயில்வேத் துறையில் மிகப்பெரிய அன்னிய முதலீட்டு திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இதற்காக இந்திய இரயில்வே மற்றும் அல்ஸ்டோம் நிறுவனங்கள் இணைந்து மேம்பட்ட சேவையை வழங்குவதற்காக செயல்பட உள்ளது.
- மதேப்புரா மின்சார இரயில் இன்ஜின் நிறுவனம் உருவாக்கப்பட்டு -800க்கும் மேற்பட்ட சேவையை வழங்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.
- பீகாரில் மதேபூரில் அமைய உள்ள இந்த ஆலையில் ஆண்டிற்கு 120 இன்ஜின்கள் உற்பத்தி செய்யப்படும்.

கர்ப்பிணிகளை அரசுப் பணிகளில் நியமிக்கத் தடை

- இந்தோனேசியாவில் கர்ப்பிணிகள், மாற்றுத் திறனாளிகளை அரசுப் பணிகளில் நியமிக்க அந்த நாட்டில் பல்வேறு அமைச்சரகங்கள் தடை செய்துள்ளன.
- இந்த நிலையில், அந்த நாட்டு அரசு வெளியிட்டுள்ள ஆணையில் கர்ப்பிணிகள், மாற்று திறனாளிகள், ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஏராளமான துறைகளில் நியமனம் வழங்கப்படக் கூடாது. எனவும், அவர்களுக்குப் பதில் தகுதியான விண்ணப்பதாரர்களே அந்தப் பணிகளில் நியமிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.
- 26 கோடி மக்கள் வசிக்கும் இந்தோனோஷியாவில் அதிக அளவு முஸ்லிம் மக்கள்தொகையை கொண்ட நாடாகும்.
- பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் பயங்கரவாத நிதி தடுப்பு மாநாடு: மத்திய அமைச்சர் கிஷண் ரெட்டி பங்கேற்பு

- ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பயங்கரவாத நிதி தடுப்பு மாநாட்டில் மத்திய உள்துறை இணையமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி பங்கேற்க உள்ளார்.
- பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி கிடைப்பதைத் தடுப்பது உள்ளிட்டவற்றை விரிவாக எடுத்துரைக்கும் 'பயங்கரவாத நிதி தடுப்பு மாநாடு' ஆஸ்திரேலியாவில் வரும் டிசம்பர் 6-8 தேதி வரை நடைபெறவுள்ளது.
- இம்மாநாட்டில், தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ), 'ஐபி உளவு அமைப்பு, வெளியுறவு அமைச்சகம் உள்ளிட்டவற்றின் மூத்த அதிகாரிகள் அடங்கிய குழு பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைய சுதந்திரம் கொண்ட நாடுகளில் மோசமான நிலையில் சீனா: அமெரிக்க நிறுவனத்தின் ஆய்வில் தகவல்

- இணையம் மற்றும் டிஜிட்டல் ஊடக சுதந்திரம் கொண்ட நாடுகளில் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மிகவும் பின்தங்கி உள்ளதாகவும், இந்தியா முன்னேறி உள்ளதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- 'தி பிரிடம் ஹோம்' என்ற அமெரிக்க நிறுவனம், 'இணைய சுதந்திரம்-2019' என்ற ஆய்வை கடந்த சில மாதங்களுக்கு முன்பாக தொடங்கியது. மொத்தம் 65 நாடுகளில் அணுகுவதற்கான தடைகள், இணைய வரம்புகள், பயனர் உரிமை மீறல்கள் ஆகிய 3 தலைப்புகளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டது.
- உலகின் மிக மோசமான இணைய சேவையை கொண்ட நாடுகளில் பாகிஸ்தான் முதல் 10 இடத்தில் உள்ளது.

8 தமிழ்நாடு

ஒப்பந்த சாகுபடி செய்யும் விவசாயிகள் நலன் காக்க புதிய சட்டம்

- ஒப்பந்த அடிப்படையில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளின் நலன்களைக் காப்பதற்கு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவிலேயே முதல்முறை:

- தமிழகத்தில் கரும்பு, இறைச்சிக் கோழி, மூலிகைப் பயிர்கள் போன்ற வகைகளில் சாகுபடி முறை பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளன.
- ஆனாலும், ஒப்பந்த சாகுபடியில் பங்குபெறும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க சட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. இதைக் கருத்தில் கொண்டு புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று முதல்வர் பழனிசாமி அறிவித்திருந்தார்.
- இதன்படி, தமிழ்நாடு வேளாண் விளைபொருள், கால்நடை ஒப்பந்தப் பண்ணையம், சேவைகள் ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல் சட்ட மசோதா பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. இந்த சட்டமானது அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.
- அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்தச் சட்டமும் எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படவில்லை. தமிழக அரசுதான் முதல் முதலாக தனிச் சட்டத்தை வடிவமைத்துள்ளது.

நன்மைகள் என்னென்ன:

- இந்தப் புதிய சட்டத்தால் விவசாயிகளுக்கு எந்தவித பொருள் அல்லது பண இழப்பும் ஏற்படாது. முன்னரே ஒப்பந்தம் செய்யப்பட்ட விலையில் பொருள்கள் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ஒப்பந்த பண்ணைய சாகுபடி முறையால் விவசாயிகளுக்கும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்கும் இடையே நல்ல புரிதல் ஏற்படும். விதைப்பு காலத்துக்கு முன்பே விளைபொருள்களின் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், அனைத்துத் தொழில் நுட்பங்களையும் பின்பற்றி, அதன் மூலம் விளைச்சல் அதிகரித்து, விவசாயிகளுக்கு அதிக வருமானம் ஈட்டிட வாய்ப்பு ஏற்படும்.

1000 பள்ளிகளில் அடல் புத்தாக்க ஆய்வகம் அமைக்கப்படும்

- மாணவர்களை ஊக்கப்படுத்தவும், சிறந்த மாணவர்களை உருவாக்கவும் தமிழகத்தில் 1,000 பள்ளிகளில் தலா ரூ.20 லட்சம் மதிப்பில் அடல் புத்தாக்க ஆய்வகம் அமைக்கப்படும் என்றார் மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்.
- பள்ளி அளவில் மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை அதிகரிக்கவும், ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தவும் அமைக்கப்படும் "அடல் டிங்கர்" ஆய்வகம், ரோபோட்டிக் மற்றும் செயற்கை நுண்ணறிவை ஊக்குவிக்கும் வகையிலான நவீன உபகரணங்களுடன் உருவாக்கப்பட உள்ளது.

தமிழக பேருந்து துறையை சீரமைக்க ஜெர்மனி ரூ.1,580 முதலீடு

- தமிழகத்தில் பேருந்து துறையில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.1,580 கோடி வழங்கப்படவுள்ளது என ஜெர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்கல் தெரிவித்துள்ளார்.
- பருவ நிலை பாதுகாப்பு மற்றும் பசுமை நகர்ப்புற இயக்கம் ஆகியவற்றில் இந்தியாவும், ஜெர்மனியும் இணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளன. இணக்கமான சுற்றுச்சூழலை உருவாக்கிடும் வகையில் இந்தியாவில் பசுமை நகர்ப்புற இயக்கத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100 கோடி யூரோவை ஜெர்மனி முதலீடு செய்யவுள்ளது.
- மேலும், தமிழகத்தில் பேருந்து துறையில் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, மேலும் 20 கோடி யூரோவும் (ரூ.1,580 கோடி) வழங்கப்பட உள்ளது. பசுமை இயக்க செயல்திட்டம் மட்டுமின்றி, சுகாதாரம், வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் இந்தியாவுடன் இணைந்து செயல்பட ஜெர்மனி தயாராக உள்ளது.

நீர்ப்பாசனம் திட்டத்தை தமிழகம் விரிவுபடுத்துகிறது

- உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் 649.55 கோடி ரூபாய் செலவில் மேலும் 16 துணைப் படுகைகளை சேர்க்க மாநில அரசு அனுமதித்துள்ளது. முதல் கட்டத்தின் கீழ், 18 துணைப் படுகைகளில் பணிகள் நடந்து வருகின்றன. இதற்காக சுமார் 744 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- அயாகட் மற்றும் உணவு உற்பத்தியின் பாதுகாப்பு அதிகரிப்பதே திட்டத்தின் நோக்கம். 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கல் திட்டம்-II ஒருங்கிணைந்த-நீர்ப்பாசன விவசாய நவீனமயமாக்கல் மற்றும் நீர்நிலைகள் மறுசீரமைப்பு மேலாண்மை திட்டத்தின் தொடச்சியானது 2024 வரை தொடரும்.

ரெட் அட்லஸ் செய்திட்ட வரைபடம்



- துணை குடியரசுத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு, "ரெட் அட்லஸ் செயல் திட்ட வரைபடத்தை" வெளியிட்டார். இது சென்னையில் திறம்பட வெள்ளத்தைத் தணிக்க தமிழக அரசுக்கு உதவ பூமி அறிவியல் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு வகையான கணக்கீடு ஆகும். தமிழ்நாடு 2015ல் மிக மோசமான வெள்ளத்தை கண்டது.
- வெவ்வேறு மழைக்காலங்களுக்கான சாத்தியமான காட்சிகளைக் கொண்ட வரைபடம், வெள்ளத்தைத் தணித்தல், தயார்நிலை, செயல்பாடுகள் மற்றும் மேலாண்மை அம்சங்களை கொண்டுள்ளது.
- துணை ஜனாதிபதியால் தொடங்கப்பட்ட இந்த அட்லஸ் மற்றும் "கரையோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு பயன்பாடு (சி.எஃப்.எல்.ஓ.எஸ்-சென்னை)" ஆகியவை தடுப்பு உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கியது.

தகவல் தொழில்நுட்ப மாநாடு

- இந்திய தொழில் கூட்டமைப்பு, தமிழக அரசுடன் இணைந்து, 18வது தகவல் தொழில்நுட்ப மாநாடு மற்றும் கண்காட்சியை, 'கனெக்ட் - 2019' என்ற பெயரில், நவம்பர் 7, 8ல், சென்னையில் நடைபெற்றது.
- தேசிய மற்றும் சர்வதேச அளவில், தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், புதிய பரிணாமங்கள் குறித்து, இந்த கருத்தரங்கில் பிரதிநிதிகள் விவாதித்தனர்.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் கீழடி தொல்பொருள் கண்காட்சி

- மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில், கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பொருள்களின் கண்காட்சியை, முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்ற அகழாய்வில் 2,500 ஆண்டுகளுக்கு முன் அங்கு வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தற்போது, கீழடியில் அகழாய்வு நடைபெற்ற பகுதி மூடப்பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து, கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைக்கொண்டு மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் கண்காட்சி நடத்தப்படும் என்று அமைச்சர் க. பாண்டிய ராஜன் அறிவித்திருந்தார். அதன்படி, கீழடி தொல்லியல் பொருள் கண்காட்சி திறப்பு விழா நடைபெற்றது. இக்கண்காட்சியை, முதல்வர் சென்னையிலிருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

ரூ.450 கோடி முதலீட்டில் தமிழகத்தில் கோனே நிறுவனம் லிப்ட் தயாரிப்பு ஆலை திறப்பு

- லிப்ட் தயாரிப்பு நிறுவனமான கோனே, தமிழகத்தில் அதன் புதிய உற்பத்தி ஆலையை திறந்துள்ளது. ரூ.450 கோடி முதலீட்டில் 50 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் ஆசியப் பகுதியிலேயே மிகப் பெரிய ஆலையாக இது நிறுவப்பட்டுள்ளது.
- பின்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட கோனே நிறுவனம், 1984-ம் ஆண்டு முதல்இந்தியாவில் செயல்பட்டு வருகிறது. இந்திய அளவில் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்நிறுவனம், வங்கதேசம், இலங்கை, பூடான், நேபாளம் ஆகிய அண்டை நாடுகளுக்கு லிப்டுகளை ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிலையில் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்பதூரில் அதன் புதிய உற்பத்தி ஆலையை திறந்துள்ளது.

ஓட்டுநர் உரிமம் பெற கல்வி தகுதி தேவையில்லை போக்குவரத்து துறை உத்தரவு

- ஓட்டுநர் உரிமம் பெற குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெற வேண்டும் என்ற விதியை தமிழக போக்குவரத்துத் துறை நீக்கியுள்ளது.
- இந்தியாவில் 1939-ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப் பின்னர் 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் முதன்முறையாக மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டது. தமிழகத்தில் 1974-ஆம் ஆண்டு தமிழக அரசால் சில மோட்டார் வாகன விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டன.
- மோட்டார் வாகன சட்டத்திருத்த மசோதா 2017-ஆம் ஆண்டு மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டு, நிலைக்குழு அளித்த சில பரிந்துரைகளுடன் நிறைவேற்றப்பட்டது.
- சாலைப் போக்குவரத்து விதிமுறைகளைப் புதுப்பித்தல், சாலை பாதுகாப்பைப் பராமரித்தல், ஊழலை ஒழித்தல், சிறந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்காக இந்த சட்டத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.
- கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு இருந்து வந்த கல்வித் தகுதி தடை நீங்கி உள்ளது. இந்த விதிமுறை தற்போது தமிழகத்தில் அமலுக்கு வந்துள்ளதாக போக்குவரத்துத் துறை ஆணையர் சமயமூர்த்தி அறிவித்துள்ளார்.

செயற்கை பவளப் பாறைகளை ரூ.18 கோடியில் அமைக்க முடிவு

- கஜா புயல் பாதித்த மாவட்டங்களின் கடல் பகுதிகளில் ரூ.18 கோடி செலவில் செயற்கை பவளப் பாறைகளை அமைக்க மீன்வளத் துறை முடிவு செய்துள்ளது. மீன்கள் மற்றும் கடலிலுள்ள இதர உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும், இனப்பெருக்கதளமாகவும் செயற்கை பவளப்பாறை விளங்கி வருகிறது. எனவே, கடலில் மீன்வளத்தை மேம்படுத்த தமிழகம் முழுவதும் கடல்பகுதிகளில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இ-தோட்டம் உள்பட புதிய திட்டங்கள் வேளாண்மைத் துறைக்கு புதிய கௌரவம்

- இணைய வழி தோட்டம் உள்பட புதிய திட்டங்களைச் செயல்படுத்திய வேளாண்மைத் துறைக்கு நற்சான்று அளிக்கப்பட்டுள்ளது. 'ஸ்காச்' என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள நற்சான்றைப் பெற்ற வேளாண்மைத் துறையினருக்கு முதல்வர் பழனிசாமி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இணைய வழித் தோட்டம்

- வேளாண்மைத் துறையில் நுண்ணீர் பாசனத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், அதனைக் கண்காணிக்கவும் புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு மூலமாக, விவசாயிகள் பதிவு செய்வதில் இருந்து மானியம் விடுவிக்கும் வரையுள்ள பல்வேறு பணிகள் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் விளையும் தோட்டக்கலை பொருள்கள், நடவு பொருள்களை நுகர்வோர்கள், வணிகர்கள், இதர விவசாயிகளுக்கு இ-தோட்டம் என்ற இணையதளத்தின் மூலமாக விவசாயிகள் நிர்ணயிக்கும் விலைக்கு விற்பதற்கான இணை சந்தை தொடங்கப்பட்டுள்ளது. இத்தகைய முன்னோடித் திட்டங்களைத் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தியதால், 'ஸ்காச்' நிறுவனத்தின் நற்சான்றிதழ்கள் தமிழக வேளாண்மைத் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை ஊர்திகள் - 1962

- கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கான 'அம்மா அவசர சிகிச்சை ஊர்திகள்' திட்டத்தின் விரிவாக்கத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தொடக்கி வைத்தார்.
- கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்டம் கடந்த 2016-இல் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்தத் திட்டமானது காஞ்சிபுரம், மதுரை, நாமக்கல், திருச்சி, தஞ்சாவூர் ஆகிய 5 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம் அறிமுகம்

- தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளில் 'அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம் செயல்படுத்த ரூ.76 கோடியே 23 லட்சம் நிதி ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும், அதை வெளிக்கொணரவும் 2019-20 ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் ரூ.64 கோடியே 35 லட்சம் மதிப்பில் 'அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படும் என அறிவித்தார். கபடி, வாலிபால், கிரிக்கெட் அல்லது கால்பந்து விளையாட்டுகளில் ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகளை நடத்துதல், ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல், திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த 2019-20 ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

போட்டிகள் நடத்த

- கபடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட், பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகள் இவற்றில் ஏதேனும் 3 விளையாட்டுகளுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம், மாநில அளவில் போட்டிகளை நடத்தவும் ஆடுகளங்கள் அமைக்கவும் உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கவும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைக்கவும் ஒப்புதல் வழங்கப்படுகிறது.
- அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தின் கீழ் ஆடுகளம் அமைக்கும் பணிகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும், பேரூராட்சிகளின் பொதுநிதியில் இருந்தும், பொது நிதி வசதியில்லாத பேரூராட்சிகளில் இத்திட்டத்தின் சேமிப்பு நிதியில் இருந்தும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழிச் சாலை திட்டம்

- சென்னை-கன்னியாகுமரி இடையிலான தொழில் பெருவழிச் சாலை திட்டத்தின் தெற்கு, வடக்கு பகுதிகளுக்கு இடையேயான மின் இணைப்பை வலுப்படுத்த ஆசிய மேம்பாட்டு வங்கி $451 மில்லியன் (ரூ.3200 கோடி) கடன் உதவி வழங்கி உள்ளது.

சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழிச் சாலை திட்டம்

- ரூ.64.48 பில்லியன் மதிப்புள்ள இத்திட்டத்திற்காக தமிழக தொழில்துறை டவுன்ஷிப் பகுதி மேம்பாட்டு ஆணையை சட்டம் 1997 திருத்தம் செய்யப்பட்டது.
- தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக 9 புதிய தொழில் பூங்காக்கள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கென 19 ஆயிரத்து 615 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல, மதுரை - தூத்துக்குடி தொழில் வழிச் சாலைத் திட்டம் சென்னை - கன்னியாகுமரி தொழில் பெருவழிச்சாலைத் திட்டமாகச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, விரிவான மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 6 முனையங்களாகச் செயல்படுத்தப்படும். முதல்கட்டமாக மதுரை - திண்டுக்கல் -விருதுநகர் - தேனி மற்றும் தூத்துக்குடி - திருநெல்வேலி ஆகிய 2 முனையங்கள் செயல்படுத்தப்படும்.

கனெக்ட் 2019

- இந்திய தொழில் கூட்டமைப்பும் (சிஐஐ), தமிழக அரசும் இணைந்து 'கனெக்ட் 2019' மாநாடு சென்னையில் தொடங்கியது.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழக அரசின் ஒவ்வொரு துறையிலும் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளும் நல்ல பயன்களைத் தந்துள்ளன.
- நீதி ஆயோக் வெளியிட்ட அறிக்கைப்படி, இந்தியாவில் அதிக புதுமைகளைப் படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இரண்டாவது இடம் பெற்றுள்ளது.
- அனைத்து கிராமங்களுக்கு இணை சேவையைக் கொண்டு சேர்க்கும் வகையில், ரூ.1,815 கோடியில் "பாரத்நெட்" திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த உள்ளது. இதன் மூலம், தமிழகத்திலுள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகள் கண்ணாடி இழை கட்டமைப்பு மூலம் இணைக்கப்படும்.
- இந்தத் திட்டமானது அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

சென்னையில் விரைவில் மருந்து உற்பத்தி பூங்கா

- அதி நவீன மருந்து உற்பத்தி பூங்கா சென்னையில் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டில் சர்வதேச யோகா மையம்

- செங்கல்பட்டில் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையத்துக்கான அடிக்கல்லை முதல்வர் பழனிசாமி நாட்டினார்.
- திருப்பூர், தேன்கனிக்கோட்டை, ஓசூர், சிதம்பரம், காரைக்குடி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட புதிய மருத்துவமனை கட்டடங்களை முதல்வர் திறந்துவைத்தார்.
- இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் சர்வதேச தரத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில், உலகத்தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நிறுவப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.
- இந்த அறிவிப்பின்படி, 50 ஏக்கர் பரப்பில் ரூ.96.31 கோடி மதிப்பில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையக் கட்டடத்துக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

ராமேசுவரத்தில் குருநானக் நினைவு மையம்

- பகவான் குருநானக் நினைவைப் போற்றும் வகையில், ராமேசுவரத்தில் குருநானக் மையம் அமைக்க இடம் வழங்கப்படும் என்று முதல்வர் பழனிசாமி அறிவித்தார். மகான் குருநானக்கின் 550-ஆவது ஜயந்தி விழா சென்னையில் நவம்பர் 12 நடைபெற்றது. உலகில் ஏறக்குறைய 2 கோடியே 70 லட்சம் சீக்கியர்கள் வாழ்கிறார்கள். இது உலக மக்கள் தொகையில் 0.39 சதவீதமாகும். இந்தியாவில் 1.9 கோடி சீக்கியர்கள் வாழ்கின்றனர். இது இந்திய மக்கள் தொகையில் 2 சதவீதமாகும். கடந்த 1499-ஆம் ஆண்டு தனது 30-ஆவது வயதில் ஞானம் பெற்று தெய்வீக நிலையை அடைந்தவர் பகவான் குருநானக். அவர் தனது போதனைகளால் மக்களை நல்வழிப்படுத்தி அவர்களிடையே நிலவி வந்த மூடப் பழக்க வழக்கங்களைக் களைந்தார்.

111அடி சிவலிங்கம் திறப்பு

- உலகின் மிக உயரமான 111 அடி உயர சிவலிங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டது. கர்நாடக மாநிலம் கோலார் அருகே கம்மசந்த்ரா கோடிலிங்கேஸ்வரர் கோயிலில் அமைந்துள்ள 108 அடி உயர சிவலிங்கமே உலகின் மிக உயரமான சிவலிங்கம் என்ற பெருமையை பெற்றிருந்தது. இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள எல்லை பகுதியான உதயம் செங்கல் மகேஸ்வர சிவபார்வதி கோயிலில் அமைக்கப்பட்டுள்ள 111.2 அடி உயர சிவலிங்கம் அந்த பெருமையை பெறுகிறது

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதிக்கு ரூ. 720 கோடி

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மற்றும் உறைவிட நிதிக்கு ரூ.720 கோடியை ஈர்க்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் 10 நாள்கள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு, இந்தியா - அமெரிக்க தொழில் கூட்டமைப்பின் சர்வதேச வட்ட மேஜை கருத்தரங்கில் அவர் பங்கேற்றார்.
- சிகாகோ குளோபல் ஸ்ட்ராஜிக் அலையன்ஸ் நிறுவனத்தின் உதவியுடன், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மற்றும் உறைவிட நிதிக்கு ரூ.720 கோடியை ஈர்ப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- நகர்ப்புற ஏழைகளுக்கு குறைந்த விலையில் வீடு வழங்கும் திட்டத்தை சிகாகோ வீட்டு வசதி ஆணையம் கடந்த 80 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.

மேயர், நகராட்சி தலைவர் பதவிகளுக்கு மறைமுக தேர்தல் அவசர சட்டம் பிறப்பித்தது தமிழக அரசு

- மாநகராட்சி மேயர்கள், நகராட்சி, பேரூராட்சிகளின் தலைவர்களை கவுன்சிலர்கள் மூலம் மறைமுகமாக தேர்வு செய்வதற்கான அவசரச் சட்டத்தை ஆளுநர் ஒப்புதலுடன் தமிழக அரசு பிறப்பித்துள்ளது.
- தமிழகத்தில் 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள், 12,618 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்பட்ட ஆண்டுகள் விவரம்:

1986 முதல் 2001 வரை	நேரடி தேர்தல் முறை
2006	மறைமுகத் தேர்தல்
2011	நேரடி தேர்தல்

தமிழகத்தில் ரூ.100 கோடியில் மின்சார ஆட்டோக்கள்

- தமிழகத்தில் ரூ. 100 கோடி முதலீட்டில் மின்சார ஆட்டோக்களின் உற்பத்தி பத்து நாள்களில் தொடங்கும் என்று முதல்வர் கே. பழனிசாமி அறிவித்துள்ளார்.
- மேலும், பெட்ரோல் ஆட்டோக்களை சூழலுக்கு உகந்த மின்சார ஆட்டோக்களாக மாற்றி இயக்கும் திட்டத்தில் ரூ. 100 கோடி முதலீட்டில் கே.எம்.சி., மற்றும் மௌடோ எலெக்ட்ரிக் நிறுவனங்கள் இணைந்து மின்சார ஆட்டோக்களை இந்த மாத இறுதியில் இருந்து படிப்படியாக உற்பத்தி செய்யவுள்ளன.

100 பள்ளிகள் திட்டம்

- தன்னார்வ திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப நிறுவனங்கள் "100 பள்ளிகள் திட்டத்தை" வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ள சேத்தினால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளை மேம்படுத்துவதே இந்த "Project 100 School" திட்டத்தின் நோக்கமாகும்.
- மணிவாக்கத்தில் நடைபெற்ற அரசு பள்ளிகள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றிய மழலையர் பள்ளிகள் கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் கல்வித்துறை அமைச்சர்

சென்னையில் வருமான வரி வழக்குகளுக்கான இ-நீதிமன்றம்

- சென்னையில் வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் வழக்குகளை விசாரிக்கும் வகையில் இ-நீதிமன்றம் (நவம்பர் 15) தொடங்கப்பட்டது. வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் கடந்த 2012-ஆம் ஆண்டு முதல் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, தில்லி, நாகபுரி, மும்பை, ஆமதாபாத் ஆகிய பகுதிகளில் இ-நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் 33வது மாவட்டமாக தென்காசி உதயம்

- தமிழகத்தின் 33-வது மாவட்டமாக தென்காசி மாவட்டத்தை தமிழக முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.
- திருநெல்வேலியில் இருந்து பிரியும் இப்புதிய மாவட்டத்தை முதல்வர் பழனிசாமி தொடங்கி வைக்கிறார். விழாவில் ரூ.89 கோடி மதிப்பில் 5 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.
- 34-வது மாவட்டம் கள்ளகுறிச்சி, 35-வது மாவட்டம் திருப்பத்தூர், 36-வது மாவட்டம் ராணிப்பேட்டை

சென்னை காவல்துறையால், தோழி திட்டம் அறிமுகம்

- பாலியல் தொல்லைக்கு ஆளான பெண்கள் மற்றும் குழந்தைகளின் வீடுகளுக்கு சென்று, அவர்களுக்கு உளவியல் ரீதியாக கவுன்சிலிங் அளிக்கவும், சட்ட ரீதியாக உதவிகள் செய்யவும், சென்னை மாநகர போலீசில், 'தோழி' என்ற திட்டம் துவக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

குற்றத்தடுப்பு பிரிவு

- இதை கட்டுப்படுத்தவும், குற்றவாளிகளுக்கு கடும்தண்டனைபெற்றுத்தரவும், மத்தியஅரசு, சென்னை உட்பட, எட்டு பெருநகரங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவை துவக்கி உள்ளது.

தில்லி சர்வதேச வர்த்தக கண்காட்சியில் தமிழ்நாடு நாள் விழா தொடக்கம்

- தில்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்று வரும் 39-ஆவது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் தமிழ்நாடு நாள் விழாவை தமிழக செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கடம்பூர் ராஜு தொடக்கி வைத்தார்.
- விழா நடைபெற்ற திறந்தவெளி அரங்கில் மங்கல இசை, காவடியாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- "வணிகத்தை எளிமையாக்குதல்" என்ற கருப்பொருளில் சர்வதேச வர்த்தகக் காண்காட்சியில் தமிழக அரங்கு தயார் செய்யப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் முதல்வர் பழனிசாமி தலைமையில் நடைபெறம் திட்டங்கள் குறித்து தில்லிவாழ் தமிழர்களும், பிற மாநில மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

சிறார் காவல் நிலையம் தமிழ்நாட்டில் தொடக்கம்

- திருவள்ளூர், திருத்தனி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சிறார் காவல் நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கு முன்பு "பாலமித்ரா" என்ற பெயரில் ஹைதராபாத்தில் சிறார் காவல் நிலையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

போக்சோ திட்டம்

- இந்த சட்டம் 2012ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இருந்து வருகிறது. 18 வயதுக்குக் குறைவான அனைத்துக் குழந்தைகளும் பாலின வித்தியாசமின்றி பாலியல் துன்புறுத்தலில் இருந்து காப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் இது.

மரக்காணத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் : அதிகாரிகள் ஆய்வு

- விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் கழுவேலி ஏரியில் தேங்கும் நீரை நன்னீராக மாற்றி, சென்னை மக்களின் குடிநீர் பயன்பாட்டுக்கு கொண்டு செல்வதற்கான புதிய திட்டப் பணிகள் குறித்து தமிழ்நாடு நதிநீர் பாதுகாப்புக் கழக அதிகாரிகள் குழுவினர் நேரில் ஆய்வு செய்தனர்.

Review us on Google
4.8 ★★★★★
Vetrii IAS Academy

10. வினா - விடை

1. ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் எந்த நாளில் அனுசரிக்கப்பட்டது?
(A) அக்.26 – நவ.1 (B) அக்.28 – நவ.2 (C) அக்.29 – நவ.5 (D) அக்.31 – நவ.7

2. சர்வதேச சிக்கன தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?
(A) அக்டோபர் 25 (B) அக்டோபர் 26 (C) அக்டோபர் 28 (D) அக்டோபர் 30

3. தேசிய ஒற்றுமை தினம் எந்த ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது?
(A) 2012 (B) 2014 (C) 2016 (D) 2019

4. உலக பக்கவாத தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?
(A) அக்டோபர் 28 (B) அக்டோபர் 26 (C) அக்டோபர் 27 (D) அக்டோபர்29

5. உலக நகரங்கள் தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?
(A) அக்டோபர் 28 (B) அக்டோபர் 29 (C) அக்டோபர் 30 (D) அக்டோபர் 31

6. உலக இணைய தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?
(A) அக்டோபர் 29 (B) அக்டோபர் 26 (C) அக்டோபர் 28 (D) அக்டோபர் 27

7. பெண்கள் தொழில்முனைவோர் தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?
(A) நவம்பர் 29 (B) நவம்பர் 9 (C) நவம்பர் 21 (D) நவம்பர் 19

8. சகிப்புத்தன்மைக்கான சர்வதேச தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது?
(A) நவம்பர் 15 (B) நவம்பர் 7 (C) நவம்பர் 16 (D) நவம்பர் 18

9. எந்த ஆண்டு சாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு தொடங்கப்பட்டது?
(A) 2002 (B) 2001 (C) 2006 (D) 2005

10. எந்த ஆண்டு ஆசிய சமூகம் தொடங்கப்பட்டது?
(A) 1956 (B) 1950 (C) 1947 (D) 1962

11. பெண் இராணுவ வீரர்களை இந்திய இராணுவத்தில் எந்த ஆண்டு முதல் சேர்க்கப்பட உள்ளனர்?
(A) 2019 (B) 2020 (C) 2021 (D) 2022

12. சமுத்திர சக்தி கூட்டு கடற்படை பயிற்சி இந்தியா மற்றும் எந்த நாடுகளுக்கு இடையே நடைபெற்றது?
(A) மியான்மர் (B) மாலத்தீவு (C) இந்தோனேஷியா (D) ஸ்ரீ லங்கா

13. முதல் பிம்ஸ்டெக் துறைமுக மாநாடு எங்கு நடைபெற்றது?
(A) எண்ணூர் (B) பிராதீப் (C) சென்னை (D) விசாகபட்டினம்

14. மிலான் பயிற்சிக்கான திட்டமிடல் மாநாடு எங்கு நடைபெற்றது?
(A) கொச்சின் (B) சென்னை (C) கொல்கத்தா (D) விசாகப்பட்டினம்

15. பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய Green Channel Policy என்பதன் நோக்கம் என்ன?
(A) ஆயுதம் கொள் முதல் (B) உள்நாட்டு உற்பத்தி
(C) தர உற்பத்தி சான்றிதழ் (D) சுற்றுச்சூழல்

16. ஷஹீன்1- அணு குண்டுகளை கொண்டு சென்று தாக்குதல் நடத்த கூடிய ஏவுகணைகளை சமீபத்தில் எந்த நாடு பரிசோதித்தது?
(A) வடகொரியா (B) இஸ்ரேல் (C) தென்சூடான் (D) பாகிஸ்தான்

17. கின்னஸ் உலக சாதனை 2020 படி, உலகில் அதிக மாசு அடைந்த நகரம் எது?
(A) ராய்பூர் (B) கான்பூர் (C) டெல்லி (D) ராஞ்சி

18. இந்தியாவின் முதுபெரும் யோகா ஆசிரியர் யார்?
(A) கோதாவரி துத்தா (B) திம்மக்கா (C) சின்ன பிள்ளை (D) ஞானம்மாள்

19. உலகின் மிக உயரமான 14 மலைச் சிகரங்களை ஏழே மாதங்களில் ஏறி புதிய உலக சாதனை படைத்தவர் யார்?
(A) நிர்மல் பூர்ஜா (B) மோகன் சிங் கோஹ்லி
(C) நரேந்திர தார் ஜெயல் (D) மந்தீப் சிங் சோய்ன்

20. சமீபத்தில் காலமான ஞானம்மாள் கீழ்க்கண்ட எந்த துறையை சேர்ந்தவர்?
(A) ஆசிரியர் (B) இசை (C) யோகா (D) நடனம்

21. உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி வென்ற இந்தியர்?
(A) ரவீந்தர் (B) ரவிதஹியா (C) கௌரவ்பலியான் (D) ஆர்சன்

22. 2019-20ம் ஆண்டு விஜய் ஹாசரே டிராபியை வென்ற அணி எது?
(A) மும்பை (B) டெல்லி (C) கர்நாடகா (D) தமிழ்நாடு

23. உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் தரவரிசையில் முதலிடத்தை பிடித்த நாடு எது?
(A) சீனா (B) இந்தியா (C) ரஷ்யா (D) பிரான்ஸ்

24. (ISSF) கூட்டமைப்பின் உலக கோப்பை போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர்?
(A) யஷ்ஹஸ்வினி தேவால் (B) மானு பேக்கர்
(C) ரஹி சர்னோபத் (D) ஹீனா சித்து

25. The Far Field என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?
(A) அஷ்வின் சாங்கி (B) மாதுரி விஜய் (C) பிரீதி ஷெனாய் (D) அனிதா தேசாய்

26. புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் சித்ரலேகா ஜீட்ஷி என்பவரால் எழுதப்பட்ட புத்தகம் எது?
(A) The Great Gatsby (B) Kashmir (C) Pride and Prejudice (D) Little Women

27. 2019ம் ஆண்டு சக்ஹாரோவ் பரிசு வென்றவர் யார்?
(A) இல்ஹாம் தொடி (B) நிதிஷ் குமார்
(C) விக்ரம் ஷர்மா (D) ரமேஷ் குமார்

28. பெரு நிறுவனங்கள் சமூக பொறுப்பு திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(A) 2000 (B) 2002 (C) 2004 (D) 2006

29. செலவு நிர்வாகத்துக்காக எந்த துறைமுகத்துக்கு தேசிய விருது அண்மையில் வழங்கப்பட்டது?
(A) ஜவஹர்லால் நேரு (B) விசாகப்பட்டினம்
(C) வ.உ.சி. (D) சென்னை

30. 2019ம் ஆண்டின் இந்திரகாந்தி விருது பெற்றவர் யார்?
(A) சண்டி பிரசாத் (B) மன்மோகன் சிங்
(C) ஷேக் ஹசினா (D) அங்கேலா மெர்கல்

31. 2019ஆம் ஆண்டின் ராஜ ராம் மோகன் ராய் விருது வென்றவர் யார்?
(A) குலப் கோதாரி (B) ராஜ் செங்கப்பா
(C) சஞ்சய் சாய்னி (D) அனு ஆப்பிரகாம்

32. ஏ.பி. எல். எப். உலகளாவிய ஆசியன் விருது வென்றவர் யார்?
(A) கே.எம்.பிர்லா (B) ரத்தான் டாடா
(C) முகேஷ் அம்பானி (D) இந்திரா நூயி

33. பாலா கைலாசம் நினைவு விருது யாருக்கு கிடைத்தது?
(A) ஆர்.வி.ரமணி (B) சி.வி.கிருஷ்ணா
(C) நரசிம்மா (D) எஸ்.பி.பாலகிருஷ்ணா

34. சர்வதேச குழந்தைகள் அமைதி விருது 2019 வென்றவர் யார்?
(A) கிரேட்டா தும்பெர்க் (B) முகமது அல் ஜவுண்
(C) ஹேக் முகமது (D) மலாலா யூசப்

35. ஷாலா தர்பான் போர்டல், அண்மையில் எங்கு தொடங்கப்பட்டது?
(A) டெல்லி (B) மும்பை (C) கொல்கத்தா (D) பெங்களூர்

36. ஸ்வயம் 2.0 போர்டல் எங்கு தொடங்கப்பட்டது?
(A) பஞ்சாப் (B) ஹரியானா (C) புதுடெல்லி (D) புவனேஸ்வரர்

37. பின்வரும் எந்த மாநிலம் குழந்தைகள் உரிமைகள் மீறல்கள் பற்றி தகவல் தெரிவிக்க Sisu Suraksha செயலியை அறிமுகம் செய்துள்ளது?
(A) சிக்கிம் (B) அஸ்ஸாம் (C) ஒடிசா (D) திரிபுரா

38. பணியாளர்கள் தேர்வு ஆணையத்தின் புதிய தலைவராக யார் நியமிக்கப்பட்டார்?
(A) பிரஜ் ராஜ் ஷர்மா (B) பங்கஜ் குமார்
(C) பூஜா கடியன் (D) சந்தியாராணி தேவி

39. தென்னிந்தியாவின் முதலாவது பெண் தீயணைப்பு வீரராக நியமிக்கப்பட்டவர் யார்?
(A) கார்த்திகா (B) அபிநயா (C) பிரீத்தா (D) ரம்யா

40. வெளிநாட்டு கடற்படையில் உயரதிகாரியாக இணைந்துள்ள முதல் இந்திய பெண் யார்?
(A) கராபி கோகோய் (B) லலிதா மாத்தூர்
(C) அஞ்சலி மோகன் (D) நந்தினி அவாஸ்தி

41. அமெரிக்காவின் மெட்ரோ பொலிட்டன் அருங்காட்சியத்தின் கௌரவ அறங்காவலராக நியமிக்கப்பட்டவர் யார்?
(A) ரோஷினி நடாஸ் (B) ஸ்மிதா வி. கிருஷ்ணா
(C) கிரண் மகஸீந்தர் (D) நீடா அம்பானி

42. பின்வருவனவற்றில் எந்த சேவையை ஊக்குவிக்க சமீபத்தில் இந்திய அரசு நிர்விக் திட்டத்தை அறிமுகப்படுத்தியது?
(A) கல்வித் துறை சேவைகள் (B) சுகாதாரத் துறை சேவைகள்
(C) நிதி சேவைகள் (D) ஏற்றுமதி துறை

43. காந்தி சங்கல்ப் யாத்திரையின் நோக்கம் என்ன?
(A) பிரிவினைவாதத்தை தடுத்தல்
(B) நாடு முழுவதும் ஒற்றுமை ஏற்படுத்தல்
(C) அமைதி சகோதரத்துவம், சமூக நல்லிணக்கம்
(D) தூய்மையான இந்தியா

44. பின்வரும் எந்த முதல் நகரம் "தோழி" என்ற திட்டத்தை தொடங்கப்பட்டது?
(A) மதுரை (B) திருச்சி (C) கரூர் (D) சென்னை

45. ஆர்.வி.எஸ். ராகவன் குழு எதற்காக அமைக்கப்பட்டது?
(A) பொதுத்துறை நிறுவனங்கள் (B) போட்டி சட்டம்
(C) பொது விநியோக முறை (D) பங்கு விலாஸ் கொள்கை

46. பின்வரும் எந்த பகுதியை "புல்புல்" புயல் தாக்கியது?
(A) தமிழ்நாடு (B) ஒடிசா மற்றும் மேற்கு வங்கம்
(C) கேரளா (D) இமாச்சலபிரதேசம்

47. பின்வரும் எந்த மாநிலம் புவி சார் குறியீடு வழங்கியதை குறிக்கும் வகையில் ரசகொல்லா திவாஸ் கொண்டாடியது?
(A) ஒடிசா (B) குஜராத் (C) பஞ்சாப் (D) மேற்கு வங்காளம்

48. கலிங்கா சமூக அறிவியல் நிறுவனம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(A) 1985 (B) 1989 (C) 1993 (D) 1997

49. ராஜசபாவின் முதல் அமர்வு எந்த ஆண்டு நடைபெற்றது?
(A) 1949 (B) 1950 (C) 1951 (D) 1952

50. இந்திய சர்வதேச செரி மலர் திருவிழா எங்கு நடைபெற்றது?
(A) ஷில்லாங் (B) இடானகர் (C) திஸ்பூர் (D) ஷிம்லா

51. நிலவில் எந்த வாயு இருப்பதாக சந்திராயன் 2 கண்டறிந்துள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது?
(A) ஆர்கான் - 40 (B) ஆர்கான் - 20 (C) ஆர்கான் - 60 (D) ஆர்கான் – 80

52. காசநோயை ஒழிக்க உலகநாடுகள் நிர்ணயித்த காலக்கெடு என்ன?
(A) 2025 (B) 2027 (C) 2030 (D) 2032

53. பின்வரும் எந்த ரயில்வே நிலையம் "சுகாதார ஏ.டி.எம்." அறிமுகம் செய்துள்ளது?
(A) டெல்லி (B) மும்பை (C) லக்னோ (D) ஜெய்பூர்

54. மின்சாரத்தில் இயங்கும் சிறிய ரக விமானத்தை உருவாக்கிய நாடு எது?
(A) நாசா –அமெரிக்கா (B) இஸ்ரோ - இந்தியா
(C) ஜாக்ஸா – சீனா (D) எதுவுமில்லை

55. 2020ஆம் ஆண்டு எந்த நாடு செவ்வாய் கிரகத்திற்கு லேண்டரை அனுப்ப சோதனை மேற் கொண்டுள்ளது?
(A) சீனா (B) இந்தியா (C) ஆஸ்திரேலியா (D) ஜப்பான்

56. "SHIKHAR SE PUKAR" என்ற குறும்படத்தின் மையக்கருத்து என்ன?
(A) காற்று மாசு (B) நீர் பாதுகாப்பு
(C) மணல் கொல்லை (D) கனிமங்கள்

57. சனி கோளின் நிலவின் முதல் ஒட்டுமொத்த புவியியல் வரைப்படம் நிறைவு செய்த நிறுவனம் எது?
(A) இஸ்ரோ (B) நாசா (C) JAXA (D) ரோஸ்கோஸ்மோஸ்

58. அயோத்தி எந்த நதிகரையில் அமைந்துள்ளது?
(A) சரயு (B) யமுனா (C) காக்ரா (D) கங்கா

59. தகவல் அறியும் உரிமை சட்டம் இயற்றிய போது பிரதம அமைச்சராக இருந்தவர் யார்?
(A) மன்மோகன் சிங் (B) அடல் பிஹாரி
(C) தேவகௌடா (D) நரசிம்ஹா

60. DEFCOM 2019 எந்த நகரத்தில் நடைபெற்றது?
(A) புதுடெல்லி (B) சென்னை (C) கொல்கத்தா (D) பெங்களூரு

61. பின்வரும் எந்த ரயில்வே மண்டலம் "ரயில் தண்டோரா" தொடங்கியது?
(A) கிழக்கு ரயில்வே (B) மேற்கு ரயில்வே
(C) தெற்கு ரயில்வே (D) வடக்கு மத்திய ரயில்வே

62. சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(A) 2012 (B) 2013 (C) 2015 (D) 2016

63. தேசிய பாதுகாப்பு காவலர் அமைப்பு எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(A) 1978 (B) 1984 (C) 1992 (D) 1998

64. பின்வரும் எந்த மாநில யூனியன் பிரதேசம் அவசர உதவி பெறும் எண்ணான 100 பதில் 112 என அறிமுகம் செய்த மாநிலம் எது?
(A) உத்திரபிரதேசம் (B) அஸ்ஸாம் (C) தெலுங்கானா (D) ஆந்திரா பிரதேசம்

65. ஐந்தாவது சர்வதேச சாலை தொழில்நுட்ப மாநாடு நடைபெற்றது?
(A) மும்பை (B) பூனே (C) டெல்லி (D) பாட்னா

66. பின்வரும் எந்த இந்திய தொழில்நுட்ப நிறுவனம் "அரசி" என்ற "நின்றபடியே செல்லக்கூடிய சக்கர நாற்காலியை வெளியிட்டுள்ளது?
(A) ஐஐடி மெட்ராஸ் (B) ஐஐடி பாம்பே (C) ஐஐடி இந்தூர் (D) ஐஐடி கான்பூர்

67. பசிகாட் எங்கே அமைந்து உள்ளது?
(A) அசாம் (B) மணிப்பூர் (C) மிசோரம் (D) அருணாச்சல பிரதேசம்

68. நம் நீர் திட்டம் மூலம் எந்த மாவட்டத்தில் 178 குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளது?
(A) கரூர் (B) காரைக்கால் (C) சென்னை (D) தூத்துக்குடி

69. தேசிய பழங்குடி திருவிழா 2019 எங்கு நடைபெற்றது?
(A) பூனே (B) பாட்னா (C) டெல்லி (D) காங்டாக்

70. பின்வரும் எந்த மாநில அரசு 15 வருடங்களின் பழமையான அரசு வாகனங்களை தடை செய்துள்ளது?
(A) ஜார்கண்ட் (B) பீகார் (C) அசாம் (D) மேற்கு வங்காளம்

71. நேரடி அகழ்வாராய்ச்சி தளத்துடன் கூடிய மூன்று மாடி அருங்காட்சியகம் இந்தியாவில் எந்த இடத்தில் திறக்கப்படும்?
(A) சிந்தாமணி (B) கொந்தகை (C) மாங்குலம் (D) செடபட்டி

72. ஆறாவது கிராம மற்றும் விவசாய நிதி தொடர்பான உலக காங்கிரஸ் எங்கு நடைபெற்றது?
(A) மும்பை (B) பூனே (C) நியூடெல்லி (D) சூரத்

73. சமீபத்தில் எந்த நாடு கருணைக் கொலைக்கு அனுமதி அளித்துள்ளது?
(A) எத்தியோபியா (B) ஈரான் (C) பிரான்ஸ் (D) நியூசிலாந்து

74. பாலி யாத்ரா திருவிழா எந்த மாநிலத்தில் நடைபெற்றது?
(A) மேற்கு வங்காளம் (B) ஒடிசா (C) மகாராஷ்ரா (D) சத்தீஸ்கர்

75. யோகா தொடர்பான சர்வதேச மாநாடு எங்கே நடைப்பெற்றது?
(A) நியூடெல்லி (B) மைசூர் (C) சென்னை (D) லடாக்

76. முதல் தேசிய வேளாண் கெமிக்கல்ஸ் காங்கிரஸ் எங்கே நடத்தப்பட்டது?
(A) நியூடெல்லி (B) சென்னை (C) மைசூர் (D) லே

77. இந்தியாவின் எந்த நகரம் 2020 ஜனவரி முதல் பிளாஸ்டிக் மற்றும் ப்ளாஸ்டிக் பாட்டில்களை தடை செய்ய உள்ளது?
(A) ஜெய்ப்பூர் (B) மும்பை (C) கோவா (D) லக்னோ

78. எந்த நாடு சர்வதேச உயிரியல் இந்திய மாநாட்டை நடத்தியது?
(A) சீனா (B) ஸ்வீடன் (C) ஆஸ்திரேலியா (D) இந்தியா

79. பின்வரும் எந்த நாடு பிரம்மோஷ் ஏவுகணை கொள் முதல் செய்ய முடிவு செய்துள்ளது?
(A) தாய்வான் (B) மலேசியா (C) பிலிப்பைன்ஸ் (D) இந்தோனேஷியா

80. COP 25 காலநிலை உச்சி மாநாட்டை நடத்த சமீபத்தில் எந்த நாடு முன் வந்தது?
(A) ஸ்பெயின் (B) சிலி (C) இந்தியா (D) சீனா

81. தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?
(A) டெல்லி (B) ஜகார்த்தா (C) மணிலா (D) டாக்கா

82. சிலி நாடு விலகிய பிறகு பின்வரும் எந்த நாடு ஐ.நா. காலநிலை மாற்ற மாநாடு நடத்துகிறது?
(A) நியூயார்க், அமெரிக்கா (B) பாரிஸ், பிரான்சு
(C) மாட்ரிட், ஸ்பெயின் (D) டெல்லி, இந்தியா

83. வரும் 2020ஆம் ஆண்டு எந்த நாடு "வெற்றி தினம்" கொண்டாடப்பட உள்ளது?
(A) இந்தியா (B) ரஷ்யா (C) பிரேசில் (D) தென் ஆப்பிரிக்கா

84. இரண்டாவது உலக மத தலைவர்கள் மாநாடு எங்கு நடை பெற்றது?
(A) அசெர்பைஜான் (B) இந்தியா (C) உபெகிஸ்தான் (D) லண்டன்

85. பின்லாந்தை சேர்ந்த KONE தயாரிப்பு வசதிகளை எங்கு துவங்கியுள்ளது?
(A) சென்னை (B) வேலூர் (C) விழுப்புரம் (D) காஞ்சிபுரம்

86. கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவை திட்டம் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
(A) 2012 (B) 2014 (C) 2016 (D) 2018

87. 27வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு எங்கு நடைபெற்றது?
(A) டெல்லி (B) பெங்களூரு (C) சென்னை (D) புவனேஷ்வர்

88. தேசிய நிஷ்தா முயற்சி எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது?
(A) கோவா (B) டெல்லி (C) ஜம்மு & காஷ்மீர் (D) லடாக்

89. சி.என்.ஜி. துறைமுக முனையம் குஜராத்தின் எந்த பகுதியில் அமைக்கப்பட உள்ளது?
(A) போர்பந்தர் (B) பாவ்நகர் (C)மாதவ்பூர் (D)முந்த்ரா

90. பத்திரிக்கையாளர் மீதான அத்துமிறல்களிலிருந்து பாதுகாக்க எந்த மாநிலஅரசு சட்டம் இயற்ற உள்ளது?
(A) ஆந்திரபிரதேசம் (B) தெலுங்கானா (C)ஜார்கண்ட் (D)சட்டீஸ்கர்

91. காமன்வெல்த் இளைஞர்கள் பாராளுமன்ற நிகழ்வு எங்கு நடைபெற்றது?
(A) ஒடிசா (B) டெல்லி (C) ஆந்திரா (D) ஜம்மு & காஷ்மீர்

92. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் இளம் விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பு 2020ஆம் ஆண்டு எந்த நாடு நடத்துகிறது?
(A) தஜிகிஸ்தான் (B) இந்தியா (C) பாகிஸ்தான் (D) உஸ்பெகிஸ்தான்

93. இந்திய விமானப்படையின் இந்திய விமானப்படை மருத்துவ நிறுவனத்தின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?
(A) ஹைதராபாத் (B) சுலூர் (C) புவனேஷ்வர் (D) பெங்களூரு

94. முதல் மூங்கில் தொழில்நுட்ப பூங்கா எங்கு அமைய உள்ளது?
(A) அசாம் (B) சிக்கிம் (C) பீகார் (D) இமாச்சலபிரதேசம்

95. கங்கா உத்சவ் எங்கு நடைபெற்றது?
(A) மும்பை (B) பூனே (C) புதுடில்லி (D) பெங்களூரு

96. உயர் ஆற்றல் பொருள் ஆராய்ச்சி மையம் எங்கு அமைந்துள்ளது?
(A) ஹைதராபாத் (B) சென்னை (C) பெங்களூர் (D) பூனே

97. உள்ளடங்கிய நிதிச்சேவைகள் உட்பட பாதுகாப்பான பணப்பரிமாற்ற செயல்பாடுகளின் பட்டியலில் எந்த நாடு முன்னணியில் உள்ளது?
(A) கொலம்பியா (B) ஜமைக்கா (C) உருகுவே (D) இந்தியா

98. நிதி தடுப்பு மாநாடு 2020ஆம் ஆண்டு எந்த நாட்டில் நடைபெற உள்ளது?
(A) ஆஸ்திரேலியா (B) பிரான்ஸ் (C) இந்தியா (D) சிங்கப்பூர்

99. மேட்ச் பிக்சிங் தொடர்பான குற்றங்களை குற்றவாளியாக்கிய முதல் தெற்காசிய நாடு எது?
(A) சீனா (B) பெங்களூரு (C) பூடான் (D) ஸ்ரீலங்கா

100. இஸ்லாமியக் குழுவான "அசார் அமைப்பை" தடை செய்த நாடு எது?
(A) பாகிஸ்தான் (B) நேபாளம் (C) சீனா (D) வங்காளம்

1	2	3	4	5	6	7	8	9	10
B	D	B	D	D	A	D	C	B	A
11	**12**	**13**	**14**	**15**	**16**	**17**	**18**	**19**	**20**
C	C	D	D	A	D	B	D	A	C
21	**22**	**23**	**24**	**25**	**26**	**27**	**28**	**29**	**30**
A	C	A	B	B	B	A	C	C	A
31	**32**	**33**	**34**	**35**	**36**	**37**	**38**	**39**	**40**
A	A	A	A	A	C	B	A	D	A
41	**42**	**43**	**44**	**45**	**46**	**47**	**48**	**49**	**50**
D	D	D	D	B	B	D	C	D	A
51	**52**	**53**	**54**	**55**	**56**	**57**	**58**	**59**	**60**
A	C	C	A	A	B	B	A	A	A
61	**62**	**63**	**64**	**65**	**66**	**67**	**68**	**69**	**70**
C	C	B	A	C	A	D	B	C	B
71	**72**	**73**	**74**	**75**	**76**	**77**	**78**	**79**	**80**
B	C	D	B	B	A	C	D	C	A
81	**82**	**83**	**84**	**85**	**86**	**87**	**88**	**89**	**90**
B	C	B	A	D	C	C	D	B	D
91	**92**	**93**	**94**	**95**	**96**	**97**	**98**	**99**	**100**
B	B	D	A	C	D	D	C	D	D

சந்தா விவரம்

சந்தா எண் : .....

காலம் ☑	மொத்த பிரதிகள்	விலை
ஒரு வருடம் ☐	12	820/-
ஒன்றரை வருடம் ☐	18	1200/-
இரண்டு வருடம் ☐	24	1600/-

(தெளிவாகப் பூர்த்தி செய்து சந்தா தொகையுடன் அனுப்பி வைக்கவும்)

பெயர் : .....

விலாசம் : .....

.....

.....

.....

வயது : .....

கல்வித் தகுதி : .....

பிறந்த தேதி : .....

தொலைபேசி : .....

மின்னஞ்சல் (E-mail) : .....

Please Enclose DD / Mo No .....

Dated ..... in favour of "Vetrii IAS Study Circle". Payable at Chennai.

தேதி : .....

கையொப்பம் : .....

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

VETRII IAS STUDY CIRCLE

F Block New No. 1, 9th Street, 1st Avenue Main Road, Chinthamani, Anna Nagar (E), Chennai - 102.

Ph : 044-26265356 / 9790874927

MODE OF PAYMENT

☐Cheque ☐D/D ☐Online transfer

Cheque / D.D. No. : ☐☐☐☐☐☐☐☐

Amount : ☐☐☐☐☐☐☐☐

Date : ☐☐☐☐☐☐☐☐

Bank : ----------

OUR BANK DETAILS

A/C Name : **VETRII IAS STUDY CIRCLE**

BANK : HDFC BANK

ACCOUNT NO : 50200000435399

IFSC CODE : HDFC 0000017

AMOUNT

DEPOSITED : .....

DATE : .....